கோத்தபாய ராஜபக்ச:

1989இல் நடந்த பெரும் அட்டூழியங்களில் சிறிலங்கா ஜனாதிபதியின் வகிபாகம்



JDS
Journalists for Democracy in Sri Lanka

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

உள்ளடக்கம்

1. 1989இல் கோத்தபாய ராஜபக்சவின் வகிபாகம் ---------- 09

2. அரசாங்க விசாரணைகள் ---------- 13
முழுமையான அறிக்கைகள் இரகசியமாக வைக்கப்பட்டன

3. மாத்தளை மாவட்டம் ---------- 17
பெரும் புதைகுழி

4. மாத்தளை மாவட்டத்தில் நந்தசேன கோத்தபாய ராஜபக்சவின் ---------- 20
தலைமையின் கீழ் நடாத்தப்பட்ட வன்முறைகளுக்காக அவருக்கு
எதிரான வழக்கு

5. சட்டப் பகுப்பாய்வு ---------- 39

பின்னிணைப்புக்கள் ---------- 46
கோத்தபாய ராஜபக்சவின் பணி வரலாறு ---------- 46
மாத்தளை மாவட்டத்தில் காணாமற் போனவர்கள் ---------- 48

அறிமுகம்

சிறிலங்காவில் 2022 ஏப்ரலில் நடந்த அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் உச்சகட்டத்தில் இருந்த நிலையில், அவற்றை நிறுத்துவதற்கு சிறிலங்காவின் பிரதமர் மகிந்த ராஜபக்ச கடந்த காலத்தில் நடந்த மாபெரும் அநியாயங்களை மீண்டும் மீண்டும் உதாரணம் காட்டினார். அவர் எண்பதுகளின் பிற்பகுதியில் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு, பயங்கர விலைகொடுத்த ஆர்ப்பாட்டக்காரர்களுடன் தற்போது சனநாயக சார்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரை ஒப்பிட்டார். கடந்த காலத்தை ஒப்பிட்டு பின்வருமாறு அவர் கூறினார்:

அந்தக் கட்சிகள் சனநாயகத்தை நிராகரித்ததால் நமது இளைஞர்களின் இரத்தம் தெருக்களில் ஓடியது. அவ்வியக்கம் வெளிப்பட்டபோது ஆயிரக்கணக்கான இளைஞர்கள் உயிருடன் ரயர்களின் போட்டு எரிக்கப் பட்டார்கள். இப்புரட்சி 60,000 ற்கு மேற்பட்ட இளைஞர்களின் உயிர்களைக் காவு வாங்கிய 1988–89 காலப்பகுதியே எங்களுடைய வரலாற்றில் மிக மோசமான காலமாக உள்ளது என்னும் அளவுக்கு அது மோசமாக இருந்தது. அந்த இளைஞர்களது உயிர்களைக் காப்பாற்ற நாங்கள் எடுத்த பாரிய முயற்சிகளை உங்களது பெரியவர்கள் நினைவில் வைத்திருப்பார்கள்.[1]

சிங்களவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்த அநியாயங்களில் தனது சொந்தச் சகோதரர் கோத்தபாய ராஜபக்சாவும் அவரது நெருங்கிய சகாக்களும் ஈடு பட்டிருந்தார்கள் என்று கூறப்பட்டதை மகிந்த ராஜபக்ச கவனிக்கத் தவறிவிட்டார்.

சிறிலங்கா ஜனாதிபதி நந்தசேன கோத்தபாய ராஜபக்ச கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் சிறிலங்கா இராணுவத்தில் கடமையாற்றினார். இதில் பெரும்பாலான காலத்தை தமிழ்ப் போராளிகளுடனான சண்டையில் செலவிட்டார். ஆனால் 1980களின் பிற்பகுதியில் சிறிலங்காவின் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களில் நடந்த மிருகத்தனமாக கிளர்ச்சி முறியடிப்பு நடவடிக்கையில் அவர் வகித்த பங்கு எப்போதுமே கவனிக்கப்படாமலே கடந்துபோயுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி அல்லது ஜே.வி.பி ஆயுதப் போராட்ட அமைப்பின் கோட்டையாகத் திகழ்ந்த மாத்தளை மாவட்டத்தின்[2] இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரியாக கோத்தபாய இருந்தபோது நடந்த சம்பவங்கள் மீதே இவ்வறிக்கை கவனம் செலுத்துகின்றது.[3]

சிறிலங்காவின் மத்திய மாகாணத்திலுள்ள மாத்தளை மாவட்டத்திற்குப் பொறுப்பாக 1989 மே முதல் 1990 ஜனவரி வரை கோத்தபாய நியமிக்கப்பட்டிருந்தார். 1988 ஜனவரி 1ஆம் திகதிற்குப் பின்னர் காணாமற்போனவர்கள் தொடர்பான சம்பவங்களை விசாரிப்பதற்கென தொடர்ந்துவந்த நான்கு ஜனாதிபதி ஆணைக்குழுக்களால் விசாரணை நடாத்தப்பட்டதும் இக்காலப்பகுதியே ஆகும். கோத்தபாய ராஜபக்ச மாத்தளை மாட்டத்திற்குப் பொறுப்பாக இருந்த காலப்பகுதியில் காணாமற்போன 700 பேருடைய – பெருன்பான்மையாக சிங்களவர்களது – பெயர்களை இவ் ஜனாதிபதி ஆணைக் குழுக்கள் பட்டியலிட்டன. இவ்வாணைக் குழுக்களால் வெளியிடப்பட்ட ஆவணங்களிலிருந்து எடுக்கப்பட்ட முழுமையான விபரங்கள் இவ்வறிக்கையில் பின்னிணைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இராணுவ மற்றும் காவல்துறை உட்பட்ட ஆயுதப்படைகளின் மாவட்ட ஒருங்கிணைப்புப் பொறுப்பதிகாரியாக இருந்த கோத்தபாய ராஜபச்சவுக்கு கிட்டத்தட்ட 350,000 பேர் வசித்துவந்த சிறிய மாவட்டமான மாத்தளையில் எந்தளவு வன்முறை நடந்தது என்பது தெரிந்திருக்கும்.[4] தலையற்ற உடல்கள் வயல்களில் வீசப்பட்டும், தலைகள் கூர்த்தடிகளில் குத்தப்பட்டு சாலையோரங்களிலும் பாலங்களிலும் காட்சிப் படுத்தப்பட்டும் மோசமான பாரிய அட்டூழியக் குற்றங்கள் நடந்த காலப்பகுதி இது. கட்டவிழ்த்துவிடப்பட்ட இப்பயங்கரவாதம்

[1] ஏப்ரல் 11, 2022 இல் நாட்டு மக்களுக்கு மகிந்த ராஜபக்ச ஆற்றிய உரை https://www.colombotelegraph.com/index.php/special-statement-by-prime-minister-rajapaksa-regarding-the-current-situation-full-text/

[2] 1980 களின் கடைசி – 1990 களின் முற்பகுதிவரை சிங்களவர்கள் மாவட்ட சனத்தொகையில் சிங்களவர்கள் 80 வீதமாகவும், தமிழர்கள் 12 வீதமாகவும், முஸ்லீம்கள் 7 வீதமாகவும் இருந்தார்கள்.

See https://core.ac.uk/download/pdf/52179135.pdf

[3] 1971 இல் நடந்த முதலாவது கலவரத்தின்போது, தம்மைத்தாமே மார்க்ஸிசியக் கட்சி எனப் பிரகடனப்படுத்திய, வறுமையிலும் வேலையில்லாத் திண்டாட்டத்திலும் வாடிய கிராமப்புற சிங்கள மக்களதும் இளைஞர்களதும் பேராதரவைப் பெற்ற ஜே.வி.பி யால் நடாத்தப்பட்ட ஆயுதப் புரட்சியை அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான கூட்டணி அரசாங்கம் அடக்கியபோது ஆயிரக்கணக்கான மக்கள் கொலைசெய்யப்பட்டார்கள். Rajesh Venugopal (2010), Sectarian Socialism: The Politics of Sri Lanka's Janatha Vimukthi Peramuna (JVP); Kearney (1977) A Note on the Fate of the 1971 Insurgents in Sri Lanka and Arasaratnam (1971) The Ceylon Insurrection of April 1971: Some Causes and Consequences. ஆகிய புத்தகங்களைப் பார்க்கவும்.

[4] 1981 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது, மாத்தளை மாவட்ட சனத்தொகை எண்ணிக்கை 357, 354.

பற்றித் தெரியாதவர் யாருமே இருக்கவில்லை. உண்மையிலேயே 1989இல் காணாமற் போன பிள்ளைகள் எங்கிருக்கின்றார்கள் என்று கேட்டு பெருமெண்ணிக்கையிலான சிங்களப் பெற்றோர்கள் கோத்தபாய ராஜபக்சவிடம் சென்றமைக்கான ஆதாரங்கள் உள்ளன. மேலும் தடுப்பு நிலையங்களின் அவர் இருந்ததையும் அவர்கள் கண்டுள்ளார்கள். குடும்பங்கள் ஆணைக்குழுவிற்கு வாக்கு மூலங்கள் வழங்கிய நேரத்தில் கோத்தபாய ராஜபக்ச ஓரளவு அறியப்பட்ட இராணுவ கேணலாக இருந்தார். 30 வருடங்களின் பின்னர், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையில் நடந்த போரின்போது பாதுகாப்புச் செயலர் என்ற தனது பதவியில் போர்க்குற்றக் குற்றச்சாட்டுக்களில் சிக்குண்டு, தற்போது சிறிலங்காவின் ஜனாதிபதியாக மாறியுள்ளார். நன்கு அறியப்பட்ட ஒரு அரசியல் புள்ளியாக மாறுவதற்கு முன்னர், அந்நேரத்தில் மாத்தளை மாவட்டத்தில் மோசமான சித்திவதைக் கூடங்களாகத் திகழ்ந்த பாடசாலைகள், விருந்தினர் விடுதிகள் பலவற்றில் அவர் காணப்பட்டதை உயிர்தப்பியவர்கள் நினைவுகூர்ந்துள்ளார்கள் என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கத் தக்கது.

ஒரு சம்பவத்தில், தடுத்துவைக்கப்பட்டு, அதுவரை எங்கிருக்கின்றார் என்று தெரிந்திராத தன்னுடைய அரசியல் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர் ஒருவர் எங்கிருக்கின்றார் என்று விசாரித்து தன்னுடைய சகோதரர் கோத்தபாயவுக்கு 1989 பிற்பகுதியில் மகிந்த ராஜபக்ச கடிதம் எழுதியுள்ளார். இதில் நகைமுரண் என்னவெனில், காணாமற்போன குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த 1989இன் பிற்பகுதியில் உருவாக்கப்பட்ட அன்னையர் முன்னணியின் சக நிறுவனராக மகிந்த இருந்தார். எனினும், 2009 இல் அரசுத் தலைவராக அவர் உருவானார். இவரது அரசாங்கமே பெருந்தொகையானோரை வலிந்து காணாமல் ஆக்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டது. இன்னொரு சம்பவத்தில், காணாமற்போனவர்களின் குடும்பங்கள் பலவற்றின் சார்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கோத்தபாய ராஜபக்சவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.[5] கடத்தித் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களின் தாய்மார்களும் இதர உறவினர்களும், தங்கள் குடும்ப உறுப்பினர்கள் பற்றிய தகவல்களைத் தேடி, கோத்தபாய ராஜபக்ச தங்கியிருந்த மாத்தளை விஜயா கல்லூரி இராணுவ முகாமிற்குத் திரும்பத் திரும்ப சென்றார்கள். விஜயா கல்லூரி என்பது ஒரு உள்ளூர் பாடசாலையாகும். கோத்தபாயவின் பாதுகாப்புப் படைகளால் அது கையகப்படுத்தப்பட்டு, சந்தேகதாரிகள் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்படும் இடமாகப் பயன்படுத்தப்பட்டது. அந்நேரத்தில் இராணுவம் பாடசாலை மற்றும் பல்கலைக் கழகக் கட்டடங்களைக் கையகப்படுத்தி அவற்றை தடுத்துவைப்பு மற்றும் சித்திரவதை மையங்களாகப் பயன்படுத்தியது பொதுவான நடைமுறையாக இருந்தது.[6] உள்ளூர் மனித உரிமை அமைப்புக்கள், சுயாதீன சட்டத்தரணிகள், சிறிலங்கா சட்டத்தரணிகள் சங்கம் உட்பட பல அமைப்புக்கள் விஜயா கல்லூரி முகாம் தொடர்பாக வெளிப்படையாகவே தங்கள் கவலையைத் தெரியப் படுத்தியிருந்தார்கள். சோதனைச் சாவடிகளின் மக்கள் நிறுத்தப்பட்டு, அல்லது கிராமங்களின் நடந்த சுற்றிவளைப்புக்கள் பெரும் கைதுநடவடிக்கைகளில் கைதுசெய்யப்பட்ட மக்கள் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் எனத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்களால் இலக்கத் தகடற்ற அரசாங்க வாகனங்களில் கடத்திச் செல்லப்பட்டமை நன்கு அறியப்பட்ட ஒன்று. தடுத்து வைக்கப்பட்டு கடத்தப்பட்டவர்களில் அப்பகுதிகளில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்களும் சிறுவர்களும் அடங்குவர். இந்த பரவலான மற்றும் திட்டமிட்டு நடாத்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு தனது கட்டளையின் கீழ் உள்ள படையினரே பொறுப்பு என்பதை கோட்டாபய ராஜபக்ச அறிந்திருந்தார் அல்லது அறிந்திருக்க வேண்டும். இருந்தும் அவர் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தார். மாறாக, சிறிலங்கா அரசாங்கத்தின் பரந்துபட்ட கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கை மூலோபாயத்தில் அவர் ஒரு கருவியாக செயற்பட்டார்.[7]

அரசு அமைத்த ஆணைக்குழுக்கள் பலவற்றின் விசாரணையிலேயே அங்கு நடந்த கடத்தல்கள், சட்டவிரோதத் தடுப்புக் வைப்புகள், சித்திரவதைகள் மற்றும் கொலைகள் விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் கவலையளிக்கும் விதமாக, அவ்விசாரணைகள் எவ்வித நடவடிக்கைகளுக்கும் இட்டுச் செல்லவில்லை. உயிர் தப்பியவர்களின் வாக்கு மூலங்களை ஆவணப்படுத்தியதே ஒரு அசாதாரணமான கதையாகும்: பல மாவட்டங்களைப் போலவே, மாத்தளைக்கும் அர்ப்பணிப்புள்ள சிறிலங்கா அரசுப் பணியாளர்கள் குழு ஒன்று பாரிய கடத்தல்கள் மற்றும் கொலை நிகழ்வுகள் நடைபெற்ற 5 ஆண்டுகளுக்குப் பின்னர் அனுப்பப்பட்டது. அக்குழுவினர், குற்றத்தினை முறையிட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பதிவுகள் மற்றும் விரிவான வாக்குமூலங்களின் அடிப்படையில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் குறித்த விரிவான பட்டியல் மற்றும் குற்றம்

[5] திருமதி கமலாவதி சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக தனக்கு நினைவு இல்லையெனவும், ஆனால் அந்நேரத்தில் பெரு மெண்ணிக்கையான இளைஞர்கள் காணாமற்போன சம்பவங்கள் நிகழ்ந்தன எனவும் தற்போது அமைச்சராக இருக்கின்ற நந்திமித்திர எக்கநாயக்கே பலவருடங்களின் பின்னர் ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்தார். "எதிர்க்கட்சியிலிருந்து நான் மட்டுமே பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தேன். மற்றைய நான்கு பேரும் ஐ.தே.கவைச் சேர்ந்தவர்கள். அந்நேரத்தில் மாத்தளை மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ச (தனக்கு) மிகவும் ஒத்துழைப்பு வழங்கியதுடன் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர்களுடன் மிகவும் கருணையுடன் நடந்துகொண்டார். மிகப்பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபட்ட இளைஞர்கள் கூட புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டார்கள். குறிப்பிட்ட (கமலாவதி) சம்பவம் விதிவிலக்காக நடந்திருக்கவேண்டும் என அவர் மேலும் கூறினார். 7 ஏப்ரல் 2013 https://www.colombotelegraph.com/index.php/i-was-sent-back-when-i-went-to-meet-lt-colonel-gotabaya-to-plead-the-release-of-my-sons-a-mother/

[6] https://itjpsl.com/press-releases/sri-lanka-torture-map-with-jds, ITJP JDS Torture Map.

[7] https://srilankabrief.org/sri-lanka-the-years-of-blood/


நடந்த முறைகள் மற்றும் போக்குகள் ஆகியவற்றை தயார் செய்து, காவல்துறையினர் மற்றும் இராணுவத்தினர் மீது வழக்குகள் பதியப்படவேண்டும் என்று பரிந்துரை செய்தனர். குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்களில் கோத்தபாய ராஜபக்சவின் பெயரும் ஒன்று.

புதிதாக தேர்ந்தேடுக்கப்பட்ட, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கீழான அரசாங்கம் அமைத்த ஆணைக்குழு, நடந்த சம்பவங்களுக்கு முன்னர் பதவிவகித்த அரசாங்கமே பொறுப்பு என்று நிறுவுவதிலேயே முனைப்பு காட்டின. சந்திரிகா குமாரதுங்கா தனது ஜனாதிபதி தேர்தல் பரப்புரையின் போது, காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு நீதியையும், பொறுப்புகூறலையும் தனது அரசு வழங்கும் என்று வாக்குறுதி அளித்தார். அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு, பாதிக்கப் பட்டவர்களின் பெயர்களை உள்ளடக்கிய நீண்ட பட்டியல் குறுகிய காலப் பதிப்பாக வெளியிடப்பட்டது. ஆனால், ஆச்சரியமளிக்கும் விதமாக, பதவி வகித்த குற்றம் சாட்டப் பட்டவர்களின் பெயர்கள் வெளியிடப்படாமல் முடக்கப்பட்டது. பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் மீதான நீதி நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டாலும், அரசியல் விருப்பம் இல்லாத காரணத்தாலும், வழக்கிலும் கிழக்கிலும் தமிழர்களுக் கெதிரான போர் தொடர்வதற்கு, இராணுவ ஆள் சேர்ப்பு தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டிய காரணத்தாலும், அவை பெரும்பாலும் செயலற்றே போயின. மேலும், அரசாங்க இரகசிய உத்திரவின் பேரால் குற்றம் சாட்டப்பட்டவர்களது பெயர்கள் 2030 வரை வெளியடப்படாமல் காக்கப்பட்டு வருகிறது. அதற்குள் பல குற்ற சாட்டப்பட்டவர்கள் உயிரிழப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தரப்பின் முயற்சிகள் மற்றும் நம்பிக்கைகளுக்கு மாறாக, அரசியல் விருப்பமும் அரசின் துரித செயல்பாடும், பாதுகாப்புப் படைகள் பொறுப்புக்கு உள்ளாக்கப்படுவதற்கான அழுத்தம் வெகு விரைவில் நீர்த்துப் போகச் செய்தன. இது துரிதப்படுவதற்கான அரசியல் காரணமாக, தமிழர்களுக்கெதிரான போர் வடகிழக்கில் தீவிரமடைந்ததும், இராணுவத்திற்கான ஆள் சேர்ப்பு உச்சகட்டத்தை எட்டியிருந்ததுமாகும். கூடுதலாக ஆட்கள் தேவையுள்ள தருணத்தில், பாதுகாப்புப் படைகளைப் பொறுப்பாக்குவதோ அல்லது காவல்துறை மற்றும் இராணுவத்தை சீரமைப்பதையோ தவிர்க்குமாறு அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இந்த அரசியல் ரீதியான செயலற்ற போக்கே, தண்டனையிலிருந்து நெடுங்காலம் தப்பிப்பதற்கும், அதுபோன்ற பெருங்கொடுமைகளை மீண்டும் நிகழ்த்தவும் வழிவகை செய்தது. 1989 கொடுஞ்செயல்களில் குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளில் பலர் மீண்டும் 2009 இல் நடைபெற்ற பெருங்கொடுமைகளுக்குக் காரணமாக அமைந்தனர். சில பத்தாண்டுகளுக்குப் பிறகு, பல அரசியல் நடிகர்கள் தங்கள் கட்சிகளில் இருந்து வேறு கட்சிகளுக்கும், கூட்டணிகளுக்கும் மாறி மாறி சென்று விட்டதனால், அவர்களை பொறுப்புக்குள்ளாக்கும் அதிகார அமைப்பிலிருந்து அவர்களை தனியாக பிரித்துப் பார்ப்பது இயலாத காரியமாகிவிட்டது. 1989 இல் பல பத்தாயிரம் சிங்களக் குடும்பங்களுக்கு நடந்ததன் நினைவுகள் முடக்கப்பட்டு, அதன் மீது, சிங்கள பௌத்த தேசியமும் தமிழர்கள் மீதான வெறுப்பும் ஒட்டப்பட்டு விட்டது. அதேசமயத்தில், அரசாங்கம் அமைத்த ஆணைக்குழுக்களால் வெளியிடப்படாத அறிக்கைகளில் இடம்பெற்றிருந்த குற்றம் சாட்டப்பட்ட, தங்கள் மக்களையே கொன்றுகுவித்த அதிகாரிகள் பலர், அக்குற்றச்சாட்டுகளின் கறைபடியாமலேயே, அவர்களது துறைகளில் மிக உயர்ந்த பதவிகளை அடைந்தனர். குற்றம் சாட்டப்பட்டவர்களின் பட்டியலில் பல அரசியல்வாதிகளின் பெயர்களும் இடம்பெற்றிருந்தன.

இன்று, சிறிலங்காயின் அதிகாரமிக்கவர்களாகக் கருதப்படக் கூடிய தற்போதைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மற்றும் பாதுகாப்பு செயலர் ஜெனரல் ஜி டி எச் கமல் குணரத்னே ஆகியோர், சட்டத்திற்குப் புறம்பாக பல பத்தாயிரம் சிங்களர்களைக் கொன்று குவித்த 1989 கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றியவர்கள் தான். 2009 போரின் போதும், இவர்கள் மூவரும் முக்கியப் பொறுப்புகளை வகித்தவர்கள் தான்.

1980களின் மாவட்டங்களைக் காட்டும் இலங்கை வரைபடம்



கோத்தபாய ராஜபக்ச



1. 1989இல் கோத்தபாய ராஜபக்சவின் வகிபாகம்

கால அட்டவணை

<u>கோத்தபாய ராஜபக்சவின் பணி வரலாறு பின்னிணைப்பு 01 இல் உள்ளது:</u>

கோத்தபாய ராஜபக்ச 1983 முதல் 1990 வரை, சிறிலங்கா இராணுவத்தின் கஜாபா படைப்பிரிவில் (1GR) முதலாவது படையணியில், தளபதிக்கு அடுத்த நிலையிலும் பின்னர் தளபதியாகவும்[8] பணி புரிந்தார். கோத்தபாய ராஜபக்சவின் அதிகாரப்பூர்வ சரிதையை எழுதிய சி ஏ சந்திரப்பிரேமா[9] தற்போது ஜெனிவாவில் சிறிலங்காவின் ஐ.நாவுக்கான நிரந்தர தூதுவர், இவ்வாறு எழுதியுள்ளார்:

> மே 1, 1989 அன்று ... கோத்தபாய கஜாபா படைப்பிரிவின் முதலாவது படையணியின் தளபதியாக நியமிக்கப்பட்டார். வடமாராட்சி நடவடிக்கையின் போது இருந்ததைப் போலல்லாமல் தற்போது நிரந்தரமாக நியமிக்கப்பட்டார். [10]

மேலும் சந்திரப்பிரேமா இவ்வாறு குறிப்பிடுகிறார்:

> இந்த பதவிஉயர்வால் மாத்தளையில் மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரியாக ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சி முடியும் வரை(அதிகாரப்பூர்வமாக 13 நவம்பர் 1989) பதவி வகித்தார். ஜனவரி 1990இல், அமெரிக்காவிலிருந்த தனது குடும்பத்தினரை சந்திக்க மூன்று மாத விடுப்பெடுத்து பயணப்பட்டார். [11]

கஜாபா படைப்பிரிவின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில், கோத்தபாய ராஜபக்ச கஜாபா படைப்பிரிவின் முதலாவது படையணியின் தளபதியாக 8 ஜூலை 1989 முதல் 26 ஜனவரி 1991 வரை இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[12]

கிடைக்கப்பெற்ற தரவுகளை, ஐ.டி.ஜெ.பி, கோத்தபாய ராஜபக்ச மே 1, 1989 முதல் கஜாபா படைப்பிரிவின் முதலாவது படையணியின் செயல் தளபதியாகவும் பின்னர் 8 ஜீலை 1989 முதல் தளபதியாகவும் செயல்பட்டு, ஜனவரி 1990இல் மாத்தளையிலிருந்து சென்றார் என்ற கணிப்பின் அடிப்படையில் ஆய்வு செய்துள்ளது. [13]

மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளரின் பணி

மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளராக கோத்தபாய பதவி வகித்தார். எளிமையான இராணுவக் கட்டமைப்பின் படி, மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளர் அம்மாவட்டத்திற்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட படையணியின் தளபதியாகவே இருப்பார்.[14] ஒருங்கிணைப்பு அதிகாரி அம்மாவட்டத்திலுள்ள அனைத்து பாதுகாப்புப் படைகளையும், உளவுத்துறை உட்பட தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாகக் குறிப்பிடும் வரலாற்று ஆய்வாளர்கள், அவ்வதிகாரிகள் அதிகாரம் பரவலாக்கப்பட்ட சூழ்நிலையில் பணியாற்றியதாகவும், சில அதிகாரிகள் சிக்கல் தரக்கூடிய, பொதுமக்களது உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய சட்ட வழிமுறைகளை கைவிட்டிருந்ததாகவும் குறிப்பிடுகின்றனர்.[15]

---

[8] https://www.facebook.com/pg/gotabayar/about/ (deleted); also

https://military-history.fandom.com/wiki/Gotabaya_Rajapaksa and https://www.britannica.com/biography/Gotabaya-Rajapaksa

அவருடைய இணையத்தளத்தில் காணப்படும் இக்காலப்பகுதி பற்றிய விபரிப்பானது அக்காலப்பகுதியிலுள்ள விபரங்களைப்போலவே போதாமலேயே உள்ளது. https://web.archive.org/web/20190524091651/http://gotabaya.info/about.html

https://alt.army.lk/gajabaregiment/1-gajaba-regiment

சமிந்திர பெர்ணாண்டோவின் தகவலின்படி, அன்றைய தினத்தின் அயோமாவிற்கு வெற்றிகிடைத்தது. War on terror revisited, 30 June 2013: Fort Benning, Georgia, USA in 1989 பயிற்சிலிருந்து திரும்பி வந்ததும் உடனடியாகவே கட்டளையதிகாரி பதவிளைப் பொறுப்பெடுத்துக்கொண்டார்.

Reproduced at http://slwaronterror.blogspot.com/2013/06/ayoma-wins-day.html

[9] கோத்தபாய ராஜபக்சவால் ஜெனிவாவிலுள்ள ஐ.நாவிற்கான சிறிலங்காவின் நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.

[10] C A Chandraprema, Gota's War, published 2012, p172-173 itjpsl.com/dossiers/chandraprema-dossier

[11] C A Chandraprema 2012, op cit, Infantry School of Fort Benning, Georgia, p177 இல் அவர் மேலதிக காலாட்படைப் பயிற்சி கற்கைநெறியைத் தொடர்ந்தார்.

[12] https://alt.army.lk/gajabaregiment/1-gajaba-regiment

[13] (தமது பணிகளில் அமர்த்தப்படுவதற்கு முன்னதாக சிலகாலம் கட்டளைவழங்கும் பதவிகளில் அதிகாரிகள் செயற்படுவது பொதுவான நடைமுறையென வர்த்தமானி அறிவித்தல்கள் சுட்டிக்காட்டுகின்றன)

[14] Thomas A Marks and Lt Gen (Ret) Tej Pratap Singh Brar in Impunity: Countering Illicit Power in War and Transition, edited By Michelle Hughes and Michael Miklaucic, Washington, DC: Center for Complex Operations, 2016, p227,

https://cco.ndu.edu/Portals/96/Documents/books/Impunity/CHAP_9%20Sri%20Lanka.pdf?ver=2017-01-19-102815-647

[15] Thomas A Marks and Lt Gen (Ret) Tej Pratap Singh Brar, op cit, p227

மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரியாகவும், முதலாவது கஜாபா படைப்பிரிவின் தளபதியாகவும் பணியாற்றிய கோத்தபாய, படைப்பிரிவின் தலைவரும், தலைமை ஒருங்கிணைப்பு அதிகாரியாகவும் இருப்பவருக்குக் கீழ் பணியாற்ற வேண்டும். தலைமை ஒருங்கிணைப்பு அதிகாரி பிரதேச அளவிலான தளபதிக்குக் கீழ் பணியாற்றினார்.[16] இந்தப் படிநிலையானது கூட்டு நடவடிக்கை ஆணையத்தில்(JOC) பிரதான பணியாளர் அதிகாரியாகவும், அவ்வாணையத்தின் இயக்குநராகவும் பணியாற்றிய கேணல் விமல்ரத்னே[17] வரை சென்றது. விமல்ரத்னே இராணுவ அதிகாரிகளின் தலைவராக இருந்த எல் டி சி இ வைதியரத்னேவின் (செசில் வைதியரத்னே என்று அறியப்பட்ட) கீழ் பணியாற்றினார். வைதியரத்னே இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கேவின்[18] கீழ் பணியாற்றினார். ஹமில்டன் வணசிங்கே அரசின் பாதுகாப்பு அமைச்சரான ரஞ்சன் விஜேரத்னேவின் கீழ் பணியாற்றினார்.

கோத்தபாய ராஜபக்சவின் அதிகாரப்பூர்வ சுயசரிதையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது, "கோத்தா பொறுப்பேற்ற பிறகு, மாத்தளை மாவட்டத்தின் முக்கிய பகுதிகள் அனைத்திற்கும் படைவீரர்கள் அனுப்பப்பட்டனர். இதன் மூலம் கோத்தபாயவின் கட்டுப்பாட்டின்கீழ் அந்த நகரம் மட்டுமல்ல ஒட்டுமொத்த மாவட்டமும் உள்ளதை இது காட்டியது."[19] மேலும் எதிர்க்கட்சியின் மாத்தறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மஹிந்த விஜிசேகரா தடுத்து வைக்கப்பட்டபோது, அவர் தன்னை விடுவிக்குமாறு கோத்தபாயவிடமே கோரினார்.

கீழ்நிலை அதிகாரிகள்

தற்போதைய இராணுவத் தளபதி, ஜெனரல் சவேந்திர சில்வா, 1989 இல், மாத்தளையில் கோத்தபாய ராஜபக்சவின் கீழ் பணியாற்றினார்.[20] அன்றைய காலத்தில், கோத்தபாயவின் பிற படையணிகளின் தளபதிகளாக இருந்தவர்கள் என கருதப்பட்டவர்களில், ஜெகத் டயஸ்[21] இராணுவ ஊழியர்களின் தலைவரானார். மற்றொருவரான சுமந்த பெரரா இராணுவ ஊழியர்களின் துணைத்தலைவராகவும் பின்னர் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவால் 2019–21 காலகட்டத்தில் சிவில் ஊழியராகவும் நியமிக்கப்பட்டார்.[22] சாட்சியங்களின் அடிப்படையில் பார்த்தால், 2009 இல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் போருக்குப் பின்னர் காவல்துறை தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்ட மறைந்த மகிந்த பாலசூர்யாவும் 1989 இல் கோத்தபாயவுக்குக் கீழ் பணியாற்றியவர்தான்.

மேலதிகாரிகள்:

மாத்தளை மாவட்டத்திற்கு கோத்தபாய அனுப்பப்பட்ட நேரம், அன்றைய பாதுகாப்பு அமைச்சரான ரஞ்சன் விஜயரத்னேவின் கிளர்ச்சி முறியடிப்பு உத்தியுடன் ஒத்துப்போனது. கடந்த பெப்ரவரி 2016இல் ரிவிரா செய்தித்தாளில், தான் மாத்தளையில் நியமிக்கப்பட்டதற்கு சில இடங்களில் இருந்து எதிர்ப்புகள் கிளம்பியதாகவும், அதற்குக் காரணம் தனது சகோதரர் மகிந்த ராஜபக்ச இன்றைய நிலைக்கு முரணாக, இராணுவத்தினர் புரிந்த தவறுகளை சுட்டிக்காட்டிய மனித உரிமைப் போராளியாக அன்று அறியப்பட்டிருந்தார் என்பதுதான் என்று கோத்தபாய கூறியுள்ளார்:

நான் மாத்தளைக்கு எனது படையுடன் அனுப்பப்பட்ட போது, அப்பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரஞ்சன் விஜயரத்னேவிடம், "அவரால் எவ்வாறு பணி செய்ய முடியும் – அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது மகிந்த ராஜபக்சவின் சகோதரர்களில் ஒருவர். மகிந்த ராஜபக்ச நமக்கு எதிரான ஜே.வி.பியை ஆதரிக்கிறார். அதனால் இது சிக்கல்களை உருவாக்கும்" எனத் தெரிவித்தனர். ரஞ்சன் விஜெரத்னேவும் இதனை இராணுவத் தளபதி (ஹமில்டன்) வணசிங்கேவிடம் பகிர்ந்து கொண்டார். இராணுவத் தளபதியும் "அவரை அங்கிருந்து மாற்றி வேறொருவரை அங்கு நியமிக்கலாம்", என்று ஜெனரல் விமல்ரத்னேவிடம் கூறினார். அந்த காலத்தில், கஜாபா படைப்பிரிவு ஜெனரல் விமல்ரத்னேவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. அவர் இராணுவத் தளபதியிடம், "கோத்தபாயவை (மாத்தளை) மாவட்டத்தின் இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரி பதவியிலிருந்து நீக்கிவிடலாம், ஏனெனில் அப்பதவி அரசாங்கம் வழங்குவது, ஆனால் கஜாபா படைப்பிரிவின் தலைமைப் பொறுப்பிலிருந்து அவரை நீக்க முடியாது. ஏனெனில், படைப்பிரிவின் தலைமைப் பொறுப்பிற்கு அவர் பொருத்தமானவர்", என்று தெரிவித்தார். மேலும் அவர்,

[16] Thomas A Marks, State Response To Terrorism In Sri Lanka, in Countering Terrorism and Insurgency in the 21st Century, International Perspectives, Volume 1: Strategic And Tactical Considerations, edited By James J F Forest, p266

[17] Later Brigadier and Brigadier General

[18] https://www.army.lk/past_army_commanders, Hamilton Wanasinghe who held the position from August 1988 to November 1991

[19] Gota's War, op cit, p174

[20] https://www.dailynews.lk/2019/09/09/sports/196320/army-commander-–-former-cricketer-stc-matale

[21] https://itjpsl.com/reports/jagath-dias-dossier

[22] Gota's War, op cit, p173, 'லெப்டினன்களான சவேந்திர சில்வா, ஜகத் டையஸ் மற்றும் சுமந்த பெரேரா ஆகியோர் மாத்தளையில் அவருடைய படையணியின் கட்டளையடிகாரிகளாக இருந்தார்கள்.

https://itjpsl.com/reports/gotabaya-rajapaksa-complaint

"கோத்தபாயவை நீக்கப்போவதாக இருந்தால் ஒட்டுமொத்த படைப்பிரிவையும் வேறொரு இடத்திற்கு அனுப்பிவிடுங்கள்", என்று இராணுவத் தளபதியிடம் தெரிவித்தார். இராணுவத் தளபதியும் இதை பாதுகாப்பு அமைச்சரிடம் தெரிவிக்க, அவர் என்னைச் சந்திக்க வந்தார். நான் அவரிடம் எனது திட்டம் என்ன என்பதை விளக்கினேன். எங்கள் உரையாடலும் அதன் பின் மதிய உணவும் முடிந்தபின், என்னைத் தனியாகச் சந்தித்த பாதுகாப்புத்துறை அமைச்சர், "நீங்கள் மகிந்தவின் சகோதரர் என்பதால் உங்களை அப்பகுதியிலிருந்து வெளியேற்றுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னைக் கேட்டுக் கொண்டனர். ஆனால், இதனை நான் இராணுவத் தளபதியிடம் தெரிவித்தபொழுது, நீங்கள் ஒரு நேர்மையான இராணுவ அதிகாரி என்று அவர் தெரிவித்தார். நீங்கள் உங்கள் பணியினைத் தொடரலாம். ஒருவேளை உங்களுக்கு ஏதேனும் சிக்கல் நேர்ந்தால், வேறு யாரிடமும் தெரிவிக்க வேண்டாம், நேராக என்னிடம் வாருங்கள் நான் தீர்த்து வைக்கிறேன்" என்று கூறினார்.[23]

இந்தப் பேட்டியே, கோத்தபாய மூத்த அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் இருந்ததையும், அமைச்சரிடமும், இராணுவத் தலைமையிடமும் நேரடியாக தொடர்பு கொண்டிருந்ததையும் காட்டுகிறது. நிகழும் மனித உரிமை மீறல்களை தனது உயர் அதிகாரிகளிடம் முறையிடுவது சட்டப்படி அவரது கடமையாகவும், அவ்வாறு முறையிட அவருக்கு வாய்ப்பிருந்ததை இந்த பேட்டி உறுதிப்படுத்தியும் உள்ளது. ஆனாலும் அவர் அதனை செய்யவில்லை.

மேலும் இந்தப் பேட்டி, அப்போது மனித உரிமைப் போராளியாக இருந்த மகிந்த ராஜபக்ச தனது சகோதரரின் கட்டுப்பாடில் இருந்த அம்மாவட்டத்தில், நிகழ்த்தப்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களை வெளிக்கொணராமலும், அதனைப் பற்றி பேசுவதை இன்று வரை தவிர்ப்பது எதனால் என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

[23] சிங்களத்தில் எழுதப்பட்ட றிவிற மூலப்பிரதி இணையத்தில் இல்லை. 2016 பெப்ரவரியில் சிலோன் வீக்கினால் ஆங்கிலத்தில் மீள் பிரசுரம் செய்யப்பட்டது: https://ceylonweek.com/2016/02/19/gotabaya-rajapaksa-telling-how-to-come-sarath-fonseka-lead-to-army.html

கட்டளைப் படிநிலை

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா
பாதுகாப்பு அமைச்சரும் முப்படைத் தளபதியும்

நேரடி மேலதிகாரி

ரஞ்சன் விஜயரத்தினா
பாதுகாப்புக்கான அரச அமைச்சர்

நேரடி மேலதிகாரி

ஜெனரல். கமில்ரன் வணசிங்க
இராணுவத் தளபதி Lt

நேரடி மேலதிகாரி

கேணல். விஜய விமலரட்ண
PSO கூட்டு நடவடிக்கைக் கட்டளைப் பணியகத்தின் தலைமை அதிகாரியும் நடவடிக்கைப் பணிப்பாளரும்

நேரடி மேலதிகாரி

ஜெனரல் செசில் வைத்தியரட்ண
இராணுவத் தலைமை அதிகாரி

Reporting to

பிரதேசம் 01

தெற்கு, சம்பிரகமுவா, ஊவா மாகாணங்களும், கொழும்பு மாவட்டம் தவிர்ந்த மேல்மாகாணமும்

பிரதேசம் 02

வட மத்திய, மத்திய, வடமேற்கு மாகாணங்கள்

பிரதேசம் 03

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்

நேரடி மேலதிகாரி

தலைமை ஒருங்கிணைப்பு அதிகாரி (பிரிகேட் மட்டம்)

பிரதேச/பகுதி கட்டளையதிகாரி

நாடானது மூன்று கட்டளைப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

நேரடி மேலதிகாரி

லெப்.கேணல் நந்தசேன கோத்தபாய ராஜபக்ச
CO 1GR, மாத்தளை மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரி

2. அரசாங்க விசாரணைகள் – முழுமையான அறிக்கைகள் இரகசியமாக வைக்கப்பட்டன

வலுக்கட்டாயமாக அகற்றப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மீதான விசாரணை மேற்கொள்வதற்கான ஜனாதிபதி ஆணைக் குழுக்கள்

மூன்று ஆணைக் குழுக்களையும்[24] ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, ஜனவரி 1, 1988 முதல், வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டவர்கள்'[25] மற்றும் காணாமல் போனவர்கள் பற்றிய புகார்கள் குறித்து விசாரிக்க அமைத்தார். மாத்தளை மாவட்டம் குறித்த குற்றச்சாட்டுகள் மத்திய மண்டல ஆணைக்குழுவிலும்(CZC) அகில இலங்கை ஆணைக்குழுவிலும்(AIC) பதியப்பட்டன. அகில இலங்கை ஆணைக்குழுவிற்கு மண்டல அளவிலான ஆணையங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க அதிகாரம் உண்டு. "மண்டல ஆணைக்குழுக்கள் எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை" என்பதால் (பக்கம் 45 AIC அறிக்கை), அகில இலங்கை ஆணைக்குழுவில் பதியப்பட்ட 16,305 குற்றச்சாட்டுகளின் மீதும் எந்த விசாரணையும் நடத்தவில்லை.[26] அகில இலங்கை ஆணைக்குழு ஒரு இறுதி அறிக்கையை தயார் செய்து அதனை ஜனாதிபதியிடம் சமர்பித்தது. அவ்வறிக்கை தற்போது இணையத்தில் காணக்கிடைக்கிறது. [27]

ஒவ்வொரு ஆணையமும் குறிப்பிட்ட பூகோளப் பகுதியில் இயங்கியது: மத்திய, வடமேற்கு, வடமத்திய மற்றும் உவா மாகாணங்கள்வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மேற்கு, தெற்கு மற்றும் சபரகமுவா மாகாணங்கள். அவை, மற்றவற்றுள், "ஜனவரி 1, 1988 முதல், யாராவது தங்களது வசிப்பிடங்களிலிருந்து வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டார்களா அல்லது காணாமலாக்கப்பட்டார்களா" என்பது குறித்து விசாரிக்க அவை பணிக்கப்பட்டன. [28]

அவை இருந்த மூன்று ஆண்டுகளில், மண்டல ஆணைக்குழுக்களில் 27,526 குற்றச்சாட்டுகள் பதியப்பட்டன. அவற்றை ஆராய்ந்து, அவற்றுள், சுமார் 16,800 குற்றச்சாட்டுகள் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றியது என கண்டறியப்பட்டது. 1,681 வழக்குகளில்,[29] "பொறுப்பானவர்களைக் காட்டும் நம்பத்தகுந்த ஆதாரங்களை" இந்த ஆணைக்குழுக்கள் கண்டுபிடித்தன. அவர்கள் பெரும்பாலும் ஆயுதப்படை வீரர்கள் (இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை) மற்றும் காவல்துறையினராக இருந்தாலும், சில அரசியல்வாதிகள்,

[24] சிறிலங்காவிலுள்ள விசாரணை ஆணைக்குழுக்கள் உண்மையைக் கண்டறியும் அமைப்புகளாகும் அவற்றிற்கு எவ்வித சட்ட அதிகாரமும் இல்லை. இங்கு அவர்களின் பணியானது, அவர்களின் ஆணை அடிப்படையில் பெறப்பட்ட முறைப்பாடுகளை விசாரித்து, விசாரணைகளை மேற்கொள்வதாகும், அதாவது, சம்பந்தப்பட்ட நபர்களின் காணாமல் போனமை தொடர்பாக "பொறுப்புள்ள நபர்களை சுட்டிக்காட்டும் நம்பகமான தகவல்களை" வெளிக்கொணர வேண்டும். சாத்தியங்களின் சமநிலையின் அடிப்படையில் அவர்கள் விசாரணைகள் மற்றும் விசாரணைகளுக்குப் பிறகு முடிவுகளை எடுக்க வேண்டும் மற்றும் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட ஆதாரங்களைத் தேடக்கூடாது. ஆணைக்குழுக்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை ஜனாதிபதிக்கே தெரிவிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. அனைத்து உள்ளடக்கங்களையும் அல்லது பகுதிகளை வெளியிடாடல் வைத்திருப்பதற்குரிய அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அத்தகைய ஆணைக்குழுவின் எந்தவொரு பரிந்துரையையும் நடைமுறைப்படுத்துவது ஜனாதிபதியின் தனிப்பட்ட விருப்பத்திற்கு உட்பட்டது. M C M Iqbal, 'Impunity in Sri Lanka and the Commissions of Inquiry into Disappearances', Groundviews, 26 July 2018.

[25] இச்சொற்பதமானது அரசதரப்பால் கடத்தப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டவர்களைச் சுட்டிக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது..

[26] M C M Iqbal, 'Impunity in Sri Lanka and the Commissions of Inquiry into Disappearances', Groundviews, 26 July 2018

[27] http://www.disappearances.org/news/mainfile.php/reports_srilanka/

[28] The Law and Society Trust, A Legacy to Remember; Sri Lanka's Commissions of Inquiry 1963.2002: A Reference Guide to Commission Reports with a Tabulated List of Recommendations. September 2010, p.20, http://www.iceelamtamils.com/wp-content/uploads/2018/01/A-LEGACY-TO-REMEMBER-SRI-LANKA'S-COMMISSIONS-OF-INQUIRY.pdf

1987 களில் ஜே.வி.பி கிளர்ச்சியுடன் தொடர்புபட்ட பல காணாமற்போனோர் தொடர்பான சம்பவங்கள் ஆணைக்குழுக்களால் விசாரிக்கப்பட்ட காலத்திற்குள் உள்ளடக்கப்படவில்லை. அவர்களுக்கு ஒரு காலப்பகுதி வழங்கப்பட்டிருக்காமையால், அவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நடந்த பல புதிய வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோர் தொடர்பாக சம்பவங்கள் உட்பட, பெருந்தொகையான விசாரணைகளை அவர்களால் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. அதைவிட, 1988 ஜனவரி 1 இற்குப் பின்னர் வடக்கிலும் கிழக்கிலும் நடந்த ஏறத்தாள 16,000 சம்பவங்கள் இவ்வாணைக் குழுக்களின் காலவரையறைக்குள் வரவில்லை.

[29] United Nations Human Rights Committee, Fourth Periodic Report of Sri Lanka, CCPR/C/LKA/2002/4, 18/10/2002, para 156

ஊர்காவல் படையினர், சில தேசிய துணைப் படை வீரர்கள்[30] மற்றும் கிராம அதிகாரிகளாகவும் இருந்தனர்.

இந்த மூன்று மண்டல ஆணைக்குழுக்களின் ஆய்வறிக்கைகளும் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அவை பொதுமக்கள் பார்க்கும் வகையில் வெளியிடப்பட்டன. ஒவ்வொரு வழக்கிலும் அவ்வாணைக்குழுக்கள் விசாரணைக்குப் பின் கண்டுபிடித்த விவரங்கள், தனியான பின்னிணைப்பாக, அரசு ஆவண காப்பகத்தில் 2030 வரை விதிக்கப்பட்ட இரகசியத் தடை உத்தரவின் காரணமாக வெளியிடப்படாமல் வைக்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, கடந்த ஏப்ரல் 1998 இல், வலுக்கட்டாயமாக நீக்கப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் பற்றி விசாரிக்க அகில இலங்கை ஆணைக்குழு (AIC என்று அறியப்பட்டது) ஒன்றை ஜனாதிபதி நியமித்தார்.[31] இதன் நோக்கம் மூன்று மண்டல ஆணைக்குழுக்களிடமும் சமர்ப்பிக்கப்பட்ட ஆனால் விசாரிக்கப்படாத 10,136 குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதாகும்.[32] கட்டாயமாக காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய 4,473 குற்றச்சாட்டுகளை விசாரித்த அந்த ஆணைக்குழு, தனது இறுதி அறிக்கையை சமர்பித்தது. அந்த அறிக்கையின் கண்டுபிடிப்புகளும் பரிந்துரைகளும் வெளியிடப்பட்டாலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் குறித்த அதன் விசாரணைகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

ஆனாலும், அந்த அறிக்கையில் இடம்பெற்ற 318 குற்றம் சாட்டப்பட்டவர்களின் இரகசியப் பட்டியல் பற்றியும், அவர்கள் மீது குற்றவியல் விசாரணைகள் தொடங்குவதற்கு ஏதுவான சாட்சியங்கள் இருப்பதை அந்த ஆணைக்குழு கண்டுபிடித்ததையும் ITJP அறியும்.[33] இவர்களது பெயர்களும், மூன்று மண்டல ஆணைக்குழுக்களும் பதிவு செய்த குற்றம் சாட்டப்பட்டவர்கள் பட்டியலும் வெளியிடப்பட வேண்டும்.

இலங்கை அரசியல்வாதிகள் எவ்வாறு பொறுப்புக் கூறலுக்கு துரோகமிழைத்தனர்

ஆணையக்குழுக்களின் அறிக்கைகள் கிடைக்கப்பெற்ற உடன், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா குற்றவியல் விசாரணைக்கும் அதனைத் தொடர்ந்து வழக்கு நடத்தவும் முதலில் தயாராகவே இருந்தார். எடுத்துக்காட்டாக, மத்திய மண்டல ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை கிடைக்கப்பெற்ற உடன், அவர் காவல்துறை ஆய்வாளருக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கும், கிடைக்கப்பெற்ற அறிக்கைகளின் அடிப்படையில் விசாரணையைத் துவங்குமாறும், ஒரு மாதத்திற்குப் பிறகு தனக்கு அறிக்கை அனுப்புமாறும் தகவல் அனுப்பினார்.[34] ஆனாலும், முதலில் இராணுவ வீரர்கள் கோப்புகளை சரிபார்க்க மண்டல ஆணைக்குழுக்களின் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டாலும், அப்போதைய துணைப் பாதுகாப்பு அமைச்சரான அனுராத ரத்வத்தே (ஜனாதிபதியின் மாமா) தங்களுக்கு அப்படி எந்த ஆணையும் கிடைக்கப்பெறவில்லை என்று மறுத்தார். மேலும், வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ந்து நடந்து வந்த யுத்தத்தால், சந்திரிகாவின் பதவிக்காலத்திலேயே பல காணாமலாக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. [35] மேலும் 2001 பாராளுமன்ற தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியடைந்து, ரணில் விக்ரமசிங்கே பிரதமராக பதவியேற்றவுடன், நோர்வே அரசின் முயற்சியால் தொடங்கிய விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுவார்த்தைக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. அதனால், ஜனாதிபதி குமாரதுங்கா தனது அதிகாரத்தை பகிர்ந்தளிக்க வேண்டிய நிலைக்கு வந்தார். எப்படிப் பார்த்தாலும், ஆயுதப்படைகளின் மீதான விசாரணையில் எந்த முனைப்பும் காட்டப்படாததற்குக் காரணம், அப்போது வடக்கிலும் கிழக்கிலும் நடந்த போரிற்கு அரசாங்கம் ஆயுதப்படைகளை நம்பியிருந்தது. [36]

[30] 1985 இல் ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கத்தால் 1980 களின் நடுப்பகுதியில் நாட்டின் வடக்கு – கிழக்கில் மோதல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து கொண்டுவரப்பட்ட 1985 அணிதிரட்டல் மற்றும் துணைப்படைகளின் சட்டத்தின் கீழ், ஊர்காவல் படையினரும் தேசிய துணைப்படையினரும் இணைக்கப்பட்டார்கள். வடக்குக் கிழக்கிற்கும் நாட்டின் இதர பகுதிக்கும் இடைப்பட்ட எல்லையோரப் பகுதியிலேயே ஊர்காவல்படையினர் பிரதானமாகப் பணிக்கமர்த்தப்பட்டார்கள்.

[31] 'Final Report of the Commission of Inquiry into Involuntary Removal or Disappearance of Persons in the Western, Southern and Sabaragamuwa Provinces', 1997, 'Final Report of the Commission of Inquiry into Involuntary Removal or Disappearance of Persons in the Northern and Eastern Provinces', 1997; 'Final Report of the Commission of Inquiry into Involuntary Removal and Disappearance of Certain Persons (All Island), 2001 பார்க்கவும்.

[32] அதனது ஆணைக்கு உட்படாத 16,305 முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்தது. (அதன் இறுதி அறிக்கையின் பக்கம் 45). இம்முறைப்பாடுகளை விசாரணைசெய்து கொள்ளத்தக்க வகையில் மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று AIC பரிந்துரை செய்தது. மேலும், பாதிக்கப்பட்டவர்களில் ஒரு தொகையினர் ஆணைக்குழுக்களிடம் முறைப்பாடு செய்யவில்லை என்பதும், ஜே.வி.பி கட்சியாகவே அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

[33] OISL, §483 'OISL "அகில இலங்கை ஆணைக்குழுவிற்கு குற்றவாளிகள் எனப்படுவோரின் 318 பேர் அடங்கிய இரகசியப் பட்டியல் ஒன்று கிடைத்தது.

[34] இரகசிய நபர் ஒருவருடனான நேர்காணல், 2020 பெப்ரவரி. இதன் மறுப்பு The Island செய்தித்தாளில் வெளியிடப்பட்டது. ஆனால் இணையத்தில் தற்போது இல்லை.

[35] 1995 பிற்பகுதி – 1996 ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டை, பாதுகாப்புப் படைகள் மீளக் கைப்பற்றியபின்னர், "காணாமற்போனவர்கள்" தொடர்பாக தாம் பெற்றுக்கொண்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1990 களின் பின்னர் அதியுச்ச எண்ணிக்கையான 648 ஐத் தொட்டதாக 1997 ஏப்ரலில், அனைத்துலக மன்னிப்புசபை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

https://www.amnesty.org/download/Documents/160000/asa370101997en.pdf.

[36] அந்த நேரத்தில் விசாரணைக்கு வந்த விதிவிலக்கான வழக்குகளின் ஒன்று, இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள எம்பலப்பிட்டியாவில் 1989 மற்றும் 1990 களில் இராணுவத்தால் பாடசாலை அதிபர் ஒருவரின் ஒத்துழைப்புடன் கைதுசெய்யப்பட்ட பின்னர், காணாமற்போன டசின்கணக்கான பாடசாலை மாணவர்கள் சம்பந்தப்பட்ட வழக்காகும்.

ICJ, op cit, p13. See also Rajan Hoole, The 1990s: The Culture of Untruth and a Perilous Vacuum – Part 7. Embilipitiya Schoolboys' Affair – The Thin End Of The Wedge, 9 May 2014, https://www.colombotelegraph.com/index.php/embilipitiya-schoolboys-affair-the-thin-end-of-the-wedge/ and Amnesty International, Sri Lanka: Unresolved 'Disappearances' From The Period 1987-1990: The Case Of Sevana Army Camp, September 1991, https://www.amnesty.org/en/documents/asa37/018/1991/en/.

ஆனாலும், ஜனாதிபதிகுமாரதுங்கா அவ்வாணைக்குழுக்கள் தயார் செய்த அறிக்கைகளின் முக்கிய பகுதிகளை வெளியிட அங்கீகாரம் அளித்தார். எனினும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் குறித்த பட்டியல் எதுவும் வெளியிடப்படவில்லை.[37] அந்த அறிக்கைகள் குறுகிய தரப்புகளுக்கே விநியோகிக்கப்பட்டது. ஆசிய மனித உரிமை ஆணையம் என்ற சர்வதேச மனித உரிமை ஆணையம் அந்த அறிக்கைகளில் சிலவற்றை இணையத்தில் கிடைக்கப்பெற வழிசெய்தது. ஆனால், இந்த அறிக்கைகள் வெளிவந்தபோது, இணையம் இருந்தும், அதில் வெளியிடுவதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் அரசு எடுக்கவில்லை. [38]

இதனால், முழுமையான அறிக்கைகள் பற்றிய விவரங்கள் அறிந்தவர்கள் வெகுசிலரே. ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டதற்குக் காரணமானவர்கள் பற்றிய தெளிவான சாட்சியங்கள் இருந்தும், அவர்களது பெயர்கள் கூட வெளியே தெரியவில்லை. அப்பட்டியல்களில் காவல்துறையினர் மற்றும் பாதுகாப்புப் படை வீரர்களை மட்டுமல்ல, அரசியல்வாதிகள் மற்றும் பொதுச்சமூகத்தினரும் உள்ளனர். [39]

ஆணைக்குழுக்கள் ஆவணப்படுத்தியவை

இந்த ஆணைக்குழுக்களின் செயல்பாடுகளே இலங்கையில் நடந்த ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்த உதவின. ஆணையாளர்களும் அவரது பணியாளர்களும், தாங்கள் நியமிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் வாழ்விடங்களுக்கு நேரில் சென்று, அவர்களது சொந்தங்களுக்கும் அயலவர்களுக்கும் நடைபெற்ற கொடுமையான அனுபவங்களை கேட்டு, ஆவணப்படுத்த பெருந்தொகை நேரத்தை செலவிட்டனர்.[40] காணாமல் போனவர்கள் பற்றிய அனைத்து வழக்குகளையும் தீர்த்து வைக்கவோ அல்லது அவற்றின் மீதான நடவடிக்கைகளை தொடங்கவோ அவ்வாணையங்களால் முடியவில்லையெனினும், அங்கு நடந்த நிகழ்வுகளை தெளிவாகவும், விரிவாகவும் ஆவணப்படுத்தவும், காணாமல் போனவர்கள் பற்றியும், கட்டாயமாக நீக்கப்பட்டவர்கள் பற்றியும் தேவையான ஆதாரங்களைத் திரட்டவும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் பற்றியும், அவர்கள் சார்ந்திருந்த அமைப்புகள் பற்றியும் பதிவு செய்தனர். கடந்த 2015இல் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில், இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் நடத்திய மனித உரிமை ஆணையர் தனது அறிக்கையை தாக்கல் செய்தார். அவ்வறிக்கையில் அவர், இந்த ஆணைக்குழுக்களின் விசாரணையில் சேகரிக்கப்பட்ட தகவல்களும், ஆதாரங்களும் எதிர்காலத்தில் நடைபெறும் காணாமல் போனவர்கள் குறித்து முழுமையான விசாரணைகளில் சேர்ந்துக்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.[41] எனினும், விமர்சகர்கள், அரசு இதுபோன்ற ஆணையங்கள் அமைப்பதன் மூலம் பொறுப்புக்கூறலைத் காட்டிக் கொள்ளும் அதே வேளையில், அவ்வாணைக்குழுக்களின் கண்டுபிடிப்புகளை கட்டுப்படுத்துவதன் மூலம் தங்கள் அரசியல் இலக்குகளை அடைய முயல்கின்றனர் என்று கூறுகின்றனர். இது போன்ற ஆணைக்குழுக்களை வைத்து தங்கள் அரசியல் எதிரிகளை சிறுமைப்படுத்தும் அதே வேளையில், அவ்வாணைக்குழுக்கள் தரும் அரசியல் மற்றும் சட்டரீதியிலான சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகளை கண்டுகொள்ளாமல் விடுகின்றனர். [42]

In its submissions to the UN treaty bodies and Special Procedures in the following years, the government provided 'manifestly unsatisfactory' statistics on the number of cases recommended by the Commissions that were under investigation and prosecution, ICJ, p101-105.

[37] மத்திய வலய ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் இணைக்கப்பட்டிருந்த குற்றவாளிகளின் பெயர்ப்பட்டியல் உட்பட.

[38] Seehttp://www.disappearances.org/news/mainfile.php/reports_srilanka/

[39] M C M Iqbal, op cit

[40] உதாரணத்திற்கு, மத்திய, ஊவா, வடமத்திய, வடமேற்கு மாகாணங்களிலிருந்த 34 இடங்களுக்கு 1995 மார்ச் முதல் 1997 ஏப்ரல் வரை CZC விஜயம் செய்ததுடன், சில நேரங்களில் ஒரே இடத்தில் 10 நாட்களுக்கும் மேல் செலவிட்டது.

[41] Report of the OHCHR investigation on Sri Lanka (OISL), A/HRC/30/CRP.2, 16 Sep 2015,

https://www.ohchr.org/EN/Countries/AsiaRegion/Pages/LKIndex.aspx. English, Sinhala and Tamil versions are available on this page. See p100, para 484 for this recommendation.

[42] APA Citation. Thomson-Senanayake, Jane. & Asian Human Rights Commission. (2014). A sociological exploration of disappearances in Sri Lanka: 'not even a person, not even a word...' Hong Kong, China: Asian Human Rights Commission.

3. மாத்தளை மாவட்டம் — பாரிய மனிதப்புதைகுழி

மாத்தளை மாவட்டத்தில் நடைபெற்ற பாரிய மனித உரிமை மீறல்களின் தீவிரம் 2012இலேயே வெளிச்சத்துக்கு வந்தது. நகரில் உள்ள மருத்துவமனைக்கு அருகில் மாபெரும் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு முன்னர், ஜே.வி.பி யின் கிளர்ச்சியும், அரசின் எதிர்கிளர்ச்சி நடவடிக்கைகளுக்கும் பெரிய முக்கியத்துவம் எதுவும் அளிக்கப்படவில்லை. மேலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் சார்பாக நீதிமன்றங்களில் வெகுசில ஆட்கொணர்வு மட்டும் அடிப்படை உரிமைகள் மீதான மனுக்களே போடப்பட்டன.

ஆனால், நவம்பர் 2012இல், மாத்தளை பொது மருத்துவமனையில்[43] மீத்தேன் எரிவாயு உற்பத்தி செய்யும் கட்டமைப்பை ஏற்படுத்த பள்ளம் தோண்டப்பட்டபோது கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் ஊடாக ஊடக வெளிச்சத்திற்குள் அம்மாவட்டம் வந்தது. 1989 – 90 காலகட்டத்தில், இராணுவ முகாமாக இருந்த விஜயா கல்லூரியின் அருகிலேயே இம்மருத்துவமனை உள்ளது. பெப்ரவரி 13, 2013 இல், நீதிமன்ற உத்தரவின் பேரில் அப் புதைகுழி மூடப்பட்டபோது, 154 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. அவ்விடத்தை ஆய்வு செய்த தடயவியல் வரலாற்று ஆய்வாளர், ராஜ் சோமதேவா, அங்கு கிடைத்தவற்றின் வயது 1986–90க்குள் இருக்கலாம் என்று முடிவு செய்தார்.[44] மேலும், அங்கு புதைக்கப்பட்ட மனிதர்கள் இயற்கையாக மரணமடையவில்லை எனவும், அவர்கள் சித்திரவதைகளுக்கும், சட்டத்திற்குப் புறம்பாக கொலைசெய்யப்பட்டதற்கும் ஆதாரங்கள் இருப்பதாகவும் முடிவு செய்தார். ராஜ் சோமதெவா, தனது அறிக்கையில், அந்தக் புதைகுழியிலிருந்துது பல பொருட்களையும் (பொத்தான்கள், மோதிரங்கள் மற்றும் ஒரு போத்தல்) அவற்றின் காலம் 1980களின் இறுதிக் காலம் என்பதையும் கண்டுபிடித்தார்.

மேலும் அவர், உலோகக் கம்பியாலான ஒரு கயிறும் அதோடு சேர்ந்த ஒரு பூட்டும் கால் எலும்பு ஒன்றோடு இணைந்திருந்ததைக் கண்டுபிடித்தார்.[45] அந்தக் கயிறு மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்காகவே வடிவமைக்கப்பட்டது" என்றும் குறிப்பிட்டார்.[46] மேலும் அவர், பல ஆணிகளையும், அவற்றில் சில ஆணிகளோடு எலும்புத் துண்டுகள், குறிப்பாக விரல் எலும்புப்பகுதிகள் ஒட்டியிருந்ததையும் கண்டுபிடித்தார்.[47] மேலும் அவர் இவ்வாறு கூறினார்:

> கலைப்பொருட்களின் உற்பத்தித் தேதியை வைத்து கணக்கிட்டால், இந்த அடக்கம் நடந்தது 1986க்குப் பின்னும்

[43] 1980களில் இப்பகுதி மக்டோவால் கோட்டைக்குச் சொந்தமாக இருந்தது என்று ஒருவர் தெரிவித்தார். See Janarala, op cit, 3 Dec 2012.

[44] Raj Somadeva, 'Human Skeletal Remains Found At The Dis[t]rict General Hospital Premises In Matale', The Report on Forensic Archaeology, Part I, http://www.jdslanka.org/images/documents/disappearances_executions/matale_forensic_archaeology_report.pdf.

[45] Raj Somadeva, op cit, p27. "அந்நிறுவனத்தின் உற்பத்திப் பதிவுகளின்படி, 1988களின் ஆரம்பத்திலேயே இக்குறிப்பிட்ட வகையான போத்தல்களின் தயாரிப்புத் தொடங்கியதுடன், 1989 இல் உற்பத்தி இடைநிறுத்தப்பட்டதாகவும்" இவ்வறிக்கை கூறுகின்றது.

[46] Raj Somadeva, op cit, p26

[47] Raj Somadeva, op cit, p21

1990க்கு முன்னும் தான் என்பது தெளிவாகிறது. [...] இந்த அடக்கத்தில் எலும்புக்கூடுகள் அடுக்கப்பட்டுள்ள விதத்தை வைத்துப் பார்த்தால், இந்த அடக்கமானது இந்நாட்டில் வாழும் எந்த வகையான இன மற்றும் மதக் குழுவும் பின்பற்றுவதாக இல்லை என்று தெரிகிறது.[48]

காணாமல் போனவர்களது குடும்பத்தினர், மாத்தளை நீதிமன்றத்தில், கல்லறையில் கிடைத்தவற்றின் மீது மரபணு பரிசோதனை செய்யப்பட்டு, தங்கள் உறவினர்கள் அதில் இருக்கிறார்களா என்பதை உறுதி செய்யுமாறு வழக்கு தொடுத்தனர். இதற்கு பதிலளிக்கும் விதமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ஓய்வு பெற்ற பாராளுமன்ற பொதுச் செயலாளராக இருந்தவர் உள்பட, மூன்று ஓய்வு பெற்ற நீதிபதிகள் அடங்கிய ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். அந்தக் கல்லறையில் இருந்து கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட பொருட்கள் ஆய்விற்காக அமெரிக்கா அனுப்பப்பட்டு, அதன் காலம் 1950க்கு முன் என்று தீர்மானிக்கப்பட்டது. அப்பொருள்களில் சித்ரவதை மற்றும் கொலை நடந்ததற்கான ஆதாரம் இருந்ததாகவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆதாரங்கள் சீர்குலைக்கப் பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் ஆய்வு செய்த தடயவியல் மருத்துவ நிபுணர் மரு. அஜித் ஜெயசேனா, ஆதாரங்கள் பாதுகாக்கப்பட்டிருந்த இடம் உடைக்கப்பட்டதாகவும், அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட மனித எலும்புக்கூடுகள் மாத்தளையில் கண்டெடுக்கப் பட்டவைகள் அல்ல என்று குற்றம் சாட்டினார். [49]

அப்போது, பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ச, மாத்தளை உள்பட மத்திய மாகாணத்தில் உள்ள 5 ஆண்டுகளுக்கு முந்தைய அனைத்து காவல்நிலைய ஆவணங்களையும் அழிக்குமாறு உத்தரவிட்டதாக செய்திகள் கசிந்தன. மேலும் மாத்தளை மனிதப்புதைகுழி வழக்கு தொடர்பான அனைத்து அறிக்கைகளும் தனக்கு அனுப்பப்பட வேண்டும் என்று காவல்துறை ஐ.ஜிக்கு உத்தரவிட்டதாகவும் கூறப்பட்டது. [50]

பெப்ரவரி 2014இல், ஐ.நா. மனித உரிமை ஆணையர், நவநீதம் பிள்ளை, மனித உரிமைக் கவுன்சிலில் சமர்பித்த அறிக்கைக்கு பதிலளித்த இலங்கை அரசு, மாத்தளையில் கண்டெடுத்த எலும்புக்கூடுகள், 1940களில் நடைபெற்ற காலெரா தொற்றின்போது ஏற்பட்ட இறப்புகள் என்று கூறியது.[51]

சில பொருட்கள் சீனாவுக்கும், அமெரிக்காவின் மியாமியில் உள்ள பீட்டா அனலடிக் என்ற நிறுவனத்திற்கு கார்பன் தேதி அறியும் முயற்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டன. தொடர்ந்து, ஜனாதிபதி ஆணைக்குழு அதன் விருப்பப்படி முடங்கிப் போனது. ஜனவரி 2015இல் நடைபெற்ற தேர்தல் பரப்புரைகளின் பரபரப்பில், ராஜபக்ச அரசு அந்த ஆணைக்குழுவின் அறிக்கையை ஓரம்கட்டி, அதனை பொதுத் தளத்திலிருந்து நீக்கியது. 2015 தேர்தலில் வெற்றி பெற்று பதவியேற்ற யூ.என்.பி மற்றும் சிறிலங்கா விடுதலைக் கட்சிகளின் (SLFP) கூட்டணி ஆட்சியில் மீண்டும் துவங்கப்பட்ட அந்த ஆணையம் தனது 1950கள் கருத்தையே தூக்கிப்பிடித்து, அந்தப் பெரும்புதைகுழி ஒரு குற்றம் நடந்த இடம் என்ற கருத்தை மறுத்துவிட்டது.[52] இதில் குறிப்பிடப்படவேண்டியது என்னவென்றால், சீர்திருத்தங்களை முன்வைத்து ஆட்சிக்கு வந்த யூ.என்.பி அரசுதான், 1989இலும் ஆட்சியில் இருந்தது. அதனால், அந்தக் மனிதப்புதைகுழியின் பின்னுள்ள உண்மைகளை வெளிக்கொணர அது விரும்பாமல் இருந்திருக்கலாம்.

24 ஜூலை 2015இல், நீதித்துறை விசாரணை 'அட்டர்ணி ஜெனரல் அல்லது ஒரு மூத்த காவல்துறை அதிகாரியின் பரிந்துரைக்காக காத்திருப்பதால்' நிறுத்தி வைக்கப்பட்டது.[53] தடயவியல்

[48] Raj Somadeva, op cit, p47

[49] Amnesty International, 'Visit of the UN Voluntary Group on Enforced and Involuntary Disappearance to Sri Lanka', AI Index: ASA 37/2821/2015, https://www.amnesty.org/download/Documents/ASA3728212015ENGLISH.pdf, n 12

[50] Lanka-e-News, 'Gotabaya the prime suspect in Matale mass killings now begins his evidence killing operations –Orders destruction of police records', 8 Apr 2013, https://www.facebook.com/lankaenews/photos/gotabaya-the-prime-suspect-in-matale-mass-killings-now-begins-his-evidence-killi/505768629488307/.

[51] https://2009-2017.state.gov/documents/organization/236862.pdf , p13

[52] Ravishan, 'Bodies Beneath: Accidentally Discovered Mass Graves In Sri Lanka', 7 Jun 2017, https://roar.media/english/life/history/bodies-beneath-accidentally-discovered-mass-graves-in-sri-lanka/.

[53] Report of the UN WGEID on its mission to Sri Lanka, 8 July 2016, A/HRC/33/51/Add.2, https://documents-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G16/146/63/PDF/G1614663.pdf?OpenElement, page 10.

ஆய்வுகளிலோ அல்லது காவல்துறை ஆய்வுகளிலோ வேறு எந்த முன்னேற்றம் அறியப்படவில்லை. அந்த 154 எலும்புக்கூடுகளும் ஜே.வி.பி காலத்தைச் சேர்ந்தவை என்பது நிரூபிக்கப்பட்டு, அவற்றை அடையாளம் காண மெய்யான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால், அந்த நிகழ்வுக்குக் காரணமானவர்கள் பெயர் வெளிவர வாய்ப்பிருப்பது தெளிவாகிறது.

இதுபோன்று அப்பகுதியில் வேறு பல கல்லறைகள் இருக்கக்கூடும் என்பதையும் நாம் மறுத்துவிட முடியாது. ஏப்ரல் 2013இல் பேசிய நந்திமித்ர ஏகநாயகே (மாத்தளையைச் சேர்ந்த SLFP கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்) இவ்வாறு கூறினார்:

அந்தப் பகுதியின் பொறுப்பில் 3 அதிகாரிகள் இருந்தனர். நான் தனிப்பட்ட முறையில் திரு. கோத்தபாய ராஜபக்சவிடம் பேசி சிலரை வெளியே கொண்டு வந்தேன். எனக்கு நினைவுதெரிந்தவரை மருத்துவமனை அருகே யாரும் புதைக்கபடவில்லை. ஆனால், இரகசியமாக ஏதேனும் நடந்ததா என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மாத்தளையில் ஆயுதப்படைகள் தொடர் கொலைகளை நடத்தியது உண்மை. தம்புள்ள பலத்துவாவாவில் ஒரே கிராமத்தைச் சேர்ந்த 52 [sic[54]] பேர் கொல்லப்பட்டனர். முவெந்தெனியா, வாரியப்போல வட்டா, அன்கும்புரா போன்ற இடங்களில் பலர் கொல்லப்பட்டனர். பலர் இதுபோல ஆயுதப்படைகளால் கொல்லப்பட்டு, பின்னர் எரிக்கப்பட்டனர். அவர்களுடைய எச்சங்கள் பல்வேறு இடங்களில் புதைக்கப்பட்டன. மொத்தமாக புதைக்கப்பட்டது இது போன்று வேறு இடங்களிலும் நடந்திருக்கலாம்.[55]

[54] The ITJP's figure for killings in Palutawa, Matale District, is 22. 'Palatuwawa' is a village in Matara District.

[55] https://janarala.wordpress.com/2013/04/06/mathale-mass-grave/

4. நந்தசேனா கோத்தபாய ராஜபக்சவின் கட்டளையின்கீழ் மாத்தளையில் நடந்த வன்முறைகள் தொடர்பாக அவர்மீது தொடரப்பட்ட வழக்கு

ஏதுவாக்கிய புறநிலை

சவேந்திர சில்வாவைத் தவிர, மாத்தளைக்கு அனுப்பட்ட, ஏறக்குறைய அனைத்து இராணுவ வீரர்களும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்ல. இதனை அரசின் தெளிவான உத்தியாகவே பார்க்க முடிகிறது. ஒரு வேளை அவர்கள் அதே பகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அரசின் மீது இருக்கும் அவர்களது விசுவாசம் கேள்விக்குள்ளாகக்கூடிய சூழல் வரலாம் என்பதால், அரசு இம்முடிவை எடுத்திருக்கும். இராணுவத்தின் பார்வையில், ஜே.வி.பி, படை வீரர்களின் குடும்பத்தைக் கொல்வதையோ அல்லது அவர்களை பணையக் கைதிகளாக வைத்து இராணுவ வீரர்களை தங்கள் பக்கம் இழுக்கவோ முடியாத உத்தியாக இது இருந்தது. [56]

படைகளது உத்தி இவ்வாறாக இருந்தது. அவர்கள் இலக்கத்தகடு இல்லாத வாகனங்களைப் பயன்படுத்தினர்.[57] அவர்கள் அடையாளப் படுத்தப்படுவதைத் தவிர்க்க, சீருடை அணியாமல் சாதாரண உடுப்புகளையே அணிந்து வந்தனர். இது மனித உரிமை மீறலில் ஈடுபட மேலும் உதவியது. இந்த இலக்கத்தகடற்ற வான்களும் சீருடை அணியாத படை வீரர்களும் இன்னும் வடகிழக்கில் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். மேலும், மூத்த அதிகாரிகள் 'தேடுதல் – விசாரணை – அழித்தல்' என்ற உத்தியையும் அங்கீகரித்தார்கள். இதனால் கைதிகளை தடுத்து வைப்பதும் கொலை செய்வதும் மேலும் எளிமையானது.[58] ஜூன் 1989 முதல் கொண்டுவரப்பட்ட தீவிர அவசர நிலைப் பிரகடனங்கள், காவல்துறையினர் எந்த விசாரணையோ அல்லது பிரேதப் பரிசோதனையோ செய்யாமல் உடல்களை அப்புறப்படுத்த வழிவகை செய்தது. [59]

பாதுகாப்புத் துறை சார்ந்த ரோஹன் குணரத்னே[60], நடைபெறும் அனைத்து கைதுகளும் பதிவு செய்யப்பட்டு மேலிடத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற விதி காகிதத்தில் இருந்தாலும், பெரும்பாலான கைதுகள் நள்ளிரவிலோ அதிகாலையிலோதான் நடக்கும். "ஒருங்கிணைப்பு அதிகாரியின் ஒப்புதல் இல்லாமல் கைது செய்யப்பட்ட எவரும் விடுவிக்கப்படவில்லை" என்றும் கூறுகிறார். இதன் மூலம், அப்போது ஒருங்கிணைப்பு அதிகாரியாக இருந்த கோத்தபாயவிற்கு, அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதியில் ஆயிரக்கணக்கானவர்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்கள் என்பதோ காணாமல் போனவர்கள் பலர் விடுவிக்கப்படவே இல்லை என்பதையோ அறியாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை என்பது தெளிவாகிறது. 1989இல், கோத்தபாயவிடம் காணாமல் போனவர்கள் பற்றிய பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போதிலும், அது தொடர்பாக அவர் எந்த விசாரணையையும் துவங்கியதற்கான ஆதாரங்கள் இல்லை.

விசாரணையின் போது இறந்து போகாத கைதிகளை ஆயுதப்படைகள் எவ்வாறு கொலை செய்தது என்பதைக் குறித்து ரோஹன் குணாரத்னே வெளிப்படையாகவே தெரிவிக்கிறார். நடைபெறும் கைதுகளில் வெகு சிலவே பதிவு செய்யப்படும் என்றும், வெகு சிலரே தடுப்புக் காவலில் இருந்து பிழைத்து வருவார்கள் என்றும் தெரிவிக்கும் அவர், பெரும்பாலான இறப்புகள், 'சண்டையின் போது ஏற்பட்ட இறப்பாக' பதிவு செய்யப்படும் என்கிறார். எனினும், பெரும்பாலான தடுத்து வைக்கப்பட்டவர்கள் குறித்து எந்தப் பதிவும் செய்யப்படவில்லை என்றும் அவர்களது உடல்கள் வெறுமனே ஆற்றில் வீசப்படும் அல்லது எரிக்கப்படும்.[61] குணரத்னேவைப் பொறுத்தவரை உடல்கள் அடையாளப்படுத்தப்படக் கூடாது என்பதற்காக இராணுவம் உடல்களை கோரமாக சிதைத்துவிடும்: [62]

அடையாளப்படுத்தப்படக் கூடாது என்பதற்காக சில உடல்கள் வெட்டப்படும், பெரும்பாலும் அவர்களது முகங்கள் நசுக்கப்படும் அல்லது வெட்டப்படும். சில காலம் கழித்து இந்த நடவடிக்கைகளுக்கு துருப்புகள் பழகிவிட்டன. பெரும்பாலும் இந்தக் கோர செயல்களை, துப்பாக்கி முனையில், கொலை செய்யப்படக் காத்திருக்கும் கைதிகளைக்கொண்டு இதனை செய்விப்பார்கள்.[63]

---

[56] Rohan Gunaratne, op cit, p332

[57] The CZC கடத்தல்களுக்கு பயன்படுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட இரண்டு வாகனங்களின் இலக்கங்களை உள்ளடக்கியது. ஆட்கள் கடத்தப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் உள்ளூர் அரச திணைக்களத்துக்குச் சொந்தமானவை அல்லது உண்மையில் தனியாருக்குச் சொந்தமானவை என்று பல சாட்சியங்களின் வாக்குமூலங்களில் கூறப்பட்டுள்ளது. இத்தனியார் தங்கள் வாகனங்களை ஒப்படைக்கும்படி நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள். அவர்களை வாகனம் ஓட்டும்படி நிர்ப்பந்தித்ததுடன், இராணுவ முகாமிற்கு சந்தேகதாரிகள் கொண்டுசெல்லப்பட்டபின்னரே அவர்கள் விடுவிக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

[58] Rohan Gunaratne, op cit, p339

[59] Amnesty International, Annual Report 1990, p218, https://www.amnesty.org/download/Documents/POL1000031990ENGLISH.PDF.

[60] சிறிலங்காவிலுள்ள தேசிய பாதுகாப்புக் கற்றைநெறிகளுக்கான நிறுவனத்தின் தற்போதைய பணிப்பாளர் நாயகமும், 2009 இல் விடுதலைப் புலிச் சந்தேகநபர்களுடைய பிரச்சினைக்குரிய "புனர்வாழ்வு" நிகழ்ச்சித்திட்டத்தின் மூலதாரியும்.

[61] Rohan Gunaratne, op cit, p332

[62] "விசாரணையின்போது குறிப்பிட்டளவு சந்தேகநபர்கள் இறந்துபோனதுடன் பலர் கொலைசெய்யப்பட்டார்கள். பெரும்பாலான முகாம்களில், ஜே.வி.பி செயற்பாட்டாளர் என்று அடையாளம் காணப்பட்டால், அவர் உயிருடன் திரும்பவே மாட்டார். சிலவேளைகளில் இச்சந்தேகதாரிகளது கைது பதிவுசெய்யப்பட்டிருந்தால், அவர்கள் "நடவடிக்கையில் – கொல்லப்பட்டார்கள்' என்றே பதியப்பட்டது. எனும், கைதுசெய்யப்பட்ட பெரும்பாலானவர்கள், குறிப்பாக ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டிருந்தோர்களால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டவர்களது விபரங்கள் ஒருபோதும் பதிவுசெய்யப்படவில்லை. அவ்வாறு கொல்லப்பட்டவர்களது சடலங்கள், பெரும்பாலும், ஆற்றில் எறியப்படும், காட்டில் புதைக்கப்படும் அல்லது ரயர்களில் எரிக்கப்படும். எரிக்கப்பட்ட சடலங்கள் அடுத்தநாள் காலைவரை புகைந்துகொண்டிருக்கும். எரியும் வேகத்தைக் கூட்டுவதற்காக, உடல்கள் துண்டாக்கப்பட்டு எரிக்கப்பட்டது." Rohan Gunaratne, op cit, p332-333.

[63] Rohan Gunaratne, op cit, p332-333

அட்டூழியங்களின் அளவு

தமிழ் போராளிகளுக்கு எதிரான உள்நாட்டுப் போர் மற்றும் முதல் ஜே.வி.பி எழுச்சிக்கு எதிரான நடவடிக்கை ஆகியவற்றைப் போலவே, இறப்பு எண்ணிக்கை குறித்து துல்லியமான கணக்கீடு எதுவும் இருக்கவில்லை. அரசாங்கப் புள்ளிவிபரங்களின்படி, 1987 இன் பிற்பகுதிக்கும் 1990 மார்ச்சுக்கும் இடையில் ஜே.வி.பி 6,517 பேரைக் கொன்றது.[64] ஏப்ரல் 1990க்குள், ஜே.வி.பி மற்றும் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்ட மொத்த மக்களின் எண்ணிக்கை 40,000 க்கும் அதிகமாக இருந்தது. 1987 இன் இரண்டாம் பாதியில் ஒவ்வொரு நாளும் சராசரியாக பத்து பேர் இறந்ததாகக் கருதப்படுகிறது. பின்னர் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை அடுத்த பத்து மாதங்களில் சராசரியாக ஒரு நாளைக்கு 20 பேராக அதிகரித்தது. டிசம்பர் 1988 முதல் டிசம்பர் 1989 வரை ஒவ்வொரு நாளும் சராசரியாக 100 பேர் இறந்ததாக அறிவிக்கப்பட்டது, இதன் மூலம் இறப்புகளைக் கணக்கிடுவதற்கு ஒரு மைய அமைப்பு இருந்திருக்கலாம் எனத் தெரிய வருகிறது. [65] குற்றங்கள் இழைக்கப்படுகின்றன என்பதும், பாதுகாப்புப் படையினர் அதில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்பதும் அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகவே இருந்தது – சடலங்கள் வயல்களிலும் சாலையோரங்களிலும் சிதறிக் கிடந்தன, ஆறுகளிலும் அதன் கரையோரங்களிலும் மிதந்தன – இளைஞர்கள் அவர்களின் குடும்பங்கள் தடுப்பு முகாம்களில் அவர்களைப் பார்த்த பிறகு காணாமல் போனார்கள்.

ஜூன் 1990 இல், வடக்கு மற்றும் கிழக்கிற்கு இராணுவம் மீண்டும் அனுப்பப்பட்டது.[66] இந்த கட்டத்தில், இராணுவ முகாம்கள் முன்பிருந்த இடங்களுக்கு அருகில் ஏராளமான சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன, அவை இராணுவம் மீண்டும் இங்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் முகாம்களில் கொல்லப்பட்ட கைதிகளின் உடல்கள் என்று நம்பப்படுகிறது. குறைந்த அளவே எனினும், சட்டத்திற்குப் புறம்பான முறையில் கொல்லப்பட்டவர்கள் என்று என்று சந்தேகிக்கப்படுபவர்களின் உடல்கள் அடுத்து வந்த மாதங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. [67]

காணாமல் ஆக்கப்பட்டோரின் அளவு

கோத்தபாய ராஜபக்ச மாத்தளை மாவட்டத்தின் பொறுப்பாளராக இருந்த காலப்பகுதியில் காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளின் பாரிய அளவு, அவரது நேரடியான நடத்தை மற்றும் அவரது கட்டளையின் கீழ் உள்ள படையினரின் நடத்தை ஆகிய இரண்டு குறித்தும் அவர் பதிலளிக்க வேண்டிய ஒரு வழக்கு இருப்பதைக் காட்டுகிறது. இது உண்மையில் காணாமல் போனவர்களின் மொத்த எண்ணிக்கை அடிப்படையிலானது அல்ல. மாறாக, சில ஆண்டுகளுக்குப் பிறகு ஆணைக்குழுக்களிடம் குடும்பங்கள் செய்த புகார்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டது. ஆணைக்குழுக்களிடம் அனைவரும் முறையிட்டிருக்க வாய்ப்பில்லை. – மேலும் காணாமல் போன குடும்ப உறுப்பினர்களின் சடலங்கள் கிடைக்கப் பெற்றவர்கள் எப்போதும் ஆணைக்குழுக்களில் புகார் செய்ய வருவதில்லை. சில சந்தர்ப்பங்களில், முழு குடும்பங்களும் அழிக்கப்பட்டன, அதனால் புகார் அளிக்க யாரும் எஞ்சியிருக்கவில்லை.

மாத்தளை மாவட்டத்தில் இருந்து வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக மத்திய வலய ஆணைக்குழு (CZC) மற்றும் அகில இலங்கை ஆணைக்குழு (AIC) ஆகிய இரண்டின் முன்பும் அளிக்கப்பட்ட முறைப்பாடுகளின் தரவுகளை ITJP ஆய்வு செய்தது.[68] அதன்படி 1 ஜனவரி 1988 முதல் டிசம்பர் 1994 வரையிலான மொத்தம் 850 சம்பவங்களில் 700 நிகழ்வுகள் 1989 மே முதல் 1990 ஜனவரி வரையான காலப்பகுதியில் நடந்துள்ளதைக் கண்டறிந்துள்ளது. அக்காலக்கட்டத்தில் கோத்தபாய ராஜபக்ச மாவட்டத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்துள்ளார்.

1989–91 காலப்பகுதியில் மாத்தளையில் காணாமல் போனவர்கள் தொடர்பான 1,042 முறைப்பாடுகள் கொண்ட அறிக்கையை மத்திய மண்டல ஆணைக்குழு வெளியிட்டது. இந்தப் முறைப்பாடுகில் சில ஜனவரி 1990க்குப் பிறகானவையாகவும் மற்றவை 1989இன் மத்தியில் நடந்தவையாகவும் உள்ளன.

CZC மற்றும் AIC விசாரித்த மாத்தளை மாவட்டத்தில் இருந்து காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளின் தன்மை குறித்த விரிவான விவரங்களை கீழே உள்ள வரைபடம் காட்டுகிறது. அக்டோபர் (168), நவம்பர் (127) மற்றும் டிசம்பர் 1989 (157) மாதங்களில் அதிக எண்ணிக்கையிலானோர் காணாமல் போயுள்ளனர். பிற மாவட்டங்களிலும் அப்படியான நிலையே இருந்துள்ளது.

---

[64] Amnesty International, Annual Report 1990, Sri Lanka, p209, https://www.amnesty.org/download/Documents/POL10000011991ENGLISH.PDF

[65] Rohan Gunaratne, op cit, p269

[66] 1990 மார்ச்சில் IPKF வெளியேறிய பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிலங்கா பாதுகாப்புப் படைகளுடனான சண்டையை மீளவும் ஆரம்பித்தார்கள். கிழக்கில் காவல்துறை நிலையங்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான சிங்கள முஸ்லீம் அதிகாரிகள் கொள்ளப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து வடக்கிலும் கிழக்கிலும் சிறிலங்கா இராணும் பணியமர்த்தப்பட்டது.


[67] Amnesty International, Annual Report 1990, Sri Lanka, op cit, p210

[68] இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பதிவுகளில் ஆணைக்குழுக்களால் கைதுசெய்யப்பட்ட முழுமையான திகதிகள் பதியப்பட்டவை மட்டுமே அடங்கும். கைதுசெய்யப்பட்ட மாதம் மட்டும் பதியப்பட்டுள்ளவையும் (1989 இல் 10, 1990 இல் 4) ITJP யால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்களில் திகதிகள் பதியப்படாதவையும் (36 முறைப்பாடுகள்) இக்கணிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை.


மாதாந்த அடிப்படையில் காணாமற்போனோர்

லெப்.கேணல். நந்தசேன கோத்தபாய ராஜபக்ச

யூன் 1989–சனவரி 1990 வரை பொறுப்பு வகித்தார்



காணாமற்போன காலம் (ஆண்டு-மாதம்)


24
7
2
8
2
3
12
2
8
11
4
11
3
1
1
2
1
1
1
1
1
1990 FEB
1990 MAR
1990 APR
1990 MAY
1990 JUNE
1990 JUL
1990 AUG
1990 SEPT
1990 OCT
1990 NOV
1990 DEC
1991 JAN
1991 AUG
1991 OCT
1992 JUL
1992 DEC
1993 MAR
1993 JUL
1993 DEC
1994 APR
1994 DEC

மாத்தளையில் பாதிக்கப்பட்டவர்களின் விவரம்

காணாமல் போனவர்கள் குறித்து மாத்தளையை உள்ளடக்கிய ஆணைக்குழுக்களில் அளிக்கப்பட்ட முறைப்பாடுகளில் பெரும்பான்மையானவர்கள் ஜே.வி.பியின் உறுப்பினர்கள் அல்லது அனுதாபிகள் என சந்தேகிக்கப்படும் இளம் சிங்கள ஆண்கள். இருப்பினும், பாதிக்கப்பட்டவர்களில் குழந்தைகள் மற்றும் இளைஞர்களும் இருந்தனர். ஒரு தந்தை தனது 13 மற்றும் 15 வயதுடைய இரண்டு மகன்களை இழந்தார்.

எங்கள் வீட்டில் இருந்து 50 அடி தூரத்தில் உள்ள ஒரு வீட்டின் தோட்டத்தில் [என் மகன்கள்] விளையாடிக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில், சீருடை அணிந்து துப்பாக்கிகளுடன் ஒரு குழு வெள்ளை டெலிகா வேனில் வந்தது. அவர்களுடன் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஊகிக்கக்கூடிய சாதாரண உடைகள் அணிந்த மற்றொரு குழுவும் வந்தது. அங்கு வாகனங்களை நிறுத்திவிட்டு கீழே இறங்கினர். அப்போது, அங்கு விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் கூட்டத்தில் இருந்த, எனது மகன் [பெயர்] பயந்து ஓட முயன்றபோது, அவனைச் சுட்டனர். துப்பாக்கிச் சூட்டில் அவர் காயமடைந்து தரையில் விழுந்தான். பின்னர், எனது மற்றொரு மகனையும் [பெயர்] அவருடன் விளையாடிக் கொண்டிருந்த மற்றொரு குழந்தையையும் வேனில் ஏற்றி அழைத்துச் சென்றனர். இந்த நிகழ்விற்கு ஒரு மாதத்திற்கு முன்னர், பெல்வெஹர இராணுவ முகாமின் அதிகாரிகள் எனது இரண்டு மகன்களையும் ஒப்படைக்குமாறு கூறி என்னை கொடூரமாக தாக்கினர்.

அப்போது எனது இரு மகன்களில் ஒருவர் வீட்டில் இல்லை. அவர்கள் [மற்றவரை] பிடித்து, ஒரு குண்டை அவன் வாயில் திணித்து, அவனை மரத்தின் மேல் ஏறச் செய்து, என் இன்னொரு மகனைத் தேடிப் போகச் சொன்னார்கள். அதுவரை அவனை அப்படியே வைத்திருப்பதாகக் கூறினார்கள். எனது மற்றொரு மகனைக் கண்டுபிடிக்க நான் பெரும் முயற்சி எடுத்தேன். ஆனால் என்னால் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பின்னர், பக்கத்து வீட்டைச் சேர்ந்த ஒரு ஆசிரியர் அவர்களிடம் கெஞ்சினார், அதனால் அவர்கள் [மற்ற மகனை] கீழே இறக்கிவிட்டு, எனது இரண்டு மகன்களையும் மூன்று நாட்களில் ஒப்படைக்கும்படி என்னை மிரட்டினர். எனது பிள்ளைகள் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட இருந்ததால், நான் வேண்டுமென்றே அங்கு செல்லவில்லை. கடற்படையில் பணிபுரியும் உறவினர் ஒருவருடன், நான் பெல்வெஹெர முகாமுக்குச் சென்றேன். எனது மகனும் ஏனையோரும் மாத்தளை தலைமையகத்திற்கு மாற்றப் பட்டுள்ளதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். நாங்கள் மாத்தளை விஜயா கல்லூரி முகாமில் உள்ள தலைமையகத்திற்குச் சென்ற போதும் எனது மகன் பற்றிய எந்தத் தகவலையும் எங்களால் பெற முடியவில்லை. எனது மகன் அழைத்துச் செல்லப்பட்ட அன்று சுடப்பட்ட எனது மகனை ஒரு வேனில் ஏற்றி அழைத்துச் சென்று மற்றொரு சிறுவனை அடையாளம் காட்டுவதற்காக மீண்டும் கிராமத்திற்கு கொண்டு வந்து, அந்த மற்றொரு சிறுவனையும் அழைத்துச் சென்றனர். [இந்த மற்ற மகனும்] காணாமல் போய்விட்டார். [69]

1989 ஆம் ஆண்டு டிசம்பர் 7 ஆம் திகதி இராணுவத்தினர் வீட்டில் இல்லாத தமது மூத்த மகனைத் தேடி வந்தபோது தனது கணவனையும் தங்களின் 12 மற்றும் 8 வயதுடைய பெண் குழந்தைகளையும் கொன்றுவிட்டு, தங்களது வீட்டிற்கு தீ வைத்ததாக ஒரு பெண் அகில இலங்கை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார். அன்றைய தினம் வீட்டில் இல்லாததால் அந்தத் தாய் மட்டும் உயிர் பிழைத்தார். [70]

கோத்தபாய ராஜபக்ச பெயரைக் கூறிய சாட்சிகள்

குடும்பங்கள் ஆணைக்குழுக்களில் சாட்சியமளிக்கும் போது, கோத்தபாய ராஜபக்ச ஒரு நாள் நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை. எவ்வாறாயினும், கணிசமான எண்ணிக்கையிலான வழக்குகளில், தங்களது உறவினர்கள் காணாமல் போனதில் கோத்தபாய ராஜபக்ச மற்றும் அவர் தங்கியிருந்த விஜயா கல்லூரி இராணுவ முகாம் ஆகியவை முக்கிய பங்கு வகித்ததாக முறைப்பாடு செய்தவர்கள் ஆணைக்குழுக்களிடம் குறிப்பிட்டுள்ளனர்.

- தனது மகன் காணாமல் போவதற்கு முன் 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் தொடக்கத்தில் இருந்து 1990 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வரை பல சந்தர்ப்பங்களில், விஜயா கல்லூரி இராணுவ முகாமில் தனது மகன் காவலில் வைக்கப்பட்டதை நேரில் பார்த்ததாக ஒரு தாய் தெரிவித்துள்ளார். அத்துடன் அந்த முகாமின் பொறுப்பு அதிகாரியாக கோத்தபாய ராஜபக்ச இருந்ததை அறிந்ததாகவும் அவர் சாட்சியம் கூறியுள்ளார். இதனால் பொறுப்பு அதிகாரி என்ற முறையில் கோத்தபாய ராஜபக்சவுக்கே காணாமல் போன அந்த மகனைக் குறித்த பொறுப்பு உள்ளது என்பதே ஆணையத்தின் தவிர்க்க முடியாத முடிவாக உள்ளது. ஆனால் முகாம் மூடப்பட்டதால் அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதற்கான ஆவணங்கள் எதையும் ஆணையாளர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

- மற்றொரு தாய் தனது மகன் காணாமல் போனதையடுத்து அப்பகுதியிலுள்ள இராணுவ முகாம்கள் மற்றும் காவல் நிலையங்கள் அனைத்திலும் தேடியதோடு, கோத்தபாய ராஜபக்சவின் உதவியை நாடி அவரைச் சந்திக்கச் சென்றார். ஆனால் பயன்தரவில்லை. பின்னர் ஒரு மூத்த காவல்துறை அதிகாரி அவரிடம் அவருடைய தேடுதல் பயனற்றது என்றும் அவரது மகன் அழைத்துச் செல்லப்பட்ட நாளிலே கொல்லப்பட்டார் என்றும் கூறியுள்ளார்.

- தனது இரு சகோதரர்கள் கைது செய்யப்பட்டதாகவும் மூன்றாவது சகோதரர் மாத்தளை ஓய்வு விடுதியில் மாவட்ட

69 Unofficial ITJP translation of statement in Sinhala.

70 Unofficial ITJP translation of statement in Sinhala.

இராணுவ ஒருங்கிணைப்பாளராக இருந்த கோத்தபாய ராஜபக்சவிடம் உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர் ஊடாக 1989 நவம்பரில் ஒப்படைக்கப்பட்டதாகவும், பின்னர் அந்த மூன்றாவது சகோதரரும் காணாமல் போனதாகவும் ஒருவர் ஆணையர்களிடம் சாட்சியமளித்தார்.

- மற்றொரு வழக்கில், 1989 டிசம்பர் மத்தியில் கோத்தபாய ராஜபக்ச போர்சீலியன் இராணுவ முகாமுக்கு வந்ததை தான் கண்டதாக ஒருவர் சாட்சியமளித்தார், அவர் முந்தைய நாள் கைது செய்யப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தனது மைத்துனரைப் பார்க்க முயன்றபோது அவர் இதனைக் கண்டுள்ளார். மைத்துனர் ஏழு நாட்களுக்குப் பிறகு காணாமல் போனார்.

- மற்றொரு வழக்கில், ஓர் அரசு ஊழியர் 1989 நவம்பரில் கைது செய்யப்பட்ட தனது மகன் குறித்து விஜயா கல்லூரி இராணுவ முகாமிலிருந்த கோத்தபாய ராஜபக்சவிடம் உதவி கேட்க முடிந்திருக்கிறது. கோத்தபாய ராஜபக்ச அவரது மகனை அழைத்துச் சென்றது காவல்துறை என்று கூறியுள்ளார். அதனால், அவர் மாத்தளை காவல் கண்காணிப்பாளர் மகிந்த பாலசூரியவைச் சென்று சந்தித்திருக்கிறார். இந்த காவல் கண்காணிப்பாளர் பிற்காலத்தில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவால் நவம்பர் 3, 2009 அன்று இலங்கையின் காவல்துறை மா அதிபராக நியமிக்கப்பட்டார்.



கே ஜி ஜி கமலாவதியின் சோகமான வழக்கு

13 டிசம்பர் 1989 அன்று கமலாவதி வாழ்ந்த பகுதியில் சுமார் இரண்டாயிரம் கிராம மக்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் அவரது இரண்டு மகன்களும் (17 வயது ரோஹன நிஷாந்த மற்றும் 18 வயது சுசந்த ஜானக) ஆகியோர், மேலும் ஆறு பேருடன் (15 வயது சிறுவன் உட்பட) அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். தன் மகன்கள் விஜயா கல்லூரி இராணுவ முகாமில் அடைக்கப்பட்டிருப்பது அவருக்குத் தெரிந்திருந்தது. ஆரம்பத்தில் அவர்களின் பெயர்கள் கைதிகள் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் பின்னர் நீக்கப்பட்டன. அவரும் மற்ற பெற்றோரும் தங்கள் குழந்தைகள் அங்கு மாற்றப்பட்டிருக்கலாம் என்ற நம்பிக்கையில் ஏறக்குறைய ஒவ்வொரு இராணுவ முகாம் மற்றும் காவல் நிலையங்களுக்குச் சென்று தேடியுள்ளனர். பின்னர் அவர்கள் மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரி கோத்தபாய ராஜபக்ச உட்பட பலரிடம் கைது செய்யப்பட்டவர்கள் குறித்து தெரிவித்தனர்.

1989 டிசம்பர் 24 அன்று, மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு நந்திமித்ர ஏகநாயக்க நடத்திய விசாரணையில், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் கோத்தபாய ராஜபக்ச, இரண்டு சிறுவர்களும் இராணுவக் காவலில் வைக்கப்பட்டுள்ளதையும் அவர்கள் விரைவில் விடுவிக்கப் படுவார்கள் என்றும் ஒப்புக்கொண்டார். எனினும் பின்னர் அவர்கள் காணாமல் போயினர். [71]

ஒரு சட்ட உதவி அமைப்புக்கு பெப்ரவரி 1995 தேதியிட்டு எழுதிய கடிதத்தில், அவர்களின் தாயார் இவ்வாறு விவரிக்கிறார்:

மீண்டும் அரசாங்கப் பிரதிநிதி ஊடாக காவல் கண்காணிப்பாளரிடம் முறைப்பாடு செய்தோம். நான்கு நாட்களுக்குப் பின்னர், எனது மகன்களின் பெயர்கள் முகாமின் கைதிகள் பதிவேட்டில் 16 மற்றும் 17 ஆகிய இலக்கங்களின் கீழ் தோன்றின. பெயர் பட்டியலைப் படித்தவர் சார்ஜென்ட் ஜயதுங்க என்ற அதிகாரி. அவரிடம் அடையாள எண் இல்லை. நான் அவரைப் பார்த்துக் கோபத்துடன் கத்திக், 'எனது பிள்ளைகளை (கிழக்கில்) தமிழ்ப் புலிகளின் தாக்குதலில் இருந்து காப்பாற்றி அவர்களைப் பாதுகாப்பதற்காக இங்கு அழைத்து வந்தேன். இப்போது நீங்கள் அவர்களை என்ன செய்தீர்கள்?' என்று கேட்டேன். என் குழந்தைகளைப் பற்றிய சில தகவல்களைத் தெரிவிப்பதாகக் கூறி மறுநாள் காலை வருமாறுக் கூறினார். மறுநாள் காலை அவரைச் சந்தித்தேன். குழந்தைகள் உயிருடன் இருக்கிறார்கள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர் உறுதிப்படுத்தினார், ஆனால் அவர்கள் எங்கு வைக்கப் பட்டிருக்கிறார்கள் என்று கேட்க வேண்டாம் என்று என்னிடம் வேண்டிக் கொண்டார். அந்த தகவலை வெளியிடுவது அவரது வேலைக்கே ஆபத்தாக முடிந்துவிடும். [72]

அதே கடிதத்தில், கோத்தபாய ராஜபக்சவிடம் தனது மகன்கள் குறித்து உள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் பேசியதை விவரித்துள்ளார். அவர் அவர்களின் தடுப்புக்காவலை உறுதிப் படுத்தியதாகவும், அவர்களின் உடனடி விடுதலைக்கு உறுதியளித்ததாகவும் அவர் கூறினார்:

ஏழு நாட்களுக்குப் பிறகு விஜயா கல்லூரி முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட இரண்டு மாணவர்கள், எனது மகன்கள் முகாமில் அடைக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தினர். மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு.நந்திமித்ர ஏகநாயக்க அவர்கள் இரு குழந்தைகளை குறித்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு வினவியபோது, எனது மகன்கள் தங்களுடைய காவலில் இருப்பதை கோத்தபாய ராஜபக்ச ஒப்புக்கொண்டார். மேலும் மூன்று நான்கு நாட்களில் அவர்கள் விடுவிக்கப் படுவார்கள் என்றும் கூறினார். ஆனால் அவர்கள் திரும்பி வரவில்லை. 19 ஜனவரி 1990 அன்று ரெட் பார்னா முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட ஒருவர், எனது மூத்த மகனை முகாமில் பார்த்ததாக என்னிடம் கூறினார். 1993 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பெலவத்த முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட மற்றொரு நபர் எனது இரண்டாவது மகன் அந்த முகாமில் காணப்பட்டதாக கூறினார். மீண்டும், 1993 டிசம்பரில், நான்கரை வருடங்களாகக் காணாமல் போயிருந்து, பூசாவில் உள்ள இரகசிய முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட ஒருவர், எனது மூத்த மகனை அந்த முகாமில் பார்த்ததை உறுதிப்படுத்தினார். அதைத் தவிர அவர்கள் பற்றிய அதிகாரப்பூர்வ தகவல்கள் எதுவும் எங்களுக்கு வரவில்லை. அவர்களைத் தேடி ஏறக்குறைய ஒவ்வொரு

முகாமுக்கும் சென்றோம். 'அந்தப் பெயரில் யாரும் இங்கு இல்லை' என்பதுதான் எங்களுக்கு கிடைத்த பதில். [73]

[71] Unofficial ITJP translation of letter in Sinhala of February 1992 [89-12-13 LETTER 1]. ஒரு பத்திரிகையுடன் பல ஆண்டுகளுக்குப் பின்னர் நடந்த நேர்காணல் ஒன்றில், இப்படைவீரது பெயர் யு.பி.ஆர் பெரேரா என்று தன்கு நினைவிருப்பதாக கமலாவதி கூறினார். Colombo Telegraph, 'என்னுடைய மகன்களை விடுவிக்கும்படி கோத்தபாயவிடம் மன்றாடச்சென்றபோது என்னைத் திருப்பி அனுப்பினார்கள்.' – A mother, 7 Apr 2013, https://www.colombotelegraph.com/index.php/i-was-sent-back-when-i-went-to-meet-lt-colonel-gotabaya-to-plead-the-release-of-my-sons-a-mother/

[72] Unofficial ITJP translation of letter to NGO of February 1995 in Sinhala.

[73] Unofficial ITJP translation of letter to NGO of February 1995 in Sinhala.

"நான் அவரைப் பார்த்துக் கோபத்துடன் கத்தி அவரிடம் கேட்டேன், 'எனது பிள்ளைகளை [கிழக்கில்] தமிழ்ப் புலிகளின் தாக்குதலில் இருந்து காப்பாற்றி அவர்களைப் பாதுகாப்பதற்காக இங்கு அழைத்து வந்தேன். இப்போது நீங்கள் அவர்களை என்ன செய்தீர்கள்?"

விஜயா கல்லூரி இராணுவ முகாமில் எட்டு நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் கைதி ஒருவரும், கமலாவதியின் இரண்டு மகன்களும் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்ததை ஒரு கடிதம் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார். [74]

பல வருடங்களுக்குப் பின்னர் ஊடகவியலாளர்கள் தொடர்பு கொண்டபோது, தற்போது அமைச்சராக உள்ள நந்திமித்ர ஏகநாயக்க, திருமதி கமலாவதி தொடர்பான இந்த குறிப்பிட்ட சம்பவம் தனக்கு நினைவில் இல்லை என்று கூறினார், ஆனால் அந்த நேரத்தில் உள்ளூர் இளைஞர்கள் காணாமல் போன "எண்ணற்ற" வழக்குகளை தான் எடுத்ததாக கூறினார்: "எதிர்க்கட்சியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே நாடாளுமன்ற உறுப்பினர் நான்தான் ஏனைய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஐ.தே.க.வைச் சேர்ந்தவர்கள். அந்த நேரத்தில் மாத்தளை இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரியாக இருந்த கோத்தபாய ராஜபக்ச, தனக்கு மிகுந்த'ஒத்துழைப்பை' நல்கியதாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களிடம் மிகவும் 'அன்பாகவும்' இருந்ததாகவும் அவர் கூறினார். 'மோசமான குற்றங்களைச் செய்த இளைஞர்கள் கூட புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்ட அவர், அந்த குறிப்பிட்ட நிகழ்வு (கமலாவதியின்), விதிவிலக்காக இருந்திருக்கலாம்' என்றார். [75]

[74] Unofficial ITJP translation of letter in Sinhala to the CZC of 13 February 1995.

[75] Colombo Telegraph, 7 Apr 2013, op cit.

இவற்றில் தொடர்புடைய அரசியல்வாதிகள்

மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த ஐ.தே.க அரசியல்வாதி ஒருவருக்கு எதிராக, பலரைக் கொன்றதற்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதால், மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய ஒருவராக அவரை ஆணையம் அதிகாரப் பூர்வமாகக் குறிப்பிட்டது. 15 ஜூலை 1989 அன்று, இராணுவ சீருடை மற்றும் சாதாரண உடையில் மூன்று பிக்-அப் டிரக்குகளில் வந்த குழுவொன்று, பொல்வத்த, ரத்தோட்டையில் உள்ள ஒரு வீட்டை சுற்றி வளைத்து, வீட்டின் உரிமையாளரையும் பௌத்த அன்னதான விழாவிற்கான தயாரிப்புகளில் உதவிய எட்டு பேரையும் கடத்திச் சென்றது.[76] அதே நேரத்தில், அந்த கிராமத்தில் உள்ள மற்றொரு வீட்டில் இருந்து மூவர் கடத்தப்பட்டுள்ளனர். அன்று கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் (அனைவரும் SLFP ஆதரவாளர்கள்) வந்தவர்கள் அன்று காலை UNP அரசியல்வாதியான திரு புஞ்சி பண்டா கவிரத்னவின் வீட்டில் காணப்பட்டனர் என்று மத்திய வலய ஆணைக்குழுவிடம் (CZC) தெரிவித்துள்ளனர்.[77] அவர் அப்போது கலாச்சார அமைச்சராக இருந்தார். ஆனால் இப்போது உயிருடன் இல்லை. கடத்தப்பட்டவர்களின் சடலங்கள் கண்டி மாவட்டம், தலத்துஓயாவில் உள்ள மரஸ்சன பாலத்திற்கு அருகில் மூன்று நாட்களுக்குப் பின்னர் கண்டெடுக்கப்பட்டன. அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். [78]

குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளியாக கோத்தபாயவை ஆணையம் குறிப்பிட்டுள்ளது

இராணுவம் விசாரணை ஆணையங்களுடன் ஒத்துழைக்கத் தவறியது. எனவே ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு கட்டமைப்புகள் பற்றிய தகவல்கள் குறைவாகவே உள்ளன. எவ்வாறாயினும், விஜயா கல்லூரி இராணுவ முகாமிலிருந்து நடந்து செல்லும் தூரத்தில் உள்ள மாத்தளை கச்சேரியில் (மாவட்ட செயலகம்) தங்கியிருந்த கோத்தபாய ராஜபக்சவையே கட்டளை அதிகாரியாக சாட்சியங்கள் மற்றும் விசாரணை அதிகாரிகள் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டுள்ளனர். அவரது கண்காணிப்பிலேயே காணாமல் அடிக்கப்படுவதும் பிற மனித உரிமை மீறல்களும் நடந்திருக்கின்றன.

மாத்தளை மாவட்டத்தில் சந்தேகத்திற்கிடமானவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த முகாம்களாவன: மாத்தளை ஓய்வு விடுதி முகாம், ரெட் பார்னா முகாம், அம்பவத்த மகா வித்தியாலயம், பண்டாரபொல முகாம், கிறிஸ்ட் சர்ச் கல்லூரிக்கு அருகில், வரகாவல பீங்கான் தொழிற்சாலைக்கு எதிரே இருந்த மத்தவ இராணுவ முகாம், நாவுல, ஆரங்கல நெல் களஞ்சியம், கூம்பியங்கொட கோவில், ஓவிலிகந்த இராணுவ முகாம், அரங்கல இராணுவ முகாம், ரத்தோட்டை, கதரந்தென்ன பங்களா இராணுவ முகாம், உக்குவெல இராணுவ முகாம், உடுப்பிஹில்ல இராணுவ முகாம், பெலவத்த இராணுவ முகாம், பல்வெஹர இராணுவ முகாம், மற்றும் நாகொல்ல வீதியில் உள்ள ஹெட்டிபொல இராணுவ முகாம் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி கல்லூரி.

மாத்தளை மாவட்டத்தில் குற்றஞ்சாட்டப்பட்டதாகக் கூறப்படும் 24 பேரின் பட்டியலை ஆணைக்குழு தொகுத்துள்ளது ('விருப்பமற்ற நீக்கம் அல்லது காணாமல் போன நபர்களின் (மத்திய வலயம்) ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு) காணாமற்போதல்களுக்கு பொறுப்பாக மாறியவர்களின் பெயர்கள் – மத்திய மாகாணம் – மாத்தளை மாவட்டம்'). மத்திய மண்டல ஆணையத்தால் (CZC) பெயரிடப்பட்டவர்களில் 'ராஜபக்ச ஜி, OIC மாத்தளை இராணுவ முகாம்' (இந்தப் பட்டியலில் எண் 16) உள்ளது.[79] இந்த வழக்கு செப்டம்பர் 1989 இல் கைது செய்யப்பட்டு 40 நாட்கள் விஜயா கல்லூரி இராணுவ முகாமில் வைக்கப்பட்டிருந்தபோது சித்திரவதை செய்யப்பட்ட ஒருவரை உள்ளடக்கியது. பட்டியலிடப்பட்ட மற்றவர்கள் அவரது கட்டளையின் கீழ் உள்ள மற்ற இராணுவம் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஒரு அரசியல்வாதி.

கோத்தபாயவின் கட்டளையின் கீழ் கஜபா படைப்பிரிவின் 1வது படையணியின் சட்டத்திற்கு புறம்பான கொலைகள்

1989 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அவசரகாலச் சட்டங்கள் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர், பாதுகாப்பு மற்றும் துணை இராணுவ கொலைக் குழுக்கள் அதிகரித்தன. அதன் காரணமாக சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் பற்றிய முறைப்பாடுகள் கணிசமான அளவு அதிகரித்தன. பாதுகாப்புப் படை உறுப்பினரின்

[76] Unofficial ITJP translation of six submissions in Sinhala.

[77] Spelling of surname according to grandson's twitter account https://twitter.com/

[78] Unofficial ITJP translation of six undated submissions in Sinhala.

[79] ITJP யிடம் CZC இற்கு இதுதொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் மேலதிக தகவல்கள் உள்ளன. ஆனால், முறைப்பாடு செய்தவரையும் அவர்களது உறவினர்களையும் பாதுகாப்பதற்காக அவற்றை இங்கு வெளியிடவில்லை.

உறவினரின் ஒவ்வொரு கொலைக்கும் பதிலாக ஜே.வி.பி உறுப்பினர்களின் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட உறவினர்கள் கொல்லப்படுவார்கள் என எச்சரிக்கும் சுவரொட்டிகள் பொது இடங்களில் தோன்றின. அச்சுவரொட்டிளில் சில இலங்கை இராணுவத்தின் பெயரில் இருந்தன. [80]

வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான ஆணைக்குழுக்களில் செய்யப்பட்ட முறைப்பாடுகளில், 1வது கஜபா படைப்பிரிவின் படையினர் கைதுசெய்யப்பட்டவர்களை வேண்டுமென்றே கொன்று குவித்துள்ளதைப் பற்றிய முறைப்பாடுகள் நிறைய இருந்தன. அதிலும் சில கொலைகள் மிகக் கொடூரமாக நடத்தப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில் பலவற்றில், ஆணையங்கள் தனிப்பட்ட ராணுவ அதிகாரிகளின் பெயர்களை இதற்கு பொறுப்பானவர்களாகக் குறிப்பிட்டுள்ளன. இவர்கள் அனைவரும் 1989 மே 1 முதல் 1990 ஜனவரி வரையிலான காலகட்டத்தில் கோத்தபாய ராஜபக்சவின் தலைமையில் செயல்பட்டுள்ளனர்.

7 அக்டோபர் 1989 தான் ஆணையங்களிடம் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் வந்த நாளாகும்: 60 க்கும் மேற்பட்டவை அன்று மட்டும் வந்திருந்தன. அன்றைய தினம், ஆணைக்குழுக்களின் அறிக்கையின்படி, பல்வெஹெரா இராணுவ முகாமுடன் இணைக்கப்பட்ட கஜபா படைப்பிரிவின் அதிகாரிகள் ஜே.வி.பி உறுப்பினர்கள் மற்றும் இராணுவத்திற்கிடையே நடந்த ஒரு மோதலுக்குப் பின் 22 கிராம மக்களைக் கைது செய்து கொன்றனர். அந்த மோதலில் ஒரு சிப்பாய் இறந்திருந்தார். இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ ஜீப் மீது தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, பல்வெஹர இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினர் வாகனங்களில் வந்து வீடுகளின் கதவுகளைத் தகர்த்து, வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்த 22 பேரை அழைத்துச் சென்று, கிம்பிஸ்ஸ சந்தியில் வைத்து 17 பேரை சுட்டுக் கொன்றனர். மீதமுள்ள ஐந்து பேரை ஜபாலடுவஸ கோவிலுக்கு அருகில் சுட்டுக் கொன்றுள்ளனர். அவசரகாலச் சட்டத்தின் கீழ் சடலங்களை தகனம் செய்வதற்காக பொலிஸார் ஒப்படைத்தனர்.

இறந்தவர்களில் 13, 15 மற்றும் 17 வயதுடைய மூன்று பதின் வயது சிறுவர்களும் அடங்குவர். கிம்பிஸ்ஸ சந்தியில் விடப்பட்ட சடலங்கள் எரிக்கப்பட்டதாகவும், பின்னர் காவல்துறையினரும் இராணுவத்தினரும் எரிந்த சடலங்களை ட்ரக் வண்டியில் ஏற்றி தம்புள்ளை மயானத்திற்கு கொண்டு சென்றதாகவும், அங்கு பலுதாவ கோவிலுக்கு அருகே வீசப்பட்ட ஐந்து உடல்களுடன் இந்த சடலங்களும் அடையாளம் காண முடியாதவாறு மேலும் எரிக்கப்பட்டதாகவும் சாட்சிகள் தெரிவித்தனர்.

மற்ற சம்பவங்களில், பாதுகாப்புப் படையினர் பாதிக்கப்பட்டவர்களின் எச்சங்களை மிகக் கொடூரமான முறையில் காட்சிப்படுத்தினர். 29 ஆகஸ்ட் 1989 அன்று மாத்தளை மாவட்டத்தில் உள்ள வெல்லங்கஹவத்தை கிராமத்தில் இருந்து புதிய T56 ஆயுதங்களுடன் ஆயுதம் ஏந்திய இராணுவ வீரர்கள் ஏழு இளைஞர்களை அழைத்துச் சென்று அடித்துக் கொன்றனர். மறுநாள், வெல்லாங்கஹவத்தை கோவில் காணியில் ஒரு குழு தலையில்லாத உடல்களை புதைத்தது. தலைகள் பொலித்தீன் பைகளில் வைக்கப்பட்டு ரத்தோட்டையில் வேறு இடத்தில் புதைக்கப்பட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். இதற்கு பொறுப்பாக மற்றவர்களுடன் குறிப்பாக மாத்தளை ஓய்வு விடுதியில் உள்ள கஜபா ரெஜிமென்ட் புலனாய்வு அதிகாரியின் பெயரை சாட்சிகள் அடையாளம் காட்டினர்.

மாத்தளையில் சித்திரவதை

இராணுவம் அல்லது காவல்துறை காவலில் இருந்து உயிர் தப்பிய சில கைதிகள் விஜயா கல்லூரி இராணுவ முகாம் மற்றும் மாவட்டத்தில் உள்ள மற்ற தடுப்புக்காவல் இடங்களில் தங்களுக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகள் குறித்து ஆணையங்களுக்கு சாட்சியமளித்தனர். தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு, மிளகாய்ப் புகையை உள்ளிழுக்க நிர்ப்பந்திக்கப்பட்டு, கண்கள் கட்டப்பட்ட நிலையில் அடிக்கப்பட்டதாகவும் பலர் கூறினர். முக்கிய எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அல்லது ஆதரவாளர்கள் என்று சாட்சியமளித்த பலர் கூறியது குறிப்பிடத்தக்கது.

1989 செப்டம்பர் மத்தியில் மற்றவர்களுடன் கைது செய்யப்பட்ட ஒருவர் விஜயா கல்லூரி முகாமுக்கு தான் அழைத்துச் செல்லப்பட்டதை விவரித்தார், அங்கு அவர் கயிற்றால் இடைநிறுத்தப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார். அவர் உடலெங்கும் சிகரெட்டால் எரிக்கப்பட்டத் தழும்புகள் இருந்தன. மேலும் அவர் துப்பாக்கிக் குழலால் தலையில் அடிக்கப்பட்டதுடன், உள்ளங்கால்களில் கடுமையாகத் தாக்கப்பட்டார். பின்னர் அவரது கண்களை கட்டி அருகில் உள்ள காட்டுப்பகுதிக்கு கொண்டு சென்றனர். அங்கு, வீரர்கள் ஒவ்வொரு கைதியையும் தங்கள் உடலில் பெட்ரோல் போன்ற பொருளை ஊற்றச் சொன்னார்கள். பின்னர் கைதிகளுக்கு

[80] Amnesty International, Annual Report 1990, op cit, p219

தீப்பெட்டி கொடுத்து தீக்குளிக்கச் சொன்னார்கள். அச்சமயம் அங்கு ஒரு வாகனம் ஏதோ செய்தியுடன் வந்தது. சாட்சியம் அளித்த உயிர் பிழைத்தவர், பெட்ரோலில் நனைக்கப்பட்ட நிலையிலேயே, மீண்டும் வாகனத்தில் ஏற்றி, விஜயா கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ஆண் மற்றும் பெண் கைதிகளுக்கும் தடுத்து வைக்கப்பட்ட தங்கள் உறவினர்களைப் பற்றி விசாரிக்க வந்த குடும்ப உறுப்பினர்களுக்கும் எதிரான பாதுகாப்புப் படையினரின் பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைகள் குறித்தும் ஆணையங்கள் அறிக்கை அளித்தன. 1989 ஒக்டோபர் மாதம் ஓவிலிகந்த இராணுவ முகாமில் தனது கணவரைப் பற்றி விசாரிக்கச் சென்ற போது படையினர் தனது தலைமுடியை பலவந்தமாக வெட்டியதாக மாத்தளையில் ஒரு பெண் கூறினார். அதனால் மிகுந்த பயந்து போன அவர், காவல்துறையில் புகார் கொடுக்கத் துணியவில்லை. தனது கணவர் காணாமல் போன பிறகு கஜபா ரெஜிமென்ட் உளவுத்துறை அதிகாரி ஒருவர் குடிபோதையில் தனது வீட்டிற்கு வந்ததாக மற்றொரு பெண் கூறினார். அவர் பாலியல் ரீதியான அணுகுதல்களை செய்தார். ஆனால் அவரது மூன்று குழந்தைகளும் பெற்றோரும் வீட்டில் இருந்ததால், அவரால் அவரை எதிர்க்க முடிந்தது என்று கூறினார்.

சித்திரவதைக்கு ஆளான பலர் உயிர் பிழைக்கவில்லை. இறந்த உடல்களின் தலை துண்டிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டதாகவும், விஜயா கல்லூரி இராணுவ முகாமில் உள்ள விசாரணை அறையின் மூலைகளில் தலைகள் கிடப்பதைப் பார்த்ததாகவும் சிலர் கூறினர். 2013 இல் வெளியிடப்பட்ட ஒரு பெயரிடப்படாத ஒரு அறிக்கையில், உயிர் பிழைத்தவர் (சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்) விஜயா கல்லூரி வளாகத்தில் அவர் அனுபவித்ததைப் பற்றிய பின்வரும் விவரங்களை வழங்கினார்:

விஜயா கல்லூரியின் குணசேன மண்டபத்திற்குள், குறைந்தது 700 கைதிகளாவது இருந்திருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். என்னையும் அரங்கில் அமர வைத்தார்கள். மறுநாள் மாலை, அவர்கள் முகமூடி அணிந்த மூவரை அழைத்து வந்து எங்கள் முன் நிறுத்தினார்கள். ஆனால் அவர்கள் என்னை அடையாளம் காணவில்லை. இரண்டு அறைகள், ஒன்றுக்கொன்று பிரிக்கப்பட்டிருந்தன. ஒன்று கைதிகளை அடிக்கவும் விசாரணை செய்யவும் பயன்படுத்தப்பட்டது. மற்றொன்று தீவிர சித்திரவதைக்கு பயன்படுத்தப்பட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர்கள் என்னை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். முதலில் மிளகாய் பொடியை மூக்கின் அருகில் வைத்து என்னவென்று கேட்டார்கள். நான், 'மிளகாய்' என்றேன். பின்னர் அவர்கள் ஒரு வாளை என் அருகில் வைத்து, அதன் கூர் முனையைத் தொட்டு, அதன் மீது என்ன இருக்கிறது என்று சொல்லச் சொன்னார்கள். நான், 'மோட்டார் ஆயில்' என்றேன். பிறகு துப்பாக்கியைக் கொடுத்து அது என்ன என்று கேட்டார்கள். நான், 'ஒரு துப்பாக்கி' என்று பதிலளித்தேன். "என்ன வகையான துப்பாக்கி" என்று கேட்டார்கள், எனக்குத் தெரியாது என்று சொன்னேன். 'ஹா, அப்படியா' என்று சொல்லிவிட்டு என்னை அடிக்க ஆரம்பித்தார்கள். துப்பாக்கியைப் பிரிக்கச் சொல்லி என்னைத் தொடர்ந்து அடித்தனர்.

பின்னர், "அவனை இறைச்சிக் கூடத்தில் போடுவோம்" என்றுச் சொல்லி என்னை அடிப்பதை நிறுத்தினர். ஏற்கனவே எனக்கு பாதிஉயிர் போயிருந்தது. என்னைக் கொன்றுவிடுவார்களோ என்று பயந்தேன். ஆனால் நான் என்ன செய்ய முடியும்? உண்மையில், அங்கு நடந்த சம்பவங்களின் சரியான வரிசை எனக்கு நினைவில் இல்லை. இரவில் வேறு இரண்டு பேரை அழைத்து வந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்தேன். இருவரும் துப்பாக்கிகளை எங்கு மறைத்து வைத்துள்ளனர் என்பதைக் கூறும்படி கேட்டு அடிக்கப்பட்டனர். அடி தாங்க முடியாமல் போனதும் அந்த இரண்டு பையன்களும், 'எங்களுக்கு ஆயுதங்கள் எதுவும் தெரியாது. ஆனால் ஒரு இரவு, நாங்கள் சில சுவரொட்டிகளை ஒட்டினோம்' என்றனர். பிறகு அடிப்பது நின்றது. கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் சத்தம் இல்லை. அப்போது எங்களுக்கு சிகரெட் புகை வாசனை வந்தது. எல்லோருக்கும் தெரியும், அந்த வாசனை அடுத்த சுற்று சித்திரவதையின் அடையாளம்.

ஒருவரின் கண்கட்டை அவிழ்த்து அவரை எங்கள் அனைவரின் கண்கட்டையும் அவிழ்க்கச் சொன்னார்கள். பிறகு அவர் என் கண் கட்டையும் அவிழ்த்தார். அது ஒரு பெரிய அறை. எனக்கு நினைவுள்ள வரையில் சுமார் எட்டு பேர் உள்ளே இருந்தார்கள்.

'அவனுக்கு என்ன செய்யப் போகிறோம் என்பதை நீங்கள் அனைவரும் பார்க்க வேண்டும் என்பதற்காகவே உங்கள் கண்கட்டுகளை அவிழ்த்துவிட்டோம்' என்றார் அவர்களில் ஒருவர். சுவரொட்டிகளை ஒட்டியதை ஒப்புக்கொண்ட சிறுவன், கூரையின் உத்தரத்திலிருந்து தலைகீழாகத்

தொங்கவிடப்பட்டான். பின்னர் அவரது முகத்தை சிகரெட் லைட்டரால் எரித்தனர். அதுபோன்ற சமயங்களில் வெளியாட்களுக்கு அலறல் சத்தம் கேட்காமல் இருக்க சத்தமாக இசையை இசைத்தார்கள். அவர்கள் அவரை தலைகீழாக தொங்கவிட்டு, வேகமாக அவரை சுழற்றியபோது, அவர் தலை சுவரில் மோதியது. அப்போது கட்டுப்பாடின்றி அவரது உடல் நடுங்கிளது. பின்னர் வாய் மற்றும் மூக்கில் இருந்து ரத்தம் கொட்டியதால் இறந்தார். பிறகு, 'இதுதான் உங்களுக்கு எல்லாருக்கும் ட்ரீட்மென்ட்' என்று எங்கள் கண்களை மீண்டும் கட்டினார்கள். எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. வாழும் ஆசையை கைவிட்டேன். அவர்களில் ஒருவர் விடியற்காலையில் வந்து, 'இன்று இரவு நீங்கள் அனைவரும் ஊஞ்சலில் வைக்கப்படுவீர்கள்' என்றார். பிறகு ஒருவரிடம் 'தலையை வெட்டுங்கள்' என்றார். அவர்கள் இன்னொருவரைக் கொல்லப் போகிறார்கள் என்று நினைத்தேன். ஆனால் முந்தைய இரவில் கொல்லப்பட்ட நபரின் தலையை துண்டிக்கதான் சொன்னார் என்பதை பின்னர் நான் உணர்ந்தேன். அன்று மதியம், முகமூடி அணிந்த மற்றொரு ஆள்காட்டியை அழைத்து வந்தனர். அவரும் என்னை அடையாளம் காணவில்லை. அன்று மாலை கண்ணைக் கட்டி அரங்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். நான் வெளியே அழைத்துச் செல்லப்படுவதற்கு முன்பு, முந்தைய நாள் கொல்லப்பட்ட இளைஞனின் தலை, ஒரு மூலையில் கிடந்ததைப் பார்த்தேன். சுமார் ஒரு வாரம் அந்த அரங்கில் அடைக்கப்பட்டேன்.' [81]

பின்னர் அவர் தன்னுடன் முன்னால் பணிபுரிந்த ஒருவர் கொல்லப்பட்டதை நேரில் பார்த்தார். மீண்டும் ஒருமுறை 'படுகொலைக்கூடத்துக்கு' அழைத்துச் செல்லப்பட்டபோது நடந்ததை பின்வருமாறு விவரித்தார்.

என்னை உள்ளே அழைத்துச் சென்றபோது, சித்திரவதைக் கூடத்தின் ஒரு மூலையில் நான்கைந்து தலைகள் குவிந்து கிடப்பதைக் கண்டேன். அவர்கள் அத்தலைகளின் மீது மோட்டார் எண்ணெயை ஊற்றினர். அதனால் அவை யாருடையவை என்று அடையாளம் காண முடியாத அளவுக்குச் சென்றன. என்னை அந்த அறைக்குள் அழைத்துச் செல்லும்போதும், தலைகீழாகத் தொங்கவிடப்பட்டிருந்த இருவரை அடித்துக் கொண்டிருந்தார்கள். அந்த இடமெங்கும் ரத்தமும் சதையுமாக இருந்தது. சுவர்கள் இரத்தக் கறைகளால் மூடப்பட்டிருந்தன. மரண பயம் என்றால் என்ன என்பதை அன்றுதான் ஆழமாகப் புரிந்துகொண்டேன். அவர்களில் இருவர் என்னை இறைச்சிக் கூடத்திற்கு அழைத்துச் சென்றனர். மற்றொரு இராணுவ வீரர் ஒரு கயிற்றைக் கொண்டு வந்தார்.

சுமார் பத்து நிமிடங்களுக்குப் பிறகு அவர்கள் என்னிடம், 'ஏன் இப்படிப் பயப்படுகிறாய்?' என்று கேட்டுவிட்டு, 'உனக்குப் பிடித்திருந்தால் நின்றுகொண்டு பேசலாம். நீங்கள் விரும்பும் வழியில், உங்களுக்குத் தகுதியானதைப் பெறுவீர்கள்.' என்றார். அப்போது அதே வங்கியில் பணிபுரியும் எனக்கு தெரிந்த நபரை அழைத்து வந்தனர். கை, கால்கள் உடைந்ததால் அவரை தரையில் இழுத்துச் சென்றனர். அவர் என் முன்னால் அழுதுகொண்டே, 'அமரே, தயவுசெய்து என்னைக் காப்பாற்ற ஏதாவது செய்யுங்கள். நான் ஏற்கனவே இறந்து கொண்டிருக்கிறேன்.' என்று கதறினார்.

'இப்போது பேசு!' என்று என் கையை முறுக்கினார்கள். நான் மயங்கிவிட்டேன். சில கொலைகள் பற்றி என்னிடம் கேட்டார்கள். நான் சுயநினைவுக்கு வருவதற்குள், மற்றவர் மூச்சுத் திணறிக் கொண்டு, தண்ணீருக்காக கெஞ்சிக் கொண்டிருந்தார். அன்று இரவே அவரும் இறந்து போனார். என் கண் முன்னாலேயே அவர் தலையை துண்டித்து, மோட்டார் ஒயிலை தலையில் ஊற்றி உடலை எடுத்துச் சென்றனர். அவர்களில் ஒருவர் துண்டிக்கப்பட்ட தலையை ஒரு மூலையில் உதைத்தார். [82]

[81] Janarala, Matale Mass Grave. 'Decapitated heads were piled up in the room', 9 Dec 2012. மூல ஆக்கம் அச்சுப்பதிப்பில் மட்டுமே உள்ளது. இணையத்தில் இல்லை. இங்கே இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.:
https://janarala.wordpress.com/2013/03/30/%E0%B6%B8%E0%B7%8F%E0%B6%AD%E0%B6%BD%E0%B7%9A-%E0%B7%83%E0%B6%B8%E0%B7%96%E0%B7%84-%E0%B6%B8%E0%B7%92%E0%B6%B1%E0%B7%93%E0%B7%80%E0%B6%BD-%E0%B7%83%E0%B6%AD%E0%B7%8A%E2%80%8D%E0%B6%BA-%E0%B7%80/

[82] Janarala, op cit

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை

காணாமல்போதல்கள் சிறிலங்காவில் நீண்டகாலமாக நடக்கும் மீறலாகவே இருக்கின்றது. இது 1971 ஜே.வி.பி கிளர்ச்சிக் காலத்திலும் நடந்தவையும் 1984 ல் யாழ்ப்பாண அன்னையர் முன்னணி ஆரம்பிக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்த வடக்கிலங்கையில் தமிழ் இளைஞர்கள் பெருந்தொகையில் கைதுசெய்யப்பட்டமையும் பிரதானமாக ஆவணப் படுத்தப்பட்டுள்ளன. 1986 இல், இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் காணாமற்கோன 272 பேருடைய சம்பவங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை அனைத்துலக மன்னிப்புச் சபை வெளியிட்டது.[83] காணாமற்போனோர் தொடர்பாக ஐ.நா. செயற்குழு (WGED) விண்ணப்பங்கள் கடிதங்கள் மூலமாக தனிப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக கரிசனை எழுப்பியது.[84] 1988 பெப்ரவரியிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உரையாற்றியபோது (WGED) இற்கு முறையான பதிலை சிறிலங்கா வழங்கவில்லை என்று அதனை அனைத்துலக மன்னிப்புச்சபை விமர்சித்திருந்தது. காணாமல் போதல்களால் சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள சமூகப்பாதிப்புக்கள் தொடர்பாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட புத்தகம் ஒன்றில், ஜேன் தோம்சன் – சனநாயக்கா பின்வரும் விடயத்தைச் சுட்டிக்காட்டுகின்றார். அதாவது, மற்ற எந்த மீறல்களையும் விட, காணாமல் போன செயல் என்பது தனிநபரை மட்டும் குறிவைக்கவில்லை, மறாக சமூக மற்றும் கலாச்சார நெறிமுறைகளை முழுவதுமாக சிதைத்து, கீழறுக்கும் நோக்கத்துடன், இயல்பான அன்றாட வாழ்வை மாற்றி, அவர்கள் மத்தியில் அச்சம், பாதுகாப்பின்மை, அவநம்பிக்கை ஆகியவற்றை ஏற்படுத்துகின்றது.[85] காணாமற்போதல்கள் என்பது தொடர்ந்து நடைபெறும் ஒன்றாக உள்ளது என்பதையும், அதனால், காணாமற் போனவர்களின் உறவினர்கள் அனுபவித்துவரும் தீர்க்கப்படாத பேரதிர்ச்சியுடன் பிரிக்க முடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளை எதிர்க்கும் அதிகாரத்தில் இருப்பவர்களின் தற்போதைய தண்டனையிலிருந்து விலக்களிப்பு மற்றும் தொடமுடியாக நிலைமை ஆகியவற்றுடன் இது நேரடியாக தொடர்புடையது என்றும் அவர் கூறுகின்றார்.[86] மேலும் குற்றவாளிகளின் அடையாளத்தையும் நோக்கத்தையும் மறைத்து பாதிக்கப் பட்டவர்களை பலிகடா ஆக்கும் தனது சொந்த குடிமக்களுக்கு எதிராக செயல்படும் வழியை ஏற்படுத்துவதன் மூலம், உலகை தன் தலையில் வைத்து, சாதாரணமானதை அசாதாரண மானதாகவும், அசாதாரணமானதை வழக்கமானதாகவும் மாற்றுவதற்கு காணாமற்போதல்கள் அரசுக்கு உதவுகிறது.[87]

சர்வதேச அழுத்தங்களைத் தொடர்ந்து, 1989 ஒக்ரோபர் 9ஆம் திகதி சிறிலங்காவிற்கு ஒரு குழுவை அனுப்பி அங்கே அவர்களது வழமையான நடவடிக்கைகளைத் தொடங்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு ஜனாதிபதி பிரேமதாசா அழைப்புவிடுத்தார். ஒக்ரோபர் 16ஆம் திகதி, நான்கு பேரைக்கொண்ட செஞ்சிலுவைச் சங்க குழு கொழும்பை வந்தடைந்து, தேசிய உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, தீவின் பல பகுதிகளிலுள்ள மருத்துவ தேவைகள் மற்றிய மதிப்பீடுகளைச் செய்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஏற்பாடுகளை மேற்கொண்டது. ஒக்ரோபர் 18 ஆம் திகதி, செஞ்சிலுவைக் குழுவின் தலைமையதிகாரியை அழைத்த ஜனாதிபதி பிரேமதாசா அதன் செயற்பாடுகளுக்கு தனது முழுமையான ஆதரவு இருக்கும் என்று உறுதிப்படுத்தினார். ஒக்ரோபரிலும் நவம்பரிலும் சுகாதார, வெளிவிவகார, நீதி அமைச்சர்களுடன் பல சந்திப்புக்கள் நடைபெற்றன. இதன்மூலமாக குறுகிய நேரத்திலேயே தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கக்கூடியவாது, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தது.[88] 1989 இன் இறுதிக்குள், காணாமற்போனவர்களை கண்டுபிடித்துத் தருமாறு 3,857 முறைப்பாடுகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பெற்றிருந்தது.[89]

[83] Amnesty International: Sri Lanka: 'Disappearances', Sep 1986 (AI Index: ASA37/08/86), ,izaj;jpy; ,y;iy. See also Amnesty International, Annual Report, 1987, p264-9, https://www.amnesty.org/download/Documents/POL1000021987ENGLISH.PDF.

[84] The UN Working Group on Disappearances had considered 326 cases by the end of 1986; despite a government response on 212 cases, the Working Group said only five had been resolved and the fate and whereabouts of 321 people remained unclear. See United Nations, Working Group on Enforced or Involuntary Disappearances, Annual Report, p28, https://documents-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G87/101/78/PDF/G8710178.pdf?OpenElement.

[85] APA Citation. Jane Thomson-Senanayake & Asian Human Rights Commission (2014). A sociological exploration of disappearances in Sri Lanka : 'not even a person, not even a word...' Hong Kong, China: Asian Human Rights Commission.

[86] Ibid

[87] Ibid

[88] ICRC, Annual Report, 1989, p63-64, https://library.icrc.org/library/docs/DOC/RA_1989_ENG.pdf

[89] ICRC, Collection of press releases, p59; also http://desastres.unanleon.edu.ni/pdf/2005/julio-agosto/parte3/pdf/eng/doc4323/doc4323-4a.pdf

1989 டிசம்பர் 4 பாராளுமன்றப் பதிவுகளின்படி (பக்கம் 941) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாட்டிற்குள் அனுமதித்தமைக்கான மகிந்த ராஜபக்ச அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்ததுடன், வலிந்தும் விரும்பத்திற்கு மாறாகாவும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஐ.நா. செயற்குழுவையும், அனைத்துலக மன்னிப்புச் சபையையும் சிறிலங்காவிற்கு விஜயம் செய்ய அனுமதிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.[90] OPFMD உம், அன்னையர் முன்னணியும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இதர மனித உரிமை அமைப்புக்களுக்கும் தொடர்ச்சியாக தகவல்களை வழங்கிவந்தன.[91] உண்மையில், 1990 செப்ரெம்பரில், ஜெனிவாவில் உள்ள வலிந்தும் விரும்பத்திற்கு மாறாகாவும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஐ.நா. செயற்குழுவைச் சந்திப்பிற்கு மகிந்த ராஜபக்ச எடுத்துச் செல்லவிருந்த காணாமற்போனோர் தொடர்பிலான 533 விபரங்களைக் கொண்ட ஆவணங்களை அவரிடமிருந்து பொலிசார் கையகப்படுத்தினார்கள். தன்னுடைய அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதாக அவர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்ததையடுத்து, ஒக்ரோபரில் அவ்வாணங்கள் அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டன.[92]

பின்னர், 1991 ஒக்ரோபரில், UN WGEID சிறிலங்காவிற்கு விஜயம் செய்வதற்கு அரசாங்கம் அனுமதித்தது. 1989 இல் முறைப்பாடு செய்யப்பட்ட 2,879 முறைப்பாடுகள் உட்பட, ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்திடம் வினவியதாக UN WGEID தமது அறிக்கையில் தெரிவித்திருந்தது.[93] 1992 ஒக்ரோபரில் பிறிதொரு விஜயத்தையும் அது மேற்கொண்டிருந்தது.[94]

தொடர்ச்சியான முறையீடுகள், சர்வதேச மற்றும் தேசிய ரீதியிலான தலையீடுகள் மூலமாக, சிறிலங்காவில் பரந்தளவில் நடந்த திட்டமிட்ட காணாமற்போதல்களின் தன்மையினை சிறிலங்கா அரசாங்கமும் இராணுவமும் முழுமையாக தெரிந்திருந்தும் பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அவர்கள் தவறினார்கள் என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

[90] Colombo Telegraph, Mangala Samaraweera, Rajapaksa – Then And Now, 2012 https://www.colombotelegraph.com/index.php/rajapaksa-then-and-now/

[91] ITJP சர்வதேச மன்னிப்புச்சபையின் முன்னாள் உறுப்பினருடன் 2020 மார்ச்சில் மேற்கொண்ட நேர்காணல். அன்னையர் முன்னணி 1990 யூனில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போதைய எதிர்க்கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர்களான மகிந்த ராஜபக்ச மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் அதனை உருவாக்கியவர்களில் அடங்குவர். See https://www.refworld.org/docid/3ae6abaa6c.html.

[92] Amnesty International, Annual Report 1991, op cit, p211

[93] UN, Report on the visit to Sri Lanka by three members of the Working Group on Enforced or Involuntary Disappearances (7-18 Oct 1991), p43, https://documents-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G92/100/49/PDF/G9210049.pdf?OpenElement]

[94] UN, Report of WGEID, Addendum, Report of visit to Sri Lanka by three members of the WGEID (5-15 October 1992), 30 Dec 1992, https://documents-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G93/100/36/IMG/G9310036.pdf?OpenElement


மாவட்ட செயலகம்
(இராணுவ
ஒருங்கிணைப்பு
அலுவலகம் இங்கே
இருந்தது)
விஜயா
கல்லூரி
குணசேனா
மண்டபம்
மாத்தளை வெவ்வு
விடுதி
நாணயக்காரா
பூங்கா
மக்டோவால்
கோட்டை
மாத்தளை
ஆதார
வைத்தியசாலை
பாரிய
புதைகுழி
200 M

5. சட்டப் பகுப்பாய்வு

சிறிலங்கா தனது எல்லைக்குள் அல்லது அதன் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து நபர்களின் உரிமைகளையும் பாரபட்சமின்றி பாதுகாக்கவும், மதிக்கவும், ஊக்குவிக்கவும் மற்றும் நிறை வேற்றவும் சர்வதேச சட்டத்தின் கீழ், கடமைப்பட்டுள்ளது.[95] மனித உரிமைகள் சட்டத்தின் மொத்த மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களை விசாரித்து வழக்குத் தொடரும் கடப்பாடு, அத்துடன் மீறல்கள் பற்றிய உண்மையைக் கண்டறிவதற்கான பாதிக்கப்பட்டவர்களின் உரிமை, மற்றும் போதுமான, உடனடி நிவாரணம் பெற்று கொள்வதற்கான உரிமை ஆகியவையும் இதில் அடங்கும்.[96] மீறல்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கவேண்டிய கடப்பாடும் அரசுக்கு உள்ளது.[97] மேலும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள்,[98] போர்க்குற்றங்கள்,[99] இனப்படுகொலை மற்றும் குற்றச் சித்திரவதைகள் (தனிப்பட்ட குற்றமாக)[100] போன்றவையும் வழக்கத்திலுள்ள சர்வதேச சட்டங்கள் என்ற நிலையை அடைந்துள்ளன.

இரண்டாவது ஜே.வி.பி கலவரம் நடந்த நேரத்தில் International Covenant on Civil and Political Rights (ICCPR),[101] The Convention on the Elimination of All Forms of Discrimination against Women (CEDAW),[102] the International Convention on the Elimination of All Forms of Racial Discrimination,[103] and the International Covenant on Economic, Social and Cultural Rights.[104] உட்பட பல சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களில் கையொப்பமிட்டிருந்தது. அத்துடன் 1949 ஜெனிவா ஒப்பந்தத்திற்கும் கட்டுப்பட்டிருந்தது. அத்துடன், இது 1959 இல் மீள்உறுதிப்படுத்தப்பட்டதுடன், ஜெனீவா பொதுவான சரத்து 3-4 இனாலும் மீளுறுதிசெய்யப்பட்டது. இவை உள்நாட்டு ஆயுதப் மோதல்களுக்கும் பிரயோகிக்கப் படக்கூடிய வழக்கத்திலுள்ள சர்வதேச சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. [105]

கிளர்ச்சி /உள்ளக ஆயுத மோதல்?

சிறிலங்காவில் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள், 1971 மற்றும் 1987-1989 படுகொலைகளை ஒரு 'insurrection' and 'insurgency' என வகைப்படுத்தினாலும், இந்த வகைப்படுத்தல் விசாரணைக்கு உட்பட்டதே. 'insurrection' என்னும் சொற்பதமானது 'தமது அரசாங்கத்திற்கு எதிராக, பொதுவாக வன்முறைகொண்டு, குடிமக்கள் கிளர்ச்சி அல்லது அணிதிரள்வதை' குறிக்கும்.[106] ஆனால் இவ்வாறாக நடைபெறும், கட்டமைத்து மேற்கொள்ளப்படும் புரட்சியின் அளவினை எட்டாத கிளர்ச்சிகளைக் குறிப்பிடுவதற்கே வரலாற்றில், இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது இதன்மூலமாக அதற்கு சட்டத்தன்மை இல்லையென்று சொல்வதற்கும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்குக் கட்டுப்படுவதைத் தவிர்ப்பதற்கும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது.[107] மேலும், அரச பார்வையில், பாரம்பரிய சர்வதேச சட்டம் என்பது கிளர்ச்சிக் குழுக்களில் அல்லது இறையாண்மையுள்ள அரசுக்கு எதிராக கிளர்ச்சிசெய்பவர்களின் சட்டத்தன்மையையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது.[108] எனினும், இவ்வாறான குழுக்களிற்கு சட்ட அந்தஸ்து வழங்குவதென்பது முற்றிலும் அரசியல் தேவையைப் பொறுத்தே வரலாற்றில் நிகழ்ந்து வந்துள்ளது. அதுவும் குறிப்பாக, நடுநிலைமையான பார்வை செய்யத்தக்க சர்வதேச அமைப்புக்களின் பிரசன்னம் இல்லாமல், பிரச்சினையின் தன்மையைப் பொறுத்து, அரசின் அங்கீகாரத்தி லேயே பொதுவாகத் தங்கியுள்ளது. [109] இரண்டாம் உலகப்போர் முடிவடைந்ததிலிருந்து கிளர்ச்சிக் குழுக்களுக்கு சட்ட அந்தஸ்து வழங்கும் பாரம்பரிய முறைமைகள் இல்லாதுபோய், ஒப்பந்த அடிப்படையிலான சட்டப்பாதுகாப்புமூலம் நடைமுறைப்படுத்தப்

---

[95] Article 2(1), International Convenant on Civil and Political Rights. See also United Nations Human Rights Committee (UN-HRC), General Comment No 31 [80] adopted on 29 Mar, CCPR/C/21/Rev.1/Add.13, 26 May 2004, § 10.

[96] General Comment No. 31 [80], § 7, 17 as explained in Mayer-Rieckh, 'Guarantees of Non-Recurrence: An Approximation', 39, Human Rights Quarterly (HRQ) (2017) 416.

[97] ICJ Advisory Opinion on the Legality of the Threat or Use of Nuclear Weapons from 1996 para 24.

[98] Roger O'Keefe, International Criminal Law, 2016 at 140.

[99] Rule 156 of the ICRC IHL Customary Law Database

[100] Preamble to the Convention against Torture; Lord Browne-Wilkinson, Lord Goff of Chieveley, Lord Hope of Craighead, Lord Hutton, Lord Saville of Newdigate, Lord Millett, and Lord Phillips of Worth Matravers, Opinions of the Lords of Appeal for Judgment in the Cause: Regina v Bartle and the Commission of Police for the Metropolis and Others (Appellants) Ex Parte Pinochet (Respondent), Regina v Evans and Another and The Commissioner of Police for the Metropolis and Others (Appellants) Ex Parte Pinochet (Respondent) On Appeal from the Divisional Court of the Queen's Bench Division, House of Lords, Mar 24, 1999.

[101] Sri Lanka acceded in 1980.

[102] Sri Lanka ratified in 1981.

[103] Sri Lanka acceded in 1982.

[104] Sri Lanka acceded in 1980.

[105] https://ihl-databases.icrc.org/applic/ihl/ihl.nsf/vwTreaties1949.xsp?isProtocol=1&=

[106] West's Encyclopedia of American Law, edition 2. Copyright 2008, The Gale Group, Inc. All rights reserved; insurrection and sedition have been the focus of legal proceedings in the United States for the 6 Jan attack on the Capitol.

[107] Britannica, The Editors of Encyclopaedia. 'insurgency'. Encyclopedia Britannica, 15 Nov. 2021, https://www.britannica.com/topic/insurgency. Accessed 24 April 2022.

[108] Nasu, Hitoshi, (2009), Status of Rebels in Non-International Armed Conflict.

[109] Nasu, Hitoshi. (2009). Status of Rebels in Non-International Armed Conflict.

படுவதாக சட்டவல்லுனர்கள் அவதானித்துள்ளார்கள்.[110] மேலும், அமைப்புக்களின் அளவையும், வன்முறைகளின் தீவிரத் தன்மையையும் வைத்துக்கொண்டு, கிளர்ச்சி மற்றும் புரட்சி ஆகிய இரண்டின்மீது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் நடைமுறைளை சர்வதேச சமூகம் விஸ்தரித்துள்ளது.[111]

இரண்டாவது ஜே.வி.பி கலவரத்தினை, அவ்வமைப்பின் பரிமாணம், வன்முறையின் தீவிரத்தன்மைக்கு அப்பால், உள்ளக ஆயுத மோதல் என்று ஜனாதிபதி ஜெயவரத்தனாவின் அரசாங்கம் அந்நேரத்தில் வரையறை செய்யவில்லை என்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. உள்ளக ஆயுதப் போர் என்பது ஜெனீவா சட்டங்களால் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.[112] : ஒரு அரச நிலப்பரப்பில், அரசாங்க அதிகாரிகளுக்கும் ஒருங்கிணைக்கப் பட்ட ஆயுதக்குழுக்களுக்கும் இடையில் நீடித்த ஆயுத வன்முறை நடைபெறுமாயின் அது உள்ளக ஆயுதப் போராகும்.[113] இந்த வரையறையானது *Tadic* தீர்மானம் எனப்படும் முன்னாள் யூக்கோஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, 'அரசுகளுக்கு இடையில் ஆயுத மோதல் நடைபெற்றால் அல்லது அரச அதிகாரிகளுக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட ஆயுதக் குழுக்களுக்கும் இடையில் அல்லது ஒரு தேசத்திற்குள்ளே இவ்வாறான குழுக்கள் மத்தியில் ஆயுத வன்முனை நீடித்தால் அது ஆயுதமோதலாகக் கருதப்படும்.[114] மனித உரிமைகள் தொடர்பான உள்ளக அமெரிக்க ஆணைக்குழுவானது, தாக்குதல்தாரிகள் ஒருங்கிணைந்து, நன்கு திட்டமிட்டு *La Tablada* தளத்திலிருந்த ஆஜந்தீன இராணுவத்தினருக்கு எதிராக, குறுகிய நேரமே நீடித்தாலும், நடத்திய தகர்குதலால் உந்தப்பட்டு நடந்த சம்பவங்களுக்கு பொதுவான சரத்து 3 பிரயோகிக்கப்பட்டதை உறுதிப்படுத்தி அதன் வரையறையின் அளவுகோலினை மேலும் கீழிறக்கியது[115]

சர்வதேச ரீதியிலல்லாத ஆயுத மோதலென்றின் (உள்ளக ஆயுத மோதல்) இருப்பானது ஆயுதப்போரின் சட்டம் என்றும் அறியப்படும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் பிரயோகிக்கப் படுவதை அவசியமாக்குகின்றது. அதாவது மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர் எவ்வாறு தங்கள் தாக்குதல்களை நடாத்தவேண்டும் என்பதையும், மோதலில் பாதிக்கப்பட்டுள்ள அனைவரையும் எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் இது வரையறுக்கின்றது.[116] மோதல் ஒன்று சர்வதேச ஆயுதப்போராகப் பார்க்கப்படாமல் இருப்பதற்கு இரு வகையறைகள் இருக்கவேண்டும் என சர்வதேச மனிதாபிமானச் சட்டம் வரையறை செய்கின்றது: மோதலில் ஈடுபட்டுள்ள ஆயுதக் குழுக்கள் குறைந்தளவு கட்டமைப்பினையும் கொண்டிருப் பதுடன், ஆயுத மோதல்கள் குறிப்பிட்ட தீவிரத்தன்மையினையே கொண்டிருக்க வேண்டும்.[117] மேலும் சம்பந்தப்பட்ட எதிர் ஆயுதக்குழுவிற்கு எவ்வித சட்ட அங்கீகாரமும் வழங்காமல், இரு தரப்பின்மீது சமனான கடப்பாட்டு அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றது சர்வதேச மனிதாபிமானச் சட்டம்[118].

ஜே.வி.பி உடனான மோதல்

ஜே.வி.பி.க்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான மோதல் 1987ல் இருந்து துரிதமாக வளர்ந்து இலங்கை வரலாற்றில் மிகக் கொடூரமான மோதல்களில் ஒன்றாக "ஜே.வி.பி.யால் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தெளிவான சாத்தியக்கூறுகளுடன்"[119] 1988–1989ல் அதன் உச்சத்தை எட்டியது. மார்க்சிய – சிங்கள தேசியவாதக் கட்சியாக, ஜே.வி.பி., அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகவும், தமிழ் சிறுபான்மையினருக்கான உரிமைகளுக்கு எதிராகவும் வலுவான குரலாகத் தன்னைக் காட்டிக் கொள்வதில் வெற்றி பெற்றது. பொருளாதார அச்சம் மற்றும் அடிப்படையான தேசியவாத சிந்தனைகளைக் கொண்டிருந்த பல சிங்கள இளைஞர்கள்[120] ஒன்றுசேருமிடமாக மாறியதில் வெற்றி பெற்றதாகக் கருதப்பட்டது. ஜே.வி.பி.யை "கொலைவெறி கொண்ட விலங்குகள்" என்று ஜனாதிபதி ஜெவர்த்தன குற்றம் சாட்டினார், மேலும் சில வாரங்களில் அவர்களை அழிப்பதாக அவர் சபதம் செய்தார்.[121] ஜே.வி.பி ஆளும் கட்சி உறுப்பினர்களில் பலரை கொலை செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது.[122] அரசாங்கத்தால் நிறுவப்பட்ட "மரணப் படைகள்" மிருகத்தனமான எதிர்த்தாக்குதலை நடத்தி ஜே.வி.பியை பலவீனப்படுத்தியதாகக் கூறப்படுகிறது, மேலும் நவம்பர் 1989 இல், ரொஹான் விஜேவீரா உட்பட ஜே.வி.பி–ன் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். நிபந்தனையற்ற இராணுவ வெற்றியுடன் 1990 இல்[123] யுத்தம் முடிவடைந்தது. உப்சாலா மோதல் தரவுத் திட்டம் (Uppsala Conflict Data Program) 41 மாத காலப் போரின் போது சுமார் 2,000 பேர்

---

110 Ibid

111 Ibid

112 Article 8 Nr. 2 (f) quasi of the Geneva Conventions

113 ICRC Press release No. 05/17 17 March 2005, 'Customary law study enhances legal protection of persons affected by armed conflict'; available on http://www.icrc.org]

114 ICTY, Dusko Tadic, Decision on the Defence Motion for interlocutory appeal on jurisdiction, para 70.

115 Juan Carlos Abella v Argentina (Case 11.137, 18 Nov 1997), at paras 155-156, available at http://www.cidh.org/annualrep/97eng/argentina11137.

116 https://www.icrc.org/en/doc/resources/documents/interview/2012/12-10-niac-non-international-armed-conflict.htm

117 https://www.icrc.org/en/doc/resources/documents/interview/2012/12-10-niac-non-international-armed-conflict.htm

118 'Annex to Study on customary international humanitarian law: A contribution to the understanding and respect for the rule of law in armed conflict', by Jean-Marie Henckaerts, IRRC, Volume 87, No 857, March 2005, pp98-212; available on http://www.icrc.org

119 Rosel, Jakob, 1997: Der Burgerkrieg auf Sri Lanka, Baden -baden

120 Ibid

121 Sri Lanka In Crisis - A Lost Generation: the untold story, Prince Gunasekara (1998) published by S Godage & Brothers (Sri Lanka), p315: "It was in this background that in December 1987, President Jayawardana pronounced his most celebrated 'crush them like animals' - the criminal, infamous appeal to the security forces 'TO KILL AND KILL THE BRUTES'."

122 Rosel, Jakob, 1997: Der Burgerkrieg auf Sri Lanka, Baden-baden

123 https://ucdp.uu.se (9 Jul 2014)

கொல்லப்பட்டதாகக்[124] கூறினாலும், கொல்லப்பட்டவர்களின் உண்மையான எண்ணிக்கை 10,000 முதல் 60,000 வரை இருக்கும்[125] என்று பலர் ஊகிக்கிறார்கள். அரசாங்கப் படைகளுடன் ஜே.வி.பி மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் திட்டமிட்ட ஆயுத மோதல்களில் மிகத்தீவிரமகா ஈடுபட்டதாக கருதப்படுகிறது.

இதற்கு முரணாக, ஜனாதிபதி கோத்தபாயவின் அதிகாரப்பூர்வ வாழ்க்கை வரலாற்றாசிரியர் சந்திரபிரேமா, அரசாங்கத்தின் தாக்குதலை "ஜே.வி.பி.க்கு எதிரான போர்" என்று அழைத்தார் மற்றும் அது "வழக்கத்திற்கு மாறான ஒன்று"[126] என்று ஒப்புக்கொண்டார். அவர் அவர்களின் மூலோபாயத்தை "நகர்ப்புற கெரில்லா போர்" என்றும், நிலையான இருப்பிடம் இல்லாமல் தளத்தை ஒழுங்கமைப்பதும் ஆயுதமாக்குவதும் "புரட்சிகரப் போரில்" தனித்துவமானது[127] என்று விவரித்தார்.

1971ல் நடந்த நிகழ்வுகளிலிருந்து வன்முறையின் இரண்டாவது காலகட்டத்தை அவர் வேறுபடுத்தி எழுதினார்:

ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சியானது, 1971ல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான அவர்களின் முந்தைய முயற்சியில் இருந்து மிகவும் மாறுபட்டிருந்தது. அவர்கள் இப்போது அரசுக்கு எதிராக ஒரு நீடித்த போரை நடத்தத் தயாராகிவிட்டனர். 1970 களின் பிற்பகுதியிலும் 1980 களின் முற்பகுதியிலும் தமிழ் பயங்கரவாதிகள் வடக்கில் செய்ததைப் போலவே, அவர்கள் பின்பற்றிய எதிரிகளை தனிநபர் மூலம் எதிர்பாராத திடீர் பயங்கரவாதத் தாக்குதல் மூலம் கொன்றனர். ஜே.வி.பி., தமிழ் பயங்கரவாதிகளை விட அதிக எண்ணிக்கையில் குறுகிய காலத்தில் இத்தகைய தாக்குதல்களை நடத்தியது. ஒரு மிருகத்தனமான மனநோய் நாட்டைப் பற்றிக் கொண்டது. 1987 ஆம் ஆண்டின் இறுதியில், ஜே.வி.பி.யால் கடைகள், அலுவலகங்கள் மற்றும் வணிக நிறுவனங்களை மூடுவதற்கு உத்தரவிட முடிந்தது. தமிழ் பயங்கரவாதிகள் பல வருடங்களில் செய்ததை ஜே.வி.பி சில மாதங்களில் செய்தது.

1989 ஆகஸ்டில் ஜே.வி.பி பாதுகாப்புப் படையினருக்கு மொத்தமாக ராஜினாமா செய்ய வேண்டும் அல்லது அவர்களது குடும்பத்தினர் கொல்லப்படுவார்கள் என்று இறுதி எச்சரிக்கை விடுத்த பின்னர், "ஆயுதப் படை வீரர்களின் குடும்பங்கள் கொல்லப்படுவதைத் தடுக்க ஹோட்டல்களில் தங்க வேண்டியிருந்தது" என்று சந்திரபிரேமா விளக்குகிறார்.[128] ஜே.வி.பி பற்றிய தனது 1991 புத்தகத்தில், சந்திரபிரேமா கூறுகையில், ஜே.வி.பி யால் தென் மாகாணத்தை "அவர்களின் முக்கிய நடவடிக்கை தளமாக"[129] மாற்ற முடிந்தது. ஆயுதமேந்திய எழுச்சியின் மூலம் அரசாங்கத்தை கவிழ்ப்பதே அவர்களின் திட்டமாக இருந்தது, ஜூலை 1987 வரை சிறு சிறு தாக்குதல்களை "போர் தொடங்குவதற்கான தயாரிப்பாக"[130] கட்டியெழுப்பியது. ஒய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளால் கிராமவாசிகளுக்கு இராணுவ பயிற்சி வழங்கிய காடுகளில் இருந்த பயிற்சி மையங்களையும் அவர் விவரிக்கிறார். [131]

மாத்தளையில் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளில் ஜே.வி.பி போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் எந்த வேறுபாடும் காட்டப்படவில்லை என்பதை தெளிவுபடுத்துகின்றன. சந்திரபிரேமாவின் புத்தகத்தில் இராணுவத் தளபதி ஜெனரல் வைத்தியரத்னே, 'மீனும் தண்ணீரும்'[132] என்ற தலைப்பில் ஆற்றிய உரையும் அடங்கும். அதில் அவர் தண்ணீரை "கிளர்ச்சியாளர்களை ஆதரிக்கும் கிராமவாசிகளுக்கு"[133] என்றும் மீன்களை தண்ணீரில் உள்ள "கிளர்ச்சியாளர்கள்" என்றும் ஒப்பிட்டார். கிளர்ச்சியாளர்களுக்கு அவர்களுக்கு ஆதரவான கிராம மக்கள் ஆதரவு வழங்குவதாக அவர் குறிப்பிட்டார். இவை அனைத்தும் கிளர்ச்சியாளர் தண்ணீரில் மீன் போல சுதந்திரமாக நடமாட உதவுகிறது[134] என்கிறார். பொதுமக்கள் மத்தியிலிருந்து ஜே.வி.பி உறுப்பினர்கள் தாக்குதல்களை நிகழ்த்துவதும் பின்னர் மக்களோடு மக்களாக கலப்பதும் ஜே.வி.பி.யினரை வேறுபடுத்த தடையாக இருந்தது. "மீன்கள் சுதந்திரமாக நடமாட முடியாதபடி தண்ணீரை உலர்த்துவது"[135] என்ற அவரது குறிப்பு, பொதுமக்கள் மற்றும் அவர்களது கிராமங்களை குறிவைக்க பாதுகாப்புப் படையினருக்கு அனைத்து அனுமதியும் அளித்தது.

கண்ணி வெடிகளின் அச்சுறுத்தல் காரணமாக கவச வாகனங்களில் துருப்பு நகர்வுகள் நடந்ததாகவும், "1984 இல் யாழ்ப்பாணம் இருந்ததைப் போன்று சிங்கள தெற்கு வேகமாக மாறி வருகிறது" என்றும்[136] சந்திரபிரேமாவின் புத்தகம் குறிப்பிடுகிறது. போக்குவரத்து சீர்குலைவு, மருத்துவமனைகள் மூடல் மற்றும் பொது வாழ்க்கையின் சீர்குலைவு ஆகியவற்றையும் அவர் விவரிக்கிறார். [137]

ஆயுத மோதலை உள்நாட்டு மோதலாகக் குறிப்பிடுவது இப்போது தவிற்கப்பட்டாலும், வரலாற்று ரீதியாக, உள்நாட்டுப் போர் அல்லது கிளர்ச்சியின் சர்வதேச சட்டத்தின் கீழ் உரிமைகளும், கிளர்ச்சியாளர்களுக்கு வழக்கமாக பாதுகாப்பும் இருந்ததில்லை இல்லை.[138] சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கோட்பாடுகளுக்கு இணங்காமல் அதிகபட்ச தாக்குதலை

[124] https://ucdp.uu.se (3 Jun 2014)

[125] உயிரிழப்புக்களின் உறுதியான தொகைதொடர்பாக பல்வேறு மதிப்பீடுகள் உள்ளன. இதில் 40,000–60,000 வரையானவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதே மிக யதார்த்தமானக இருக்கும். (Weiberg-Salzmann 2010: 79, see Senaratne 1997: 15). Other sources: 10,000-30,000 (Rösel 1997: 286); 40,000 (Moore 1993: 593).

[126] Chandraprema, Sri Lanka: The Years of Terror: The JVP Insurrection 1987-89, p287

[127] Chandraprema, Sri Lanka: The Years of Terror: The JVP Insurrection 1987-89, p130, '...the JVP managed to wage a long term war against the state without a base that could be held in a head-on confrontation'.

[128] Gota's War, p176

[129] Sri Lanka: the years of terror: the JVP Insurrection 1987-89, Lake House, 1991, p128

[130] Sri Lanka: the years of terror: the JVP Insurrection 1987-89, Lake House, 1991, p135

[131] Sri Lanka: the years of terror: the JVP Insurrection 1987-89, Lake House, 1991, p133

[132] Sri Lanka: the years of terror: the JVP Insurrection 1987-89, Lake House, 1991, p289

[133] Ibid, p289

[134] Ibid, p289

[135] Ibid, p289

[136] Gota's War, op cit, p175. Also p176 repeated.

[137] Gota's War, op cit, p177

[138] Herbert W Briggs in The Law of Nations (1952)

நடத்துவதற்கும் குறிப்பாக பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பான தடையிலிருந்து விடுக்கும் நோக்கில்[139] அரசுக்கும் ஜே.வி.பி.க்கும் இடையிலான மோதலை ஒரு "கிளர்ச்சி" என்று விவரிக்க அந்த நேரத்தில் அரசால் திட்டமிட்ட கொள்கை முடிவு எடுக்கப்பட்டதா என்பது ஒரு முக்கியமான கேள்வி. மேலும் இது கடுமையான சர்வதேச குற்றங்களிலிருந்து விடுபடவும் சர்வதேச சமூகம் தலையிடலை தவிர்க்கவும் அரசுக்கு உதவியது.

இரண்டாவது ஜே.வி.பி மோதலை சர்வதேசமயமாக்குவது, சர்வதேச தீர்ப்பாயம் மற்றும் சிறப்பு நீதிமன்றம் உட்பட்ட சர்வதேச மன்றம் முன்பு சர்வதேச மீறல்களை சுட்டிக்காட்டவும் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது வழக்குத் தொடரவும் இட்டுச் சென்றிருக்கும். [140] சோதனையின் அடிப்படையில், 1987–9 இல் சர்வதேச குற்றங்கள் நடந்ததற்கான ஆதாரம் இருந்தால், அதற்குப் பொறுப்பான குற்றவாளிகளுக்கு அகதி அந்தஸ்தை மறுக்கலாம் மற்றும் விசா கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருக்கலாம். உலகளாவிய மன்றத்தின் விசாரணையை அனுமதித்ததன் விளைவாக தேசிய சட்டத்தில் வழக்குத் தொடரலாம் என்று வாதிடுவது எளிதாக இருந்திருக்கும்.[141]

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்

போர் மற்றும் அமைதிக் காலங்களில் பொதுமக்களுக்கு எதிராக செய்யப்படும் குற்றங்கள் அனைத்தும்[142] மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாக கருதப்படும். மனிதகுலத்திற்கு எதிரான ஒரு குற்றம் என்பது தெரிந்தே திட்டமிட்டு எந்தவொரு இனமக்களுக்கு எதிராக பரவலாக முறையாக நிகழ்த்தப்படும் தாக்குதலின் ஒரு பகுதியாக கருதப்படுகிறது. முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தின் சரத்து 5[143] போலல்லாமல், சரத்து 7 மனிதகுலத்திற்கு எதிரான குற்றத்திற்கான முன்நிபந்தனையாக ஆயுத மோதலை குறிப்பிடவில்லை. மாறாக தாக்குதல்களின் குறைந்தபட்ச தீவிரத்தின் அளவின் அடிப்படையில் வரையறுக்கப்பட வேண்டும் என்கிறது. இருப்பினும், சரத்து 7 ஆயுத மோதலின் போதும் பொருந்தும். எனவே பொதுமக்களின் மீதான திட்டமிட்ட தாக்குதல் ஆயுதம் ஏந்திய தாக்குதலின் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இருக்கலாம்.[144] செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவு, சர்வதேச குற்றவியல் நீதிமன்ற குற்றங்களின் தன்மைகள் பற்றி குறிப்பிடுவதாவது:[145] "உள்நாட்டில் ஆயுத மோதல் உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவது மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரின் அகநிலை உணர்வை பொறுத்தது அல்ல் அது புறநிலை அளவுகோல்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும் "ஆயுத மோதல்" என்ற சொல், ஆயுதப் படைகளுக்கு இடையே அதிக அல்லது குறைந்த அளவிலான பகைமை இருப்பதை குறிக்கிறது. மேலும் ஆயுதப் படைகளுக்கான எதிர்ப்பும், சண்டையில் குறிப்பிட்ட தீவிரமும் இருக்க வேண்டும்"[146]

மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் போரிலும், அமைதிக் காலத்திலும், அதிகாரபூர்வமாக ஆயுத மோதல்கள் நிறுத்தப்பட்டாலும் அல்லது தொடங்கும் முன்னரும் நடக்கலாம்.[147] மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு வகைசெய்யும் ஆட்சியை நிர்ணயிப்பதை, மனித குலத்திற்கு எதிரான குற்றத்திற்கு யார் பலியாகலாம் என சமாதான காலத்தில் தீர்மானிப்பதை சர்வதேச மனிதாபிமான சட்டம் (IHL) அல்லாமல் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் செய்ய வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்து ஏற்பட்டுள்ளது.[148] சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை அனைத்து மக்களுக்கும் வாழ்வதற்கான உரிமையையும்,[149] ரோம் சட்டத்தின் பிரிவு 7(1) இல் [150] பட்டியலிடப்பட்டுள்ள செயல்களில் இருந்து பாதுகாப்பதற்கான உத்தரவாதத்தையும் அளிக்கிறது. ஜே.வி.பி காலத்தில் இழைக்கப்பட்ட குற்றங்கள், பொது மக்களுக்கு எதிரான பரவலான மற்றும் திட்டமிட்டபட்ட தாக்குதல் என நிரூபிக்கப்பட்டால், அவை மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களாக அமையும்.

கஜபா படைப்பிரிவு இந்த காலக்கட்டத்தில் பொதுமக்களின் சட்டத்திற்கு அப்பாற்பட்ட கொலைகளுக்கு பொறுப்பானதாகக் கூறப்படுகிறது[151] கொல்லப்பட்டவர்களில் பலர் தன்னிச்சையாக தடுத்து வைக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தனர். மேலும் கஜபா படைப்பிரிவு பொது இடங்களில் இலங்கை இராணுவத்தின்

[139] 'ஆயுதப் போரில் ஈடுபட்டுள்ள தரப்புக்கள் தாக்குதலில் ஈடுபடும்போது, கடைப்பிடிக்கவேண்டிய சட்டங்களில் பின்வருவன உள்ளன., பொதுமக்கள் மீது நேரடியாகவே அல்லது கண்மூடித்தனமாகவோ தாக்குதலில் ஈடுபடக்கூடாது. தாக்குதலில் விகிதாசார கொள்கைளை மதித்தல். பொதுமக்களின் இழப்புக்களைத் தவிர்ப்பதற்கு சாத்தியமான எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் கடைப்பிடித்தல். 'Annex to Study on customary international humanitarian law: A contribution to the understanding and respect for the rule of law in armed conflict, Jean-Marie Henckaerts, IRRC, Volume 87, No 857, March 2005, pp198-212; available at http://www.icrc.org

[140] Clapham, Andrew, Human Rights and International Criminal Law (April 20, 2015). The Cambridge Companion to International Criminal Law, edited by William Schabas, and has been reproduced by permission of Cambridge University Press. Available at SSRN: https://ssrn.com/abstract=2596659

[141] Ibid

[142] G Werle, Principles of International Criminal Law (2005), at 216, para. 633.

[143] Article 5 ICTY Statute also defines what constitutes a Crime against Humanity.

[144] Quenivet, Noelle, 'Applicability Test of Additional Protocol II and Common Article 3 for Crimes in Internal Armed Conflict (2014)' in D Jinks, J Maogoto and S Solomon (eds), Applying International Humanitarian Law in Judicial and Quasi-Judicial Bodies, TMC Asser Press (2014), Available at SSRN: https://ssrn.com/abstract=2486590

[145] ICTY, Tadić Appeal Judgment, para. 251; see also Kunarac Appeal Judgment, para. 86

[146] https://casebook.icrc.org/glossary/non-international-armed-conflict

[147] Leila N. Sadat, Putting Peacetime First: Crimes Against Humanity and the Civilian Population Requirement, 31 Emory Int'l L. Rev. 197 (2017).

[148] Ibid

[149] International Covenant on Civil and Political Rights art. 6, ¶ 1, Dec. 16, 1966, 999 U.N.T.S. 171

[hereinafter ICCPR].

[150] See, e.g., id. art. 7 (prohibiting torture); id. art. 8, ¶ 1 (prohibiting enslavement); id. art. 12 (allowing

individuals to freely leave and re-enter their own country and to choose their residence within that country).

[151] https://janarala.wordpress.com/2013/03/30/%E0%B6%B8%E0%B7%8F%E0%B6%AD%E0%B6%BD%E0%B7%9A-%E0%B7%83%E0%B6%B8%E0%B7%96%E0%B7%84-%E0%B6%B8%E0%B7%92%E0%B6%B1%E0%B7%93%E0%B7%80%E0%B6%BD-%E0%B7%83%E0%B6%AD%E0%B7%8A%E2%80%8D%E0%B6%BA-%E0%B7%80/

பெயரில் சுவரொட்டிகளை ஒட்டியது, அதில் பாதுகாப்புப் படை உறுப்பினரின் உறவினரின் ஒவ்வொரு கொலைக்கும் பதிலடியாக ஜேவிபி உறுப்பினர்களின் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட உறவினர்கள் கொல்லப்படுவார்கள் என்று எச்சரித்தது. அதற்கு உதாரணமாக 1989 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் தேதி ஜே.வி.பி உறுப்பினர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான மோதலில் ஒரு ராணுவ வீரர் கொல்லப்பட்டதை[152] அடுத்து கஜபா படைப்பிரிவின் அதிகாரிகளால் பால்வெஹர இராணுவ முகாமில் இருந்து சிறுவர்கள் உட்பட 22 கிராமவாசிகள் கொல்லப்பட்ட பலுதுவ படுகொலை அமைந்தது. பாதிக்கப்பட்ட 22 பேரும் அவர்கள் வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்த போது அழைத்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்டனர், அவசரகாலச் சட்டங்களின் கீழ் அவர்கள் சடலங்களை தகனம் செய்வதற்காக காவல்துறை ஒப்படைத்தது, குற்றங்களின் ஆதாரங்களும் திறம்பட அழிக்கப்பட்டது. [153]

கஜபா படைப்பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் காவலில் வைக்கப்பட்டவர்களை சித்திரவதை மற்றும் பாலியல் துன்புறுத்தல்[154] செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. மேலும், இந்த காலகட்டத்தில் காவலில் வைக்கப்பட்ட மற்றும் காணாமல் போன பொதுமக்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் உள்ளது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மொத்தம் 3,857 தடமறிதல் கோரிக்கைகளைப் பெற்றுள்ளது. 1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அரசாங்கம் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, வலிந்து காணாமல் போதல் தொடர்பான ஐ.நா செயற்குழு (WGEID) இலங்கைக்கு சென்று, 1989 இல் பதிவான 2,879 வழக்குகள் உட்பட இலங்கை அரசாங்கத்திடம் ஆயிரக்கணக்கான வழக்குகளை எழுப்பியதை உறுதிப் படுத்தியது.[155] சட்டத்திற்கு அப்பாற்பட்ட கொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் கமிஷன்களால் விரிவாக ஆவணப்படுத்தப்பட்ட காணாமல் போனவர்கள் ஆகியவை நிரூபிக்கப்பட்டால், சர்வதேச குற்றங்களாக கருதப்படும் .

உள்நாட்டுச் சட்டத்தின் கீழான குற்றங்கள்

40 ஆண்டுகளுக்கும் மேலாக, இலங்கையில் கிட்டத்தட்ட தொடர்ச்சியாக அவசரகால நிலை அமல்படுத்தப்பட்டு வருகிறது, அவசரகாலச் சட்டமானது திறம்பட குற்றவியல் நீதி அமைப்பை அழித்து, அரசை எல்லா பொறுப்புகளிலிருந்தும் விடுவித்து, மனித உரிமைகளைக் சிதைத்துள்ளது. 1988 இல், இலங்கை அரசாங்கம் இழப்பீட்டுச் சட்டத்தை, 'இழப்பீடு (திருத்தம்) சட்டம் (1988 இன் எண் 60)' என்ற நீண்ட தலைப்புடன் நிறைவேற்றியது.

அனைத்துலக மன்னிப்புச் சபையின் கூற்றுப்படி: "இந்தச் சட்டம் 1 ஆகஸ்ட் 1977 மற்றும் 16 டிசம்பர் 1988 க்கு இடையில் சட்டம் மற்றும் ஒழுங்கை அமல்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்கள், அரசாங்க உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்கள் அனைவர் மீதும் "நல்லெண்ணம் மற்றும் பொது நலனின்"[156] அடிப்படையில் வழக்குத் தொடர்வதில் இருந்து விலக்கு அளிக்கிறது. இந்தக் காலக்கட்டத்தில் ஒரு அரசாங்க அதிகாரியின் அதிகாரத்தின் கீழ் நல்லெண்ணத்தின் அடிப்படையில் செயல்படும் வேறு எந்த ஒரு நபருக்கும் இந்தச் சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது. 1993 ஜூன் 17க்கு முன், அவசர கால விதிகளின்படி, அட்டர்னி ஜெனரலின் ஒப்புதல் இன்றி[157], எந்த நீதிமன்றத்திலும் "நல்லெண்ணத்தில்" செய்யப்படும் எந்தவொரு விஷயத்திலும் சிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கை எடுக்க முடியாது என்று குறிப்பிட்டது. மேலும் அவசரகால ஆட்சி தன்னிச்சையான காவலில் வைப்பதற்கான தடையை மீறியது மற்றும் கருத்து சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் மற்றும் தனியுரிமை[158] ஆகியவற்றில் நியாயமற்ற கட்டுப்பாடுகளை விதித்தது என சர்வதேச நீதிபதிகள் ஆணையம் (ICJ) 2012 இல் சுட்டிக்காட்டியது. அவசரகாலச் சட்டங்களின் பயன்பாடு சட்டவிரோதமான கொலைகள், வலுக்கட்டாயமாக காணாமல் போதல், சித்திரவதை மற்றும் தவறான நடைமுறைகளின் பரவலான பயன்பாட்டை எளிதாக்கியது, மேலும் அவசரகாலச் சட்டங்களின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை நீதித்துறை மறுபரிசீலனை செய்வதற்கான உரிமை கட்டுப்படுத்தப்பட்டது, சமயங்களில் முற்றிலும் நீக்கப்பட்டது.[159] நான்கு தசாப்தகால நிறுவனமயப்படுத்தப்பட்ட அவசரகால விதியானது 'இலங்கையில் தண்டனையிலிருந்து விடுபடுவதற்கான ஆபத்தான கலாச்சாரத்திற்கு' பங்களித்துள்ளது என்றும் ICJ சுட்டிக்காட்டியுள்ளது." [160]

1971 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி ஜே.வி.பி தலைவர் ரோஹண விஜேவீர கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கிளர்ச்சிகளை கட்டுப்படுத்த 1971 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் திகதி அவசரகால ஆட்சி அமல்படுத்தப்பட்டது . ஜே.வி.பி தலைவர் மற்றும் பலர் அவசரகால சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர்.[161] PSO 1947 இன் பிரிவு 9 இன் கீழ், அவசரகாலச் சட்டத்தின் கீழ் நல்லெண்ணத்தின் அடிப்படையில் அரசு அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைளுக்கு வழக்குத் தொடுப்பதில் இருந்து விலக்கு அழிக்கப்பட்டது[162]

1987ல் தெற்கில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ஆற்றிய உரையில், ஜனாதிபதி ஜெயவர்த்தன 'கொல்லுங்கள், கொல்லுங்கள்

[152] https://www.youtube.com/watch?v=vtgdQy03Xl0

[153] Ibid

[154] https://janarala.wordpress.com/2013/03/30/%E0%B6%B8%E0%B7%8F%E0%B6%AD%E0%B6%BD%E0%B7%9A-%E0%B7%83%E0%B6%B8%E0%B7%96%E0%B7%84-%E0%B6%B8%E0%B7%92%E0%B6%B1%E0%B7%93%E0%B7%80%E0%B6%BD-%E0%B7%83%E0%B6%AD%E0%B7%8A%E2%80%8D%E0%B6%BA-%E0%B7%80/

[155] UN, Report on the visit to Sri Lanka by three members of the Working Group on Enforced or Involuntary Disappearances (7-18 October 1991), p43, https://documents-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G92/100/49/PDF/G9210049.pdf?OpenElement

[156] https://www.amnesty.org/en/wp-content/uploads/2021/09/ASA370151994ENGLISH.pdf

[157] Ibid

[158] https://tbinternet.ohchr.org/Treaties/CCPR/Shared%20Documents/LKA/INT_CCPR_CSS_LKA_18216_E.pdf

[159] https://tbinternet.ohchr.org/Treaties/CCPR/Shared%20Documents/LKA/INT_CCPR_CSS_LKA_18216_E.pdf

[160] Ibid

[161] Emergency (Miscellaneous Provisions and Powers) Regulations, 16 Mar 1971

[162] See Wijesuriya v The State (1973) 77 NLR 25 (Court of Criminal Appeal)

மிருகங்களைக் கொல்லுங்கள்'.[163] என தனது நோக்கங்களை தெளிவாக்கினார். சில மாதங்களுக்குப் பிறகு, 1988 ஆம் ஆண்டு இழப்பீடு (திருத்தம்) சட்டம் நடைமுறைக்கு வந்தது, இது ஜனாதிபதியின் விருப்பங்களைத் தண்டனையின்றி நிறைவேற்ற பாதுகாப்புப் படையினருக்குத் தேவையான உத்தரவாதத்தை வழங்கியது[164]. ஜூன் 1988 இல் அறிமுகப்படுத்தப்பட்ட அவசரகால ஒழுங்குமுறை 55 (பெப்ரவரி 1990 இல் ரத்து செய்யப்பட்டது), பாதுகாப்புப் படைகள் மரணத்திற்கான காரணத்தை மறைத்து, மாஜிஸ்திரேட்டிடம் புகாரளிக்காமல் இறந்த உடல்களை அப்புறப்படுத்த அனுமதித்தது[165] . இத்தகைய நடவடிக்கைகள் நிழல் அரசை வளரச் செய்யும் அதே வேளையில், முறையான சட்டக் கட்டமைப்புகளையும் சட்ட அமலாக்க நிறுவனங்களையும் பலவீனப்படுத்தியது. அரசியல் வன்முறையில் இருந்து தப்பிப் பிழைத்தவர்களுக்குப் பரிகாரம் வழங்க முடியாத நிலைக்கு சென்றது. மேலும், ஆளும் உயரடுக்கிற்கு அதன் விருப்பத்தை நிறைவேற்ற இராணுவம் முழுமையாக சட்டத்திற்கு புறம்பான வழிமுறைகளை நம்பியிருந்தது.[166]

குற்றங்களுக்கு பொறுப்பேற்பதற்கு மேலும் ஒரு தடையாக இலங்கையின் உள்நாட்டுச் சட்டம் உள்ளது, அங்கு தன்னிச்சையாக அல்லது வலிந்து காணாமல் செய்யப்படுவது தண்டனைச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாக இல்லை, மேலும் வழக்குத் தாக்கல் செய்வதற்கு கடத்தல், தூண்டுதல் மற்றும் சதி போன்ற சாதாரண கிரிமினல் குற்றங்களை நம்பியிருக்க வேண்டும். அதிலும் மோதல் சூழ்நிலைகளில் இந்தக் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பது மிகவும் கடினம்.[167] கூடுதலாக, தண்டனைச் சட்டம் உத்தரவு மற்றும் உயர்ந்த பொறுப்புக் தொடர்பான கோட்பாட்டை இணைக்கவில்லை[168]. கிஷாலி பின்டோ ஜயவர்தன, நடைமுறையில் உள்ள தண்டனைச் சட்ட விதிகளில் காணப்படும் 'கடமை தவறுதல்' அடிப்படையில் வழக்குத் தொடுப்பதும் பலனளிக்கவில்லை என்பதை அவதானித்துள்ளார். உச்ச நீதிமன்றம் பொதுவாக அதன் அடிப்படை உரிமைகளுக்கான அதிகார வரம்பின் பின்னணியில், அவசரகாலச் சட்டங்களைச் செயல்படுத்துவதிலும், அரசின் "பெரும் பொறுப்பு" கோட்பாட்டை உறுதிசெய்தது, ஆனால் இந்தக் கோட்பாட்டைக் உத்தரவு பிறப்பிக்கும் உயர்மட்ட அதிகாரிகளுக்கு நீட்டிக்கவில்லை என்று அவர் குறிப்பிடுகிறார்[169]. மேலும் போர்ச் சூழ்நிலைகளில் கடைநிலை அதிகாரிகளுக்கு மாறாக உத்தரவு பொறுப்பிலிருக்கும் மூத்த அதிகாரிகளின் மீது வழக்குத் தொடுக்கும் வகையில் குற்றவியல் சட்டத்தை சீர்திருத்த வேண்டியதன் அவசியத்தையும் பின்டோ ஜயவர்தன குறிப்பிட்டார். அரச அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட விலக்குரிமையானது தண்டனையில்லா கலாச்சாரத்திற்கு வழிவகுத்து, 2009ல் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான இறுதிக் கட்டப் போரின் போது பாதுகாப்புப் படையினர் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை மேற்கொள்வதற்கு வகை செய்தது என்பதில் சந்தேகமில்லை.[170]

நடைமுறை சட்டத்தின் கீழ் உயர் அதிகாரப் பொறுப்பு

சர்வதேச அளவில், பொறுப்பேர்ப்பதற்கான ஒரு முறையான "உயர் அதிகாரப் பொறுப்பு" நடைமுறை சர்வதேச சட்டத்தின் நிலையை[171] எட்டியுள்ளது, மேலும் இது ஐசிசி ரோம் சட்டத்தில் பிரதிபலிக்கிறது[172]. நடைமுறை சர்வதேச சட்டம் "உயர் அதிகாரப் பொறுப்பு" இன் மூன்று கூறுகளை அங்கீகரிக்கிறது, அவை கீழ்நிலை–மேல்மட்ட உறவு (தங்கள் கீழ் பணிபுரிபவர்கள் மீது மேலதிகாரியின் திறமையான கட்டுப்பாடு உட்பட), மனநிலை காரணிகள் மற்றும் குற்றத்தை தடுக்க அல்லது தண்டிக்கத் தவறுதல்[173] பொறுப்பு முறையின் ஒரு வகையாக 'உத்தர'விடும் கூறுகளையும் நடைமுறை சர்வதேச சட்டத்தின் விதிமுறைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.[174] இந்த பகுப்பாய்வில், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு நடைமுறை சர்வதேச சட்டத்தின் கீழ் உயர்ந்த மற்றும் அதிகார பொறுப்பு மற்றும் "உத்தரவிடுதல்" என்பது ஒரு பொறுப்பு முறையாகக் விளங்குகிறது என புலப்படுகிறது.[175]

உயர் அதிகாரிகள், தங்கள் துணை அதிகாரிகளால் நிகழ்த்தப்படும் சர்வதேசக் போர் குற்றங்களை தெளிவாகக் கணக்கிடாமல் புறக்கணிப்பதின் மூலம் மறைமுகமாக அதற்கு உடந்தையாக செயல்படுகின்றனர்.

கோத்தபாய ராஜபக்ச: உத்தரவு மற்றும் அதிகார பொறுப்பு

மே 1989 மற்றும் ஜனவரி 1990 க்கு இடையில், இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, ஜேவிபியின்

[163] Gunasinghe, N (1987) 'Ethnic Conflict in Sri Lanka: Perceptions and Solutions' in C Abeysekera & N Gunasinghe (eds) Facets of Ethnicity in Sri Lanka. Colombo: Social Scientists' Association

[164] Jane Thomson-Senanayake & Asian Human Rights Commission. (2014). A sociological exploration of disappearances in Sri Lanka : 'not even a person, not even a word...' Hong Kong, China: Asian Human Rights Commission

[165] https://www.amnesty.org/en/wp-content/uploads/2021/09/ASA370151994ENGLISH.pdf

[166] Ibid

[167] International Commission of Jurists (ICJ), Post- War Justice in Sri Lanka: Rule of Law, the Criminal Justice System and Commissions of Inquiry, January 2010

[168] Ibid

[169] Ibid

[170] International Commission of Jurists (ICJ), Post- War Justice in Sri Lanka: Rule of Law, the Criminal Justice System and Commissions of Inquiry, January 2010

[171] Rule 153, the IHL Database by the ICRC, https://ihl-databases.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul_rule153

[172] Article 28, the Rome Statute of the ICC

[173] Prosecutor v Delalic, Mucic, Delic and Landžo, Case No IT-96-21-T, Judgement, 16 Nov 1998, para 346

[174] Rule 152, https://ihl-databases.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul_rule152

[175] For arguments in support and relevant jurisprudence see Gideon Boas, James L Bischoff, Natalie L Reid, Debevoise, the Law Practitioner Library, Volume 1: Forms of Responsibility in International Criminal Law, at 175-176.

கோட்டையான [176] மாத்தளை மாவட்டத்தின் மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரியாக இருந்தார்[177]. உத்தரவு அதிகாரியாக அவரது பாத்திரத்தில், அவர் விஜயா கல்லூரி இராணுவ முகாமிலிருந்து நடந்து செல்லும் தூரத்தில் இருந்த மாத்தளை கச்சேரியில் (மாவட்ட செயலகம்) பணிபுரிந்தார். அவரது கண்காணிப்பில் தான் வலிந்து காணாமல் போதல் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் நடைபெற்றன.

கோத்தபாய ராஜபக்ச மாத்தளைக்கு பொறுப்பாக இருந்த காலத்தில், ஏறத்தாழ 700 பேர் – பெரும்பாலும் சிங்களவர்கள் – காணாமல் போனதாக பல இலங்கை அரசாங்க ஆணையங்கள் தெரிவித்துள்ளன.

மாவட்ட ஒருங்கிணைப்பாளராக காவல்துறை மற்றும் இராணுவம் உட்பட நிர்வாகம் மற்றும் பாதுகாப்பிற்கு பொறுப்பாளரான கோத்தபாய ராஜபக்ச சுமார் 350,000 மக்கள் வசிக்கும் சிறிய மாவட்டத்தில் அந்த நேரத்தில் நிகழ்ந்த வன்முறைகளின் அளவைப் பற்றி கட்டாயம் அறிந்திருப்பார்.[178] அந்த வன்முறைகளில் தலையில்லாத சடலங்களை வயல்களில் சிதறிக்கிடக்க செய்த கொடூரமான கொலைகள் மற்றும் தலை துண்டிக்கப்பட்ட தலைகளை பாலங்களில் கூர்முனைகளில் காட்சிப்படுத்தலும் அடங்கும். 1989 ஆம் ஆண்டு ஏராளமான சிங்களப் பெற்றோர்கள் கோத்தபாய ராஜபக்சவிடம் காணாமல் போன பிள்ளைகளின் நிலை குறித்துக் கேட்கச் சென்றதாகவும், அப்போது அவர் தடுப்புக் காவல் மையங்களில் இருப்பதைக் கண்டதாகவும், உயிர் பிழைத்தவர்களில் பலர் அவரை மாத்தளையில் அரசாங்க ஆணைக்குழுக்களால் மோசமான சித்திரவதை தளங்களாக ஆவணப்படுத்தப்பட்ட பல்வேறு பாடசாலைகள் மற்றும் விருந்தினர் இல்லங்களிலும் நேரில் கண்டதாகவும் உறுதிப்படுத்தியதாக கிடைக்கப்பெறும் சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன.

1989ஆம் ஆண்டு மாத்தளையில் பாதுகாப்புப் படைகளுக்குப் பொறுப்பாக தளபதியாக கோத்தபாய ராஜபக்ச இருந்தார் என்பதும், அந்தக் காலகட்டத்தில் பதிவாகிய கொலைகள் மற்றும் காணாமல் போன சம்பவங்களுக்குப் காரணமான பாதுகாப்புப் படையினரின் மீது அதிகாரம் மற்றும் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தார் என்பதும் கிடைக்கப்பெறும் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. கோத்தபாய ராஜபக்ச தனது அதிகாரத்தின் கீழ் உள்ள பாதுகாப்புப் படையினரால் இழைக்கப்படும் குற்றங்களையும் சூழ்நிலைகளையம் முழுமையாக அறிந்திருந்தார், மேலும் அத்தகைய குற்றங்களைத் தடுப்பதற்குத் தேவையான மற்றும் நியாயமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டார். பாதிக்கப் பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களால் நேரடியாக அவரிடம் புகார்கள் செய்யப்பட்ட போதிலும், குற்றங்களை விசாரிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, மேலும் விசாரணை மற்றும் வழக்குத் தொடர இந்த விஷயத்தை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கவும் இல்லை . இந்தக் காலப்பகுதியில் அவருக்குக் கீழ் பணிபுரிபவர்களால் மாத்தளையில் நடைபெற்ற படுகொலைகள் மற்றும் காணாமற்போதல்கள் குறித்து அதிகார பொறுப்பில் இருந்த அவரிடம் கொடுக்கப்பட்ட தனிப்பட்ட புகார்களை ஆணைக்குழுவின் அறிக்கைகள் விவரிக்கின்றன. எனவே அவர் நடைபெற்ற குற்றங்களை முழுமையாக அறிந்திருந்தார், மேலும் இந்த குற்றங்கள் நடைபெறாமல் தடுக்க நடவடிக்கையும் எடுக்கவும் அவருக்குக் கீழ் பணிபுரிபவர்களை அவர்களின் குற்றத்திற்காக பொறுப்பேற்க செய்யவும் தவறிவிட்டார். மாத்தளையில் நடத்தப்பட்ட பெருங் குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 24 குற்றவாளிகளில் ஒருவராக கோத்தபாய ராஜபக்ச ஆணைக்குழுவால் பெயரிடப்பட்டுள்ளார். இன்றுவரை, அத்தகைய குற்றங்களுக்கு அவர் தனிப்பட்ட முறையிலோ அல்லது அவரது அதிகாரம் மற்றும் உயர்ந்த பொறுப்பிற்காகவோ நடைபெற்ற குற்றங்களுக்கு பொறுப்பேற்கவில்லை.

1989 இல் மாத்தளையில் நிகழ்த்தப்பட்ட, நிரூபிக்கப்பட்டால் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களாக கருதப்படும், அனைத்து மனித உரிமை மீறல்களுக்கும் குற்றவாளிகளை பொறுப்பாக்கத் தவறியதை பல ஆண்டு கால அறிக்கைகள், அவதானிப்புகள் மற்றும் மனித உரிமை உயர் ஆணையர், வலிந்து காணாமல் போனோர் மீதான ஐ.நா. பணிக்குழு, ஐ.நா சிறப்பு நடைமுறைகள் ஆணையர்கள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச அரசு சாரா நிறுவனங்களால் ஆகியோரால் பல ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் முன்னிலைப்படுத்தப்பட்டு வருகிறது. இலங்கை அரசாங்கம் அனைத்து இலங்கையர்களுக்குமான நீதி, சமத்துவம், பொறுப்புணர்வு மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு நம்பகமான மற்றும் சுயாதீனமான நடவடிக்கைகளை ஆரம்பிக்க தனது சட்டப்பூர்வ கடமைகளையும் அர்ப்பணிப்பையும் நிறைவேற்றுமாறு பல மனித உரிமைகள் பேரவை தீர்மானங்கள் கோரியுள்ளன.

[176] 1980களின் இறுதி முதல் 1990 தொடக்கம் வரை மாவட்டத்தில் 80% சிங்களவர்களும், 12% தமிழர்களும் 7%முஸ்லீம்களும் இருந்தார்கள். See https://core.ac.uk/download/pdf/52179135.pdf

[177] 1971 இல் நடந்த முதலாவது கலவரத்தின்போது, தம்மைத்தாமே மார்க்ஸிசியக் கட்சி எனப் பிரகடனப்படுத்திய, வறுமையிலும் வேலையில்லாத் திண்டாட்டத்திலும் வாடிய கிராமப்புற சிங்கள மக்களதும் இளைஞர்களதும் பேராதரவைப் பெற்ற ஜே.வி.பி யால் நடாத்தப்பட்ட ஆயுதப் புரட்சியை அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான கூட்டணி அரசாங்கம் அடக்கியபோது ஆயிரக்கணக்கான மக்கள் கொலைசெய்யப்பட்டார்கள;. See, among others, Rajesh Venugopal (2010), 'Sectarian Socialism: The Politics of Sri Lanka's Janatha Vimukthi Peramuna (JVP)'; Kearney (1977) 'A Note on the Fate of the 1971 Insurgents in Sri Lanka'; S Arasaratnam,'The Ceylon Insurrection of April 1971: Some Causes and Consequences'.

[178] 1981 குடிசனக் கணக்கெடுப்பின்படி சனத்தொகை எண்ணிக்கை 357, 354. அந்நேரத்தில் சிறிலங்காவிலிருந்து 25 மாவட்டங்களில் மாத்தளையும் ஒன்று.

பின்னிணைப்புக்கள்

பின்னிணைப்பு 1: கோட்டாபய ராஜபக்ச பணி வாழ்க்கை

20 ஜூன் 1949
மாத்தறையில் பிறந்தவர்

கல்வி
ஆனந்தா கல்லூரி [179]

26 ஏப்ரல் 1971
இலங்கை இராணுவத்தில் பயிற்சி அதிகாரியாக சேர்ந்தார்[180]

25 மே 1972
தியத்தலாவ இராணுவப் பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சியின் பின்னர் இரண்டாவது லெப்டினன்டாக நியமிக்கப்பட்டு சிலோன் சிக்னல்ஸ் கார்ப்ஸில் அதிகாரியாக தனது முதல் கட்டளையை வழங்கினார்.[181]

1972
மிலிட்டரி காலேஜ் ஆஃப் சிக்னல்ஸ், ராவல்பிண்டி, யங் ஆபீசர்ஸ் கோர்ஸ்.

தெரியவில்லை
சின்ஹா ரெஜிமென்ட் மற்றும் ராஜரட்ட ரைபிள்ஸ்

1974
யாழ்ப்பாணத்தில் பணியமர்த்தபட்டார்[182]

1975
காலாட்படை மற்றும் தந்திரோபாயங்கள் பள்ளி, குவெட்டா காலாட்படை நிறுவன தளபதிகளின் பாடநெறி.

1980
கிளர்ச்சி முறியடிப்பு மற்றும் காடுப்பயிற்சி பள்ளி, அஸ்ஸாம், இந்தியா.

1982–83
வெலிங்டன் பாதுகாப்பு சேவைகள் பணியாளர் கல்லூரி (DSSC), நீலகிரிஸ், தமிழ்நாடு, கட்டளை மற்றும் பணியாளர்கள் அதிகாரி பயிற்சி.

14 அக்டோபர் 1983
கஜபா படைப்பிரிவு (தமிழர் எதிர்ப்புக் கலவரங்களில் ஈடுபட்டதாகக் கூறி ராஜரட்ட ரைபிள்ஸ் கலைக்கப்பட்டு, விஜயபாகு காலாட்படை படைப்பிரிவுடன் இணைக்கப்பட்ட பின்).

1987 மே & ஜூன்
வடமராட்சி நடவடிக்கை, யாழ்பாணம்[183]

1987 ஜூலை
IPKF தலையீட்டின் பின்னர் கொழும்புவின் வித்யாலங்கார முகாமிற்கு திரும்ப அழைக்கப்பட்டார். [184]

1987 டிசம்பர்
பணியாளர், இராணுவ தலைமையகம். [185]

1988
அமெரிக்க பயணம்.[186]

1989 [187]
ஃபோர்ட் பென்னிங், அமெரிக்க மேம்பட்ட காலாட்படை அதிகாரிகள் படிப்பு. [188]

1 மே 1989
அதிகாரபூர்வ வாழ்க்கை வரலாற்றாசிரியர் (சி ஏ சந்திரபிரேம[189]) கோட்டாபய ராஜபக்ச 1 வது கஜபா படைப்பிரிவில் இருந்ததாகவும், உத்தரவு அதிகாரியாக பதவி உயர்வு பெற்றதன் மூலம், 2 வது ஜேவிபி கிளர்ச்சியின் இறுதி வரை (அதிகாரப்

179 கரண்ணகொட, பொன்சேகா, சரத் வீரசேகெரா, ஜகத் டயஸ், பிரசன்னா டி சில்வா, சாஜிய கலேகே மற்றும் காமல் குணரத்தின போலவே.

180 https://twitter.com/siwura/status/1392659635157360646/photo/2 Letter.

181 Letter at https://twitter.com/siwura/status/1392659635157360646/photo/2

182 'என்னுடைய நாட்களின் பெரும்பாலான காலத்தை யாழ்ப்பாணத்திலேயே செலவிட்டேன். 1974 இல் சிக்லன் அதிகாரியாக யாழ்ப்பாணத்திற்கு நான் முதன்முறை சென்றேன்' – சந்தன காரியவாசம் உடனான சிலோன் வீக், சிங்களப் பதிப்பின் நேர்காணல்.

https://ceylonweek.com/2016/02/19/gotabaya-rajapaksa-telling-how-to-come-sarath-fonseka-lead-to-army.html

183 யாழ்ப்பாணம், வடமராட்சி நடவடிக்கை: 1987 மே – யூன், இரண்டாம் கட்ட ஈழப்போர்:

தொடக்கத்திலிருந்தே வடக்கில் நடந்த போரில் கோத்தபாய ராஜபக்ச முனைப்புடன் செயற்பட்டார் – யாழ்ப்பாணக் குடாநாட்டில் வல்வெட்டித்துறையை கஜபா பற்றாலியன் கைப்பற்றியபோது அதற்குத் தானே கட்டளை வழங்கியதாக அவரே ஒப்புக்கொண்டார். 1980 களின் இறுதிப் பகுதியில் நடந்த வடமராட்சி நடவடிக்கை "பயங்கரமான உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன" என இந்தியப் பிரதமர் கூறிக்கொண்டு நடந்த இந்தியத் தலையீடு காரணமாக இடைநடுவே கைவிடவேண்டிய வந்தாக அவர் முறைப்பாடு செய்தார். வடமராட்சி நடவடிக்கை வெற்றிபெறுவதை அனுமதித்திருந்தால் போர் இவ்வளவு காலம் இழுபட்டிருக்காது என்று கோத்தபாய உறுதியாக நம்புகின்றார். இது அவருக்கு இராணுவத் தீர்விலேயே நம்பிக்கை கொண்டிருந்தார், அரசியல் தீர்வில் இல்லை என்பதைக் காட்டுகின்றது.

'நாங்கள் இப்படியே இருக்கமுடியாது என்று கூறிய ஜெனரல் விமலரத்தினவே முகாம்களை விரிவாக்கம் செய்தார். போருக்கான ஒத்திகையே அது. ஒரு குறிப்பிட்ட நிலையை அது அடைந்ததும், முழுவதுமாக சுத்திகரிப்பதற்காக வடமராட்சி நடவடிக்கை தொடங்கப்பட்டது. இந்தியத் தலையீடு காரணமாக வடமராட்சி நடவடிக்கை பாதியிலேயே நிறுத்தப்பட வேண்டிவந்தது'

தகவல்: https://ceylonweek.com/2016/02/19/gotabaya-rajapaksa-telling-how-to-come-sarath-fonseka-lead-to-army.html

Lalith Weeratunga, Secretary To The President, https://www.businesstoday.lk/article.php?article=7101

184 சந்தன காரியவாசம் உடனான சிலோன் வீக், சிங்களப் பதிப்பின் நேர்காணல்.

https://ceylonweek.com/2016/02/19/gotabaya-rajapaksa-telling-how-to-come-sarath-fonseka-lead-to-army.html

185 Gota's War, p173

186 Gota's War, p173

187 Gota's War இன் பிரகாரம் இத்திகதியில்தான் இலக்கு நிறைவுபெற்றது.

188 Gota's War, p 177

189 https://itjpsl.com/assets/press/Chandraprema-PRESS-RELEASE-english.pdf

பூர்வமாக நவம்பர் 13, 1989[190]) மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரியாக மாத்தளைக்கு அனுப்பப்பட்டதாகவும், ஆனால் ஜனவரி 1990 வரை அவர் அங்கு இருந்ததாக நம்பப்பட்டதாகவும் கூறுகிறார்.

8 ஜூலை 1989–26 ஜன 91
தளபதி, 1வது கஜபா படைப்பிரிவு.[191]

ஜன 1990
கோட்டாபய ராஜபக்ச 3 மாத விடுமுறைக்கு விண்ணப்பித்துவிட்டு அமெரிக்கா சென்றார்.

1990
ஆபரேஷன் 'ஸ்டிரைக் ஹார்ட்' மற்றும் ஆபரேஷன் 'திரிவித பாலயா'.

1990
யாழ்ப்பாணக் கோட்டையை மீட்பதற்கான தாக்குதலில் ஒரு படைப்பிரிவை வழிநடத்தினார்.[192]

1990
பிற்பகுதியில் உச்சிமாநாட்டிற்கான நகர்வுகள். [193]

1990–1991
ஒருங்கிணைப்பு அதிகாரி வெலி ஓயா பகுதி – மனித உரிமை மீறல்கள் மற்றும் சிங்கள குடியேற்றத்தின் தளம். [8 ஜூலை 1990 புகைப்படம் அவரை மூதூர் கடலில் சுமேதா பெரேராவுடன் காட்டுகிறது.]

1990 பிற்பகுதி
அமைச்சர் விஜேரத்னவின் உத்தரவின் பேரில், இராணுவத் தலைமையகம் லெப்டினன்ட் கேணல் ராஜபக்ஷவை 1990 இன் பிற்பகுதியில் கொத்தலாவல பாதுகாப்பு அகாடமியின் (KDA) துணைத் தளபதியாக நியமித்தது.[194]

ஜூலை 1991
ஆனையிறவுப் போர்

1 நவம்பர் 1991
ராணுவத்தில் இருந்து லெப்டினன்ட் கேணலாக பணியாற்றி ஓய்வு பெற்று அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்து[195] அங்கு அமெரிக்க குடியுரிமை பெற்றார். '...அவர் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள லயோலா சட்டப் பள்ளியில் சிஸ்டம்ஸ் இன்டக்ரேட்டராகவும் யூனிக்ஸ் சோலாரிஸ் நிர்வாகியாகவும் பணியாற்றினார்." [196]

2005
ஜனாதிபதியான அவரது சகோதரரால் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் இரட்டை குடியுரிமையுடன் அந்த பொறுப்பை மேற்கொண்டார். மேலும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறையையும் வகித்துள்ளார்.

1 டிசம்பர் 2006
கொழும்பில் படுகொலை முயற்சி முறியடிப்பு.

6 செப்டம்பர் 2009
கொழும்புப் பல்கலைக்கழகம் அவருக்கு 'போர்க் கதாநாயகன்' என்ற அங்கீகாரத்திற்காக டாக்டர் பட்டம் வழங்குகிறது.

ஏப்ரல் 2019
அமெரிக்காவின் கலிபோர்னியாவில் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக சித்திரவதைக்கு ஆளானோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இரண்டு சிவில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. [197]

16 நவம்பர் 2019
இலங்கையின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

---

190 விஜெஜவீர கொல்லப்பட்ட திகதி. ஜே.வி.பி யின் இரண்டாவது கிளர்ச்சி முடிவடையும்வரை மாத்தளை மாவட்ட பாதுகாப்புப் படைகளின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக கோத்தபாய செயற்பட்டார். *Gota's War*, p177

191 https://alt.army.lk/gajabaregiment/1-gajaba-regiment. Online official Biography says 1983-1990.

192 ஜெனரல் கொப்பேகடுவா என்னையும் சரத்பொன்சேகாவையும் வவுனியாவுக்கு அழைத்து எங்களது இரு பற்றாலியன்களும் சண்டையைத் தொடங்கவேண்டியிருக்கும் என்று சொன்னார்'

1990 யாழ்ப்பாண கோட்டை:

1990 இல் நடந்த யாழ்ப்பாண கோட்டைச் சண்டையில் இன்றைய இராணுவத் தலைப்பதவிகளில் உள்ளவர்கள் எவ்வாறு சண்டையிட்டார்கள் என்பதை கமால் குணரத்தினவின் சுயசரிதை விபரிக்கிறது. கோத்தபாய ராஜபக்ச, அவருக்கு அடுத்த நிலையிலிருந்த சுமேத பேரேரா(கஜபா றெஜிமென்ட்), கொம்பனி கட்டளையதிகாரிகள் உதய பெரேரா (கஜபா றெஜிமென்ட்) மற்றும் சவேந்திர சில்வா (கஜபா றெஜிமென்ட்) ஆகியோர் இதில் உள்ளடங்கும்.

யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக இராணுவ நீதிமன்றில் நிறுத்தப்படலாம் என்று பயந்தே கோத்தபாட இராணுவத்தை விட்டு விலகியதாக 2019 இல் நடந்த தேர்தல் பிரச்சாரத்தின்போது சரத்பொன்சேகா குற்றஞ்சாட்டினார்:

"சண்டை நடந்தபோது, யாழ்ப்பாண கோட்டையை விடுவிப்பதற்கான நடவடிக்கையின் நானும் கோத்தபாயவும் ஒன்றாகச் சென்றோம். சண்டையின் பின்னர் நடந்த சம்பவங்கள் காரணமாக, அப்போதைய பிரதிப்பாதுகாப்புச் செயலர் ரஞ்ஜன் விஜெரத்தினா கோத்தபாய ராஜபக்சவை இராணுவ நீதிமன்றில் நிறுத்துவதற்குத் தீர்மானித்தார். பின்னர் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மகிந்த ராஜபக்சவும் கோத்தபாய ராஜபக்சவும் ரஞ்ஜன் விஜெரத்தினவிடம் சென்று, அவரை இராணுவ நீதிமன்றத்திற்குக் கொண்டுசெல்லவேண்டாம் என்றும், இராணுவத்தை விட்டு விலகுவதற்கு அனுமதிக்கவேண்டும் என்றும் வேண்டினார்கள். ஜெனரல் ரஞ்சன் விஜெரத்தின அதற்கு அனுமதி வழங்கினார். இந்த உண்மையைச் செல்வதற்கு வெட்கப்பட்டு அவர் கூறுகின்றார், தனிப்பட்ட காரணங்களுக்காக இராணுவத்தை விட்டு வெளியேறியதாக".

http://www.dinamina.lk/2019/10/21/%E0%B6%B4%E0%B7%94%E0%B7%80%E0%B6%AD%E0%B7%8A/82709/%E0%B6%BA%E0%B7%94%E0%B6%AF-%E0%B6%B6%E0%B7%92%E0%B6%B8%E0%B6%A7-%E0%B7%80%E0%B6%A9%E0%B7%8F-%E0%B7%80%E0%B7%90%E0%B6%A9%E0%B7%92-%E0%B6%9A%E0%B7%8F%E0%B6%BD%E0%B6%BA%E0%B6%9A%E0%B7%8A-%E0%B6%9C%E0%B7%9D%E0%B6%A8%E0%B7%8F%E0%B6%B7%E0%B6%BA-%E0%B6%9C%E0%B6%AD-%E0%B6%9A%E0%B7%85%E0%B7%9A-%E0%B6%9A%E0%B7%9C%E0%B7%85%E0%B6%B9%E0%B6%BA%E0%B7%92

21 October 2019 Dinamina.

193 Sunday, 30 June 2013, Ayoma wins the day, The Island, *War on terror revisited : Part 151.

194 Sunday, 30 June 2013, Ayoma wins the day, The Island, *War on terror revisited : Part 151.

195 Sunday, 30 June 2013, Ayoma wins the day, The Island, *War on terror revisited : Part 151.

https://twitter.com/siwura/status/1392659635157360646/photo/1

196 https://www.theregister.com/2019/11/18/ex_unix_sysadmin_elected_president_sri_lanka/

197 https://itjpsl.com/reports/gotabaya-rajapaksa-complaint

https://cja.org/what-we-do/litigation/wickrematunge-v-rajapaksa/

பின்னிணைப்பு 2 :
மாத்தளை மாவட்டத்தில் காணாமற்போனோர் பட்டியல்



FINAL REPORT OF THE COMMISSION OF INQUIRY INTO THE INVOLUNTARY REMOVAL OR DISAPPEARANCES OF PERSONS IN THE CENTRAL, NORTH WESTERN, NORTH CENTRAL AND UVA PROVINCES

PART II

NO.	FILE NO.	COMPLAINT'S NAME	NAME OF MISSING PERSON	DATE OF DIS-APPEARED	PLACE
67.	UVA/MON/0519*	JAYAWARDENA BANDARA DM	WIJEWARDENA DM	16/12/88	MONERAGALA
68.	UVA/MON/0521*	LEELAWATHIE LA	ANANDA RM	04/01/90	MONERAGALA
69.	UVA/MON/0542*	MARATUGODA SCSWKBI	NANAYAKKARA GS	25/12/88	BIBILE
69A.	UVA/MON/0544	UDAYAPALA AM	CANCELLED		BIBILE
70.	UVA/MON/0552*	HEENBANDA WM	ARIYASENA WM	24/10/90	BUTTALA
71.	UVA/MON/0558*	NANDORIS PR	JAYANANDA PR	14/01/89	SIYAMBALANDUWA
72.	UVA/MON/0566*	REV. NANDASARA THISSA THERO B	REV. DHAMMIKA M THERO	16/09/89	MAHAGAMA
73.	UVA/MON/0574*	PIYASENA RM	CHANDRASEKARA RM	07/11/89	BADALKUMBURA
74.	UVA/MON/0583*	DINGI APPY GA	REV. DHAMMIKA THERO D	12/10/89	TANAMAWILA
75.	UVA/MON/0585*	DHANAWATHIE WM	SAMARAPALA KB	/ /89	WELLAWAYA
76.	UVA/MON/0587*	SRIYANI HM	GUNAPALA GH	08/11/90	BUTTALA
77.	UVA/MON/0603*	GUNAWARDENA WA	GUNASENA WA	26/08/89	TANAMALWILA
78.	UVA/MON/0617*	CHANDRIKA DKU	SIRIPALA AU	13/01/89	SIYAMBALANDUWA
79.	UVA/MON/0618*	SEELAWATHIE DR	GUNADASA RPSN	07/02/90	MONERAGALA
80.	UVA/MON/0619*	JAMES GG	SIMON GG	13/08/89	HASALAKA
81.	UVA/MON/0620*	SEELAWATHIE DR	GUNADASA RPSN	07/02/90	MONERAGALA
82.	UVA/MON/0634*	MALLIKA RM	GUNAPALA DM	07/09/89	SIYAMBALANDUWA
83.	UVA/MON/0635*	JAYASINGHE N	GUNAWARDENA RM	27/08/89	SIYAMBALANDUWA
84.	UVA/MON/0642*	HEENMENIKE AM	WIJERATNE WM	14/06/89	SIYAMBALANDUWA
85.	UVA/MON/0646*	CHANDRALATHA W	KARUNARATNE HKA	/ /	SEWANAGALA
86.	UVA/MON/0648*	DHANAPALA P	SILVA P	/ /	MONERAGALA
87.	UVA/MON/0655*	SIRIYAWATHIE PG	ATTANAYAKE S	20/06/90	BUTTALA
88.	UVA/MON/0666*	WIJESEKARA KAA	SARATH KUMARA KP	/ /	WELLAWAYA
89.	UVA/MON/0667*	WIJESEKARA KAA	PREMARATNE KA	/ /	WELLAWAYA
90.	UVA/MON/0689*	ADHARASAMY AP	RANASINGHE APW	27/06/89	BUTTALA
91.	UVA/MON/0695*	JAYATHUNGA K	SAMANTHISSA HNRU	/ /	WELLAWAYA
92.	UVA/MON/0704*	SIRIYAWATHIE WA	DHARMADASA JK	06/06/94	TANAMALWILA
93.	UVA/MON/0705*	KARUNAWATHIE MP	ANDRIAS G	09/10/89	KIRIBBAWEWA
94.	UVA/MON/0718*	LEELAWATHIE LA	ANANDA RM	04/01/89	MONERAGALA
95.	UVA/MON/0731*	NANDORIS PR	JAYANANDA PR	14/01/89	SIYAMBALANDUWA
96.	UVA/MON/0740*	WIMALAWATHIE SH	PREMACHANDRA HAPN	02/02/90	WEHERAYAYA
97.	UVA/MON/0744*	PIYADASA LA	SUNIL SHANTHA LA	22/01/90	WELLAWAYA
98.	UVA/MON/0747*	BANDARAMENIKE WM	DHARMADASA WM	26/02/90	TANAMALWILA
99.	UVA/MON/0752*	DAYAWATHIE VG	ANANDA MG	25/11/89	TANAMALWILA
100.	UVA/MON/0756*	RANKOTHDIWELA LH	GUNASENA WA	04/09/89	ETHILIWEWA
101	UVA/MON/0763*	KUMUDINI WMS	WIJESIRI TM	31/05/90	WELLAWAYA
102.	UVA/MON/0766*	AMARAWATHIE KGA	JAYASENA RG	09/11/90	HANDAPANAGALA
103.	UVA/MON/0771*	SISILIYAWATHIE UD	DIAS DM	03/01/90	WELLAWAYA
104.	UVA/MON/0775*	THILAKASIRI BANDA RM	THILAKASIRI BANDA RM (REMOVAL)	26/02/90	WELLAWAYA
105.	UVA/MON/0777*	ARACHCHI A	AMARARATNE DGR	31/05/89	HANDAPANAGALA
106.	UVA/MON/0778*	EMONA ML	BANDULA GA	15/10/89	WELLAWAYA
107.	UVA/MON/0789*	PREMAWATHIE WM	SENEVIRATNE VM	26/02/90	TANAMALWILA
108.	UVA/MON/0794*	SRIYAWATHIE RD	HEEN JAMIS HA	12/04/89	WELLAWAYA
109.	UVA/MON/0795*	PODINONA KM	GNANADASA WM	20/11/89	WELLAWAYA
110.	UVA/MON/0797*	WEERASINGHE S	JAYAWICKRAMA WA	16/02/89	WELLAWAYA
111.	UVA/MON/0802*	LEELAWATHIE RM	DHANAPALA RM	22/09/90	BUTTALA
112.	UVA/MON/0809*	PERERA C	SUNIL PG	12/06/88	SELLA KATARAGAMA
113.	UVA/MON/0815*	HEWANATENNA K	GUNAPALA HA	30/11/88	BUTTALA
114.	UVA/MON/0821*	BANDARA MENIKE KM	PRIYANTHA KUMARA WM	22/03/90	BUTTALA
115.	UVA/MON/0825*	DISSANAYAKE M	APPUHAMY DM	24/10/89	SIYAMBALANDUWA
116.	UVA/MON/0825*	SURASENA JB	WIJESIRI JB	25/10/90	TANAMALWILA
117.	UVA/MON/0837*	RAMMENIKE RM	WIMALASENA JR	26/09/89	TANAMALWILA
118.	UVA/MON/0840*	DINGIHAMY R	PREMADASA R	/07/89	TANAMALWILA
119.	UVA/MON/0849*	SEELAWATHIE DM	IMBULPITIYA KGA	20/09/89	BIBILE
120.	UVA/MON/0851*	SOMAWATHIE DM	UBHAYASENA AMS	03/03/89	BIBILE
121.	UVA/MON/0864*	RANATUNGA KD	RANATUNGA KD (REMOVAL)	15/10/89	BIBILE
122.	UVA/MON/0869*	SIRIYAWATHIE KHN	BANDARA RB	12/02/90	BIBILE
123.	UVA/MON/0872*	INDRAWATHIE RM	WIJERATNE MK	10/10/89	BIBILE
124.	UVA/MON/0873*	BANDARA MENIKE HM	RATNASIRI DM	22/10/89	BIBILE
125.	UVA/MON/0874*	RUPAWATHIE DHM	PERERA DD	15/05/89	BIBILE
126.	UVA/MON/0876*	PUNCHIBANDA KM	KIRIBANDA KM	14/06/89	DHAMBAGALLA
127.	UVA/MON/0883*	DISSANAYAKE DMKR	DISSANAYAKE DMKR (REMOVAL)	21/11/89	BIBILE
128.	UVA/MON/0886*	PUNCHINA A	PIERIS R	28/09/89	SEWANAGALA
129.	UVA/MON/0891*	GUNAWARDENA BANDARA KL	GUNAWARDNA BANDARA KL (REMOVAL)	/ /91	BIBILE
130.	UVA/MON/0893*	JAMIS HA	JINASENA HA	16/01/90	UVA KUDAOYA
131.	UVA/MON/0894*	WIMALAWATHIE BH	RAJAPAKSHA S	04/09/89	NOT KNOWN
132.	UVA/MON/0897*	CHANDRASEKARA HGA	JAYARATNE HGP	13/11/90	BUTTALA
133.	UVA/MON/0899*	JAYAWARDENA BANDARA DM	PUNCHIBANDA DM	08/12/88	MONERAGALA

PRESIDENTIAL COMMISSION OF INQUIRY INTO INVOLUNTARY REMOVALS OR DISAPPEARANCES OF PERSONS (CENTRAL ZONE)

LIST OF PENDING COMPLAINTS (FILE NO. ORDER)

CENTRAL PROVINCE - MATALE DISTRICT

S.NO.	FILE NO.	COMPLAINT'S NAME	NAME OF MISSING PERSON	DATE OF DISA-PPEARANCE	PLACE
1.	CEN/MTL/0001*	RAMBANDA EM	SUBRAKUMARA EM	19/11/89	GURUWELE
2.	CEN/MTL/0003*	KARUNARATNE RAI	RAJAPAKSHA RC	09/11/90	KIRIBARUWA
3.	CEN/MTL/0004*	KARUNARATNE RAIS	WIJETHILAKE BANDA EMW	09/11/90	AKURAMBODA
4.	CEN/MTL/0005*	GUNAWATHIE RD	GUNADASA PG	19/09/89	NAGAHAPOLA
5.	CEN/MTL/0006*	BANDARANAYAKE E	BANDARANAYAKE BMRRG	27/07/89	MAHANWATTE
6.	CEN/MTL/0007*	DOMARATNE PL	SISIRA PL	23/09/89	ARANGALA
7.	CEN/MTL/0008*	CHANDRALATHA R	SENEVIRATNE RN	22/10/89	LINNIPITIYA
8.	CEN/MTL/0009*	THAMERA KUMARI WM	DHARMADASA KMGG	26/12/89	KAHAGALA
9.	CEN/MTL/0010*	JINADASA BG	PEMARATNE UG	13/09/89	KITHULHITIYAWA
10.	CEN/MTL/0011*	SOMALATHA AGN	WEERASENA AG	22/12/89	BHALADIGGALE
11.	CEN/MTL/0012*	WIMALAWATHIE PG	RANKIRA IG	07/12/89	BALAGATHWATTE
12.	CEN/MTL/0013*	PUNCHIBANDA RR	DASANAYAKE RBG	26/12/89	TALAKIRIYAGAMA
13.	CEN/MTL/0014*	PUNCHIBANDA AG	NAVARATNE BANDA AG	26/12/89	TALAKIRIYAGAMA
14.	CEN/MTL/0015*	BANDARA HMK	BANDARA HMC	22/08/89	MADAWALALULPOTHA
15.	CEN/MTL/0016*	SUMANAWATHIE S	JINADASA NG	21/10/89	KIVULA
16.	CEN/MTL/0017*	KARUNAWATHIE HMU	THILAKARATNE HM	24/12/96	KARAWILA HENA
17.	CEN/MTL/0018*	LIYANAGE RH	DHANAPALA AG	20/11/89	RAWENAGAMA
18.	CEN/MTL/0020*	SENEVIRATNE MG	LOKUBANDA MG	20/12/89	LEDIYANGALA
19.	CEN/MTL/0021*	SUMANAWATHIE MG	DHARMADASA KG	31/10/89	LEDIYANGALA
20.	CEN/MTL/0022*	BANDARAMENIKE AG	TIKIRIBANDA AG	31/10/89	DEVEGIRIYA
21.	CEN/MTL/0023*	NANDAWATHIE MENIKE AM	KARUNARATNE WK	31/10/89	GABURUOYA
22.	CEN/MTL/0024*	NANDAWATHIE MENIKE AM	JAYATISSA VP	31/10/89	GABURUOYA
23.	CEN/MTL/0025*	RANI KG	SUMATHIWEERA RWG	31/10/89	LEDIYANGALA
24.	CEN/MTL/0026*	KAPILARATNE PG	NAWARATNE TG	16/10/89	HATTOTA AMUNA
25.	CEN/MTL/0027*	EKANAYAKE PGP	HEEN BANDA PG	/ /	MARAKA
26.	CEN/MTL/0028*	PUNCHIBANDA PG	PUNCHIBANDA PG (REMOVAL)	/ /	MARAKA
27.	CEN/MTL/0029*	SOMAWATHIE IG	WANASINGHE LB	14/09/89	TALAKIRIYAGAMA
28.	CEN/MTL/0030*	JAYARATNE S	JAYASINGHE NW	25/08/90	HANDUNGAMUWA
29.	CEN/MTL/0034*	KARUNARATNE HM	WIJERATNE HM	17/06/89	GALEWELA
30.	CEN/MTL/0037*	KARUNARATNE HM	GUNAWARDENA HM	17/06/89	GALEWELA
31.	CEN/MTL/0038*	KARUNARATNE HM	RANTHILAKE HM	17/06/89	GALEWELA
32.	CEN/MTL/0039*	KARUNARATNE HM	PODISURIYA HM	17/06/89	GALEWELA
33.	CEN/MTL/0041*	ABARANA APPU DG	SIYADORIS DG	19/11/89	LAGGALA
34.	CEN/MTL/0042*	PUNCHIAPPU DV	SRINATH DVP	11/07/89	NALANDA
35.	CEN/MTL/0051*	HEENBANDA RM	DISSANAYAKE RMRU	05/06/90	DAMBULLA
36.	CEN/MTL/0052*	WIJERATNE CDM	BANDARA RMRB	26/10/89	MAHAKOTTE
37.	CEN/MTL/0054*	PIYASEKARA AG	ATTANAYAKE AGR	10/12/89	WAHIGALA
38.	CEN/MTL/0055*	DISSANAYAKE MR	DISSANAYAKE MRKB	09/10/89	DAMBULLA
39.	CEN/MTL/0056*	NAWARATNE PGR	NAWARATNE PGRG	03/12/89	WAHAKOTTE
40.	CEN/MTL/0057*	BISOMENIKE AG	DAHANAYAKE WGG	14/11/89	KAPUWATTA
41.	CEN/MTL/0058*	LOKUBANDA UKG	SAMARADIVAKARA UKG	14/01/89	MATALE
42.	CEN/MTL/0060*	DARMALINGAM SM	PATHIBAN D	26/06/90	MATALE
43.	CEN/MTL/0071*	BALARATNE KGS	DHARMARATNE KGTS	/ /	WAWELE
44.	CEN/MTL/0075*	CHANDRAKANTHIE PGS	ABEYKUMARA BGP	26/01/90	PALLEPOLA
45.	CEN/MTL/0077*	DHARMALINGAM SM	PATHIBAN D	26/06/90	MATALE
46.	CEN/MTL/0079*	CHRISTIANAPPU MD	WIJERATNE MDS	03/12/89	MALAWAMUKALANE
47.	CEN/MTL/0080*	HERATH MENIKE LRG	HITIBANDA LRG	20/08/89	MADAPEHILLE
48.	CEN/MTL/0081*	PIYASEELI BW	MAITHRIPALA BW	20/12/89	VALIMENA
49.	CEN/MTL/0082*	PIYASEELI BW	ABEYSEELI BW	14/12/89	UDAGAMA
50.	CEN/MTL/0083*	PIYASEELI BW	DHARMABANDU BW	/ /	UDAGAMA
51.	CEN/MTL/0084*	RAJAKARUNA ADG	RAJAPATHIRANA ADG	28/11/89	UDAGAMA
52.	CEN/MTL/0085*	HERNMENIKE GA	UKKUBANDA UGG	19/11/89	DANKANDA
53.	CEN/MTL/0086*	KAMALAWATHIE DP	WILLIAMSINGHO NV	28/10/89	UDAGAMA
54.	CEN/MTL/0087*	KIRIBANDA WM	BANDA WMK	07/10/89	PUBBILIYA
